# இராசேந்திரன்

## செய்திக்கோவை



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008

# இராசேந்திரன் செய்திக்கோவை

# இராசேந்திரன் செய்திக்கோவை


பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆணையர் (பொ)

ஆசிரியர்

**வெ. இராமமூர்த்தி,** எம்.ஏ., பி.எல்.,

மண்டல உதவி இயக்குநர்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

திருவள்ளுவர் ஆண்டு 2043

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| TITLE | : | **RAJENDRAN SEITHIKKOVAI** |
| Editor | : | **Dr. S. Vasanthi,** M.A., M.Phil., Ph.d.<br>Commissioner Incharge |
| Author | : | **V. Ramamurthi** M.A., B.L., |
| Copy Right | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 260 |
| Year | : | 2012 |
| No. of Copies | : | 500 |
| Type Point | : | 10 |
| No. of Pages | : | 110 |
| Paper Used | : | 80Gsm Maplitho |
| Printer | : | The Then Chennai District Printing Workers Industrial Co-operative Society limited, Industrial Printing. & Stationery Allied Products, 5/2, Koya Arunagiri 1st street, Royapettah, Chennai-600 014. |
| Publisher | : | State Dept. of Archaeology, Tamil Valarchi Vallagam, Halls Road, Egmore, Chennai - 600 008. |
| Price | : | Rs. 83.00 |

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.
ஆணையர் (பொ)

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008
நாள்: 21-12-2012

# பதிப்புரை

இராசேந்திர சோழனின் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து சிறிய நூல் வடிவில் வெளியிடலாம் என்றும், அது ஆய்வு மாணவர்களுக்கும், அறிஞர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்ற நோக்கில் வெளிவருவது தான் இந்நூல்.

இதனை வெளியிட இசைந்த மாண்புமிகு நம் தமிழக முதல்வர் அவர்கட்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கட்கும், நம் துறையின் முதன்மைச் செயலர் அவர்கட்கும் முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலினை உருவாக்கும் பொறுப்பை நம் துறையின் கோவை மண்டல உதவி இயக்குநர் திரு. வெ. இராமமூர்த்தி அவர்களிடம் அளித்தேன். அதனை உரிய நேரத்தில் வெளிக்கொணர்ந்திட உதவிய அவருக்கும் வாழ்த்துக்கூற கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலில் இராசேந்திர சோழன் குறித்தும், சோழர்கள் குறித்தும் தொகுத்து அளித்துள்ளார். இவற்றில் அறுவடைத் திருநாள் - புதியீடு

என்றும், திருவண்ணாமலை தீபமும் இராசேந்திரனும், ஊர்ச் சபையினர் அமர்ந்து பேசும் மரம், கங்கை நீர் கொணர்ந்த படைத்தலைவன், இராசேந்திர சோழனின் பணிப்பெண் (சமையல்காரி) "சோழகுல வல்லி", முதலாம் இராசேந்திரனும் கஜினிமுகமதுவும் போன்ற செய்திகள் படித்து மகிழும் வண்ணம் உள்ளன. மேலும் இந்நூலை உரிய நேரத்தில் அச்சிட்டு தந்த அச்சகத்தாருக்கும் நல்வாழ்த்து.

சீ. வசந்தி

(சீ. வசந்தி)

# என்னுரை

**க**டல் கடந்து கப்பற்படை நடத்தி, கடாரம் வென்று, கங்கைநீர்கைக் கொணர்ந்து, கங்கைகொண்ட சோழப் பேரேரிதனை உருவாக்கி எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கும், கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில் அமைத்து வரலாற்றில் நிலைபெற்ற மன்னர் முதலாம் இராசேந்திரனின் தலைநகராம் கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெறும் கண்காட்சி திறப்பு விழாவின் போது மன்னரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை தொகுத்து நூல் வடிவில் வெளியிட ஆர்வம் காட்டி அதற்குரிய அனுமதியை பெற்று அந்நூலினை வெளியிட எமக்கு அனுமதி அளித்து உதவிய எம் துறையின் ஆணையர் (பொறுப்பு) முனைவர் சீ.வசந்தி அவர்கட்கு முதற்கண் நன்றி உரித்தாகும். மேலும் இந்நூல் வெளிவர அனுமதி அளித்த எம் துறையின் முதன்மைச் செயலர் அவர்கட்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கட்கும், அனைத்திற்கும் மேலாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை நல்கி மகிழ்கிறேன்.

இந்நூலினை வெளியிடும் நோக்கத்தில் உரிய சான்றுகளையும், நூல்களையும் தேடும்போது பல்லாற்றானும் எனக்கு உதவியாக இருந்து உரிய நூற்பட்டியல்களின் விபரங்களை வழங்கிட்ட எம் அன்பு நண்பர், நம் துறையின் முன்னாள் பதிவு அலுவலர் திருமிகு பொ.இராசேந்திரன் அவர்களுக்கும், இக்குறிப்புகளையும், என் தொகுப்புகளையும் ஆய்ந்து எனக்கு வழிகாட்டி உதவிய எம் துறையின் முன்னாள் பதிவு அலுவலர் முனைவர் சு.இராசகோபால் அவர்களுக்கும், முனைவர் இரா.பூங்குன்றன் அவர்களுக்கும் என் உளம்கனிந்த நன்றி.

கொங்கு வரலாறு குறித்த செய்திகள் வேண்டும் என விழைந்தபோது உடன் உரிய நூல்களை தந்து உதவிய நண்பர், நமது துறையின் முனைவர் பட்ட ஆய்வாளர் திரு இரா.செகதீசன் அவர்களுக்கும்,

மேலும் பிழைத்திருத்தம் செய்து உதவிய நம் துறையின் முன்னாள் கல்வெட்டு ஆய்வு மாணவர் திரு பொ.கோ. லோகநாதன், நம் துறையின் முனைவர் பட்ட ஆய்வு மாணவி கோ. சசிகலா ஆகியோருக்கும் என் உளம்கனிந்த நன்றியும், வாழ்த்தும் கூற மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலுக்குரிய முகப்பு அட்டையினை அழகுற வடிவமைத்து உரிய நிழற்படங்களை அளித்து உதவிய நம் துறையின் முன்னாள் நிழற்படக்காரர் திரு மு.த. ஸ்ரீதரன் அவர்களுக்கும், நூலகர் எஸ். செல்வக்குமரன் அவர்களுக்கும், உரிய கணினி தட்டச்சு செய்து தந்த அச்சுக்கோர்ப்பாளர் திரு மு.சக்திவேல், திருமதி ர. உமாதேவி மற்றும் திரு எஸ். சுப்பிரமணி அவர்களுக்கும், இன்னும் பல வழிகளில் ஆக்கமும், ஊக்கமும், உதவியும் செய்த எம் துறை அலுவலர்கள் தொல்லியல் இரசாயனர் திரு மு.சு. அசோக்தீன், உதவி செயற் பொறியாளர் திரு த. தங்கவேல், முதுநிலை ஸ்தபதி திரு ம. அருண் மற்றும் தொல்லியல் துறை அலுவலர்கள் அனைவருக்கும் என் இதயபூர்வமான நன்றியினை நவிலக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலினை உரிய காலத்திற்குள் அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் என் நன்றி.

அன்பன்,

(வெ.இராமமூர்த்தி)

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | |
| என்னுரை | |
| 1. இராசேந்திரன் செய்திக்கோவை | |
| இராசேந்திர சோழன் | 1 |
| இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி | 6 |
| இராசேந்திர சோழனின் படையெடுப்புகள் | 9 |
| கங்கைகொண்ட சோழீச்சுரம் | 22 |
| கருவூர்த்தேவர் | 28 |
| இராசேந்திர சோழன் காலக் கோயில்கள் | 30 |
| இராசேந்திர சோழன் காலத்து கங்கைகொண்டசோழபுரம் | 33 |
| இராசேந்திர சோழனின் செப்பேடுகள் | 38 |
| 2. சோழர் செய்திக்கோவை | |
| சோழர் குடிவழி | 51 |
| சோழர் மெய்க்கீர்த்திகளின் தொடக்கம் | 52 |
| சோழர்காலச் செப்பேடுகள் | 55 |
| சோழர்காலத்துப் போர்க்களங்கள் | 57 |
| சோழர் கால உழவும் வருவாயும் | 58 |
| சோழர்காலக் கோயில்கள் | 72 |
| சோழர்காலப் புலவர்களும், இலக்கியங்களும் | 76 |
| 3. கலிங்கத்துப் பரணியில் சோழர் மரபுவழி | 78 |
| 4. விக்கிரம சோழன் உலாவில் சோழர் மரபுவழி | 81 |
| 5. எடுத்தாண்ட நூல்கள் | 87 |
| 6. நிழற்படங்கள் | 89 |

# இராசேந்திரன்

## செய்திக் கோவை

---

### இராசேந்திர சோழன்

| | | |
|---|---|---|
| தந்தை | : | இராசராச சோழன் |
| தாய் | : | திரிபுவன மாதேவி என வழங்கும் வானவன் மாதேவி |
| பிறப்பு | : | மார்கழித்திங்கள் திருவாதிரை நாள் |
| இயற்பெயர் | : | மதுராந்தகன் |
| பட்டப்பெயர் | : | இராசேந்திரன் |
| ஆட்சிக்காலம் | : | கி.பி. 1012-1044 |
| மறைவு | : | கி.பி. 1044 |

### இராசேந்திர சோழன் ஆட்சிக்கு வந்த ஆண்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருப்பலாத்துறையில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு இராசேந்திர சோழனின் 'திருமன்னி வளர' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி "கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு 5-ஆவது . . . . இவ்வாண்டு மேஷ நாயற்று செவ்வாய்க்கிழமை பெற்ற சதையத்தின் நாள்"என்ற வாசகத்தைப் பெற்றுள்ளது.

இதனின் வரும் ஐந்தாம் ஆண்டு சித்திரை மாதம் (மேஷ நாயறு) செவ்வாய்க் கிழமை, நட்சத்திரமான சதையம் ஆகிய பஞ்சாங்கக் குறிப்புகளைக் கணக்கிட்டு இராசேந்திரன் ஆட்சித் தொடக்க முதல்ஆண்டு ஏறத்தாழ மார்ச் மாதம் 1012 என்று கணக்கிட்டுள்ளனர்.

மேலும் தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள இரண்டாவது கோபுரக் கல்வெட்டைக் கொண்டும் இதனை உறுதிப்படுத்தலாம். இக்கல்வெட்டு இராசராசசோழனின் 29-ஆவது ஆண்டைக் குறிப்பிடுகிறது. எனவே இதன்

காலம் அவனது இறுதி ஆண்டான கி.பி. 1014 ஆகும். இக்கல்வெட்டில் ஸ்தூபிக் குடங்கள் கொடுக்கப்பட்ட கொடைகள் சொல்லப்படுகின்றன. இதே கல்வெட்டின் தொடர்ச்சியாக இராசேந்திர சோழனின் 2-ஆவது மூன்றாவது ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட கொடைகளும் குறிக்கப்படுகின்றன. எனவே முதல் ஆண்டு 1012-இல் தொடங்கியிருக்க வேண்டும் என்று கருதலாம்.

இந்த ஆண்டில் இராசேந்திரன் தந்தை உயிரோடு இருந்ததால் இளவரசு பட்டம் பெற்றிருக்கவேண்டும் என்றும் பிறகு 2 ஆண்டுகள் சென்று தந்தை இறந்ததும் (1014) பேரரசு பட்டம் சூட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனினும் அவன் தனது ஆட்சி ஆண்டை 1012- லிருந்தே கணக்கிட்டுள்ளான் என்று தெரிகிறது.

| | |
|---|---|
| இளவரசு பட்டம் | 1012 |
| பேரரசு பட்டம் | 1014 |
| ஆட்சியாண்டு தொடக்கம் | 1012 |

## ஆட்சிக்காலம்

இராசேந்திர சோழன் 1012 மார்ச்சு 27, ஜுலை 7-க்கு இடையில் முடிசூட்டப்பட்டான் என்று பஞ்சாங்கக் குறிப்புகள் கொண்டு கணித்துள்ளனர். இவன் இராசராச சோழனுடன் இணைந்து நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்து பிறகு தனியாட்சி நடத்தியுள்ளான். 1044 வரை இவனது ஆட்சி மொத்தம் 32 ஆண்டுகள் சிறப்புற விளங்கியது.

## பெற்றோர்

இராசராசனுக்குப் பல மனைவியர் இருந்தனர் உலோகமாதேவி பட்டத்தரசி. இராசேந்திரசோழன் திருபுவனமாதேவி என்ற வானவன் மாதேவிக்குப் பிறந்தவன். இவள் சேர குலத்தைச் சேர்ந்தவள். உலோகமாதேவிக்கு குழந்தைகள் இல்லாததாலோ அல்லது இராசேந்திரனின் சிறப்பு காரணமாகவோ அவன் அரசு பட்டம் பெற்றிருக்கக் கூடும்.

## பிறந்த நட்சத்திரம்

மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திர நாளில் இராசேந்திர சோழன் பிறந்தான். இதன் காரணமாகத் திருவொற்றியூர், விருத்தாசலம் முதலிய கோயில் கல்வெட்டுகளில், அக்கோயில்களில் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்ட செய்திகள் உள்ளன. திருவொற்றியூர்க் கல்வெட்டு அவன் பிறந்தநாளில்

நெய் அபிஷேகம் ஏற்பாடு செய்யப்பட்டதைப் பின்வருமாறு சொல்கிறது. "திருவொற்றியூருடைய மகாதேவர்க்கு உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழர் திருநாள் மார்கழித் திருவாதிரை நாளன்று நெய்யாடியருள வேண்டு மிசத்துக்குத் திருவொற்றியூர் திருமயானமும் மடமுடைய சதுரானன பண்டிதன் தேவர் பண்டாரத்து வைத்த காசு நூற்றைம்பது" இவன் மிக அழகிய உருவமுடையவன். திருவாலங்காடு செப்பேடு இவனைக் காமன் என்றும் ஆனால் சிவபெருமானின் நெற்றிக்கண் காணாதவன் என்றும் குறிப்பிடுகிறது.

## பெயரும் பட்டமும்

இராசேந்திர சோழனது இயற்பெயர் மதுராந்தகன் என்பதாகும். தந்தை இராசராசன் தனது சிறிய தந்தை உத்தம சோழனிடம் கொண்டிருந்த பற்றுக் காரணமாக அவரது மதுராந்தகன் என்ற பெயரைத் தனது மகன் இராசேந்திரனுக்கு வைத்தார் என்று கூறுவர். மதுராந்தகன் என்பதன் பொருள் மதுரைக்கு அந்தகன்-எமன் என்பதாகும். இவன் அரியணை ஏறிய போது இடப்பட்ட பெயர் இராசேந்திரன் என்பதாகும். சோழ மன்னர்கள் பரகேசரி, ராஜகேசரி என்று மாறிமாறி பெயர் வைத்துக் கொள்வதற்கு ஏற்ப இராசேந்திரன் பரகேசரி என்ற பட்டப்பெயர் தரித்தான். பரகேசரி என்பது பிற அரசர்கள் அல்லது பகைவருக்குச் சிங்கம் என்பதாகும். கல்வெட்டுகளில் இவன் பெயர் முன்னதாகக் 'கோப்பரகேசரி' என்ற இந்த மரபுப் பட்டத்தைக் காணலாம்.

## பிற பெயர்கள்

இவன் இளவரசனாக இருந்து மேலைச் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்த போது 'நூர்மாடி சோழ இராசேந்திரவித்யாதரன்' என்றும் 'சோழகுல அணி' என்று வர்ணிக்கப்படுகின்றான். கங்கநாடு மற்றும் வேங்கிநாடு கலிங்கம் ஆகியவற்றின் மீது படையெடுத்த போது இவன் தளபதியாக இருந்ததால் மகாதண்ட நாயகன் பஞ்சவன் மாராயன் என்று பெயர் பெற்றிருந்தான். சிறந்த அறிஞன் என்பதால் "பண்டித சோழன்" என்றும் அழைக்கப்பட்டான். கங்கை வெற்றிக் காரணமாக 'கங்கை கொண்டான்' என்றும் கடார வெற்றி காரணமாக 'கடாரம் கொண்டான்' என்றும் பல மாற்றரசர்களை வென்று அவர்களது முடிகளைக் கொண்டதால் "முடிகொண்ட சோழன்" என்றும் அழைக்கப்பட்டான். மேலும் "உத்தம சோழன்", சோழேந்திர சிங்கம் என்ற பெயர்களும் இவனுக்கு உண்டு. பெயற் பட்டியல் பின்வருமாறு:

1. வீரசோழன்
2. மதுராந்தகன்
3. மனுகுல சோழன்
4. அதிசய சோழன்
5. விக்ரம சோழன்
6. வீரராசேந்திரன்
7. நிருபதிவாகரன்
8. உதாரவிடங்கன்
9. பராக்கிரம சோழன்
10. பார்த்திவேந்திரன்
11. இராசராசேந்திரன்
12. தானவினோதரன்
13. பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன்
14. உத்தமசோழன்
15. பண்டித சோழன்
16. ஜயசிம்ம சரபன்
17. இராசவித்யாதரன்
18. சோழேந்திர சிம்மன்
19. மகிபால குல காலன்
20. முடிகொண்ட சோழன்
21. மலைநாடு கொண்டான்
22. கங்கைகொண்ட சோழன்
23. கடாரங்கொண்ட சோழன்
24. இரட்டபாடி கொண்ட சோழன்
25. மண்ணைக் கொண்ட சோழன்

## சீனக்குறிப்புகளில் பெயர் உச்சரிப்பு

சாங் வம்ச (Song dynasty) சீனக் குறிப்புகள் இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் ஆட்சிக் காலங்களில் சீன நாட்டிற்குச் சோழர் தூதுக் குழுக்கள் 1015, 1033, 1077 ஆகிய ஆண்டுகளில் வந்து சென்றமையைக் குறிப்பிடுகின்றன. அவற்றில் ராசராசன், ராசேந்திரன் பெயர்களும், சோழர் பெயரும் பின்வருமாறு உச்சரிப்பில் குறிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சோழர் | - | Chu- lien |
| ராஜராஜ | - | La- tsa - lo - tsa |
| ஸ்ரீராஜேந்திர சோழ | - | Shi- lo -lo - cha yin -to lo - chu - lo |

## இராசேந்திர சோழனின் மனைவியர்

1. முக்கோக்கிழானடிகள்
2. அரிந்தவன் மாதேவி
3. வானவன் மாதேவி (ஆகிய) திரிபுவனமாதேவி
4. வீரமாதேவி
5. பஞ்சவன் மாதேவி

## பரவை நங்கை

முதலாம் இராசேந்திர சோழனின் மனங்கவர்ந்த மங்கை, நங்கை பரவையாகும். அவளுடைய வேண்டுதலுக்கு ஏற்ப எடுக்கப்பெற்ற திருக்கோயில் திருவாரூர் திருக்கோயில் ஆகும். நங்கை பரவையின் வேண்டுகோளின் படி இங்கு ஒரு திருமண்டபமும் இராசேந்திரனின் மகன் இராசதிராசனால் எழுப்பப்பட்டது. அது நடராஜர் உள்ள சபாபதி மண்டபமாகும். பரவை நங்கை, இறுதி காலம் வரை தன்னை இக்கோயிலுக்கு அர்ப்பணித்துக்கொண்டாள். இவள் பெயரில் எண்ணாயிரம் என்ற ஊரில் பரவை ஈஸ்வரமுடையார் என்ற கோயில் இருந்த செய்தி இராசேந்திர சோழன் காலக் கல்வெட்டால் தெரியவருகிறது.

## இராசேந்திர சோழனின் பிள்ளைகள்

| பெண் மக்கள் | ஆண் மக்கள் | |
|---|---|---|
| 1. அருமொழிநங்கை | 1. இராசாதிராசன் | 2. இரண்டாம் இராசேந்திரன் |
| 2. அம்மங்கை | 3. இராசமகேந்திரன் | 4. வீரராசேந்திரன் |

## பள்ளிப்படையும் தண்ணீர்ப்பந்தலும்

இறந்தோர் நினைவாக அவர்கள் இறந்த இடத்தில் எழுப்பப்படும் கோயில்கள் பள்ளிப்படைக் கோயில்கள் எனப்பட்டன. இவ்வகைக் கோயில்கள் சோழர்காலத்தில் முதன் முதலாக எடுக்கப்பட்டன என்பர். 'ஆதித்த ஈஸ்வரம்', 'அறிஞ்சிகை ஈஸ்வரம்', 'பஞ்சவன் மாதேவி ஈஸ்வரம்' போன்றவை அவ்வகைக் கோயில்களாகும். இராசேந்திர சோழன் தனது ஆட்சியாண்டு 33-இல் (பொ.ஆ. 1044) இறந்த போது அவ்வகைக் கோயில் அவனுக்கும் தொண்டை மண்டலத்தில் உள்ள பிரம்மதேசம் என்ற ஊரில் எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென ஒரு கல்வெட்டின் மூலம் அறிகின்றோம்.

இவனது மனைவியரில் ஒருவரான வீரமாதேவி இராசேந்திரன் இறந்த போது தானும் உடன் உயிர் மாய்த்துக் கொண்டுள்ளாள். அவளது சகோதரனும் சேனாபதியுமான மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான் என்பவன் பிரம்மதேசத்தில் இவ்விருவர் ஆவிகளும் சாந்தியடைய தண்ணீர்ப்பந்தல் எடுத்ததை இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## ஆட்சிப்பரப்பு

இம்மன்னனது காலத்தில் சோழப் பெருநாடு சென்னை மாநிலம், மைசூர் மாநிலம், ஒரிசா மாநிலத்தின் தென்பகுதி, நிசாம் அரசின் பெரும்பகுதி, கேரளம், இலங்கை ஆகிய நாடுகள் அடங்கிய பெரும் பகுதியிலும் கடல் கடந்து ஈழம், கடாரம், நக்கவாரம், கிழக்கிந்திய தீவுகள் போன்ற கடல் கடந்த நாடுகளில் இவனது ஆட்சி எல்லை விரிந்திருந்தது.

## இராசேந்திரன் காசுகள்

இராசராசன் 11 வகையான காசுகள் வெளியிட்டு இருந்தான். இராசேந்திரன் காலத்தியது என்று கூறத்தக்க வகையில் 6 வகைக் காசுகள் கிடைத்துள்ளன. ஆந்திரமாநிலம் தவளேசுவரத்தில் கிடைத்துள்ள காசுக் குவியலில் உள்ள தங்க நாணயங்களில் கங்கை கொண்ட சோழன் என்று தமிழ் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டதும், முடிகொண்ட சோள என்று தமிழ் கிரந்த எழுத்தில் உள்ள தங்கக் காசும், யுத்தமல்ல என்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ள காசு இவன் காலத்தியதா? என்று ஐயப்பாடு உள்ளது. எனினும் அண்மையில் இத்தகைய காசு ஒன்றை தொல்லியளார் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து கண்டறிந்துள்ளனர். இம்மன்னனால் வெளியிடப்பட்ட காசுகளில் நான்கு வகைக் காசுகள் நாகரியிலும் இருவகைக் காசுகள் கிரந்த எழுத்திலும் உள்ளன.

## இராசேந்திரனின் முத்திரைச் சுலோகம்

இராசேந்திரனுடைய செப்பேடுகளைக் கோர்த்த வளையங்களில் மிக அழகான முத்திரைகள் இருப்பதைக் காணலாம். முத்திரையின் விளிம்பை ஒட்டி வட்டமாகச் சமஸ்கிருதச் சுலோகம் ஒன்று காணப்படும். அது இராசேந்திரசோழன் வெளியிட்ட சாசனம் என்பதைத் தெரிவிப்பதாகும். இதே சுலோகம் செப்பேடுகள் மட்டுமல்லாமல் சில கல்வெட்டுகளின் தொடக்கத்திலும் காணப்படும். ஆயிரத்தளி எனப்படும் பழையாறையில் மங்களாம்பிகை கோயிலில் காணப்படுவதை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். கிரந்த எழுத்தில் சமஸ்கிருத மொழியில் உள்ள சுலோகம் பின்வருமாறு:

ராஜாத்¨ ராஜந்ய மகுடச் }ரேணி ரத்நேஷுசாசநம் .
ஏதத் ராஜேந்த்¨ரசோளஸ்ய பரகேஸரி வர்ம்மண: . .

இதன் பொருள்: 'இது, மாற்றரசர்களின் மணிமுடிகள் பாதத்தை அணிசெய்கின்ற அளவு சிறப்புடைய பரகேசரி வர்மனாக ராசேந்திர சோழனுடைய சாசனம்' என்பதாகும்.

## இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி

திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவியராகி யின்புற
நெடிதிய லூழியு ளிடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்

சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப்பாக்கையும்
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகட லீழத் தரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவய ரோங்கெழின் முடியும்
முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த

சுந்தர முடியு மிந்திர னாரமும்
தெண்டிரை யீழ மண்டல முழுவதும்
எறிபடைக்கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்

தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவிற் சினவியிருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசுராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்

பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்த சயசிங்க னளப்பரும் புகழொடு
பீடிய லிரட்ட பாடி யேழரை
யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம விரர் சக்கரக் கோட்டமு

முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளைஇய நாமணைக் கோணமும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்லண் கீர்த்தி யாதிநக ராகவையிற்

சந்திரன் றொல்குலத் திந்திர ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டரஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் சேருநற் கோசல நாடும்

தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரணை முரணறத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்

தங்காத சாரல் வங்காளதேசமும்
தொடுகழற் சங்குகொடடல்மகி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண்டாரமும்

வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வர்ம
னாகிய கடாரத் தரசனை வாகையும்
பொருகடல் கும்பக் கரியோடு மகப்படுத்

துரிமையிற் பிறக்கிய பருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவ னகநர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சா திரத்தோரணமு மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமுங் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமுந் துறைநீர்ப் பண்ணையும்

வன்மலை யூரெயிற் றொன்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப் பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்

விளைப்பந் தூருடை வளைப்பந் தூரும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர் பல்வினை மாதமா லிங்கமும்
கலாமுதிர் கடந்திற லிலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மானக்க வாரமும்

தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு . . ."

இவனது மெய்க்கீர்த்தியில் அவ்வப்போது அவன் வெற்றிகண்ட நாடுகளுக்கேற்ப செய்திகள் மூன்றாம் ஆண்டு முதல் பதிமூன்றாம் ஆண்டு வரை கூடியுள்ளன. மேற்கண்ட மெய்க்கீர்த்தி இவனது பதிமூன்றாவது ஆண்டில் காணப்படும் மெய்க்கீர்த்தியாகும். இதன் பிறகு இவனது ஆட்சிக் காலம் முடிய நிலைப்பெற்றது. முதல் கட்டமாகத் தென்னக வெற்றிகளுக்கு அடுத்து வடஇந்திய வெற்றிகளும் அடுத்து கடல் கடந்த வெற்றிகளும் மெய்க்கீர்த்தியில் அடுத்தடுத்து கூடின.

## இராசேந்திர சோழனின் படையெடுப்புகள்

இராசேந்திர சோழனின் மிகத் தீவிரமான படையெடுப்புகள் பற்றி வெளிப்படையாக இரு காரணங்கள் கூறப்படுகின்றது. முதல் காரணம் அவனுடைய வெற்றிவெறி என்றும் மாற்றரசர்களை அடிபணியச் செய்வது என்றும் தனது ஆட்சிப் பரப்பை விரித்துக் கொள்வது என்று கருதப்படுகிறது. இரண்டாவது காரணம் பிறநாடுகளில் உள்ள செல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு வருவது என்றும் சொல்லப்படுகிறது.

எனினும் அதற்கப்பால் அடிப்படையான காரணம் அன்றைய காலச் சூழலில் நிலவிய வணிக முயற்சிகளே என்று சொல்லப்படுகிறது. பத்தாம் நூற்றாண்டு இறுதியில் மூன்று அரச வம்சங்கள் வணிகத்தில் முனைப்பாக ஈடுபட்டன. ஒன்று எகிப்து நாட்டை மையமாகக் கொண்ட பாதிமிட (Fatimids) என்ற அரச வம்சம். இரண்டாவது தென்னிந்தியாவை மையமாகக் கொண்ட சோழவம்சம். மூன்றாவது சீனத்தை மையமாகக் கொண்ட சாங் (Songs) வம்சம். இவை அரபிக்கடல், இந்து மகாசமுத்திரம், வங்கக்கடல், சீனக்கடல் ஆகியவற்றில் கடல்வழி வணிகம் மேற்கொண்டிருந்தன. எகிப்து மற்றும் சீன அரேபிய நாட்டு வணிகத்தில் ஆதிக்கம் தொடர்பாக கேரளக் கடற்கரை, இலங்கைக் கடற்கரைகள், பல்பலத் தீவுகள், இராசராசன் காலத்திலும் ஆந்திர, ஒரிசா, வங்கக் கடற்கரைகள் இராசேந்திரன் காலத்திலும் அவ்வப்பகுதி அரசர்களை வென்று கொள்ளப்பட்டன.

அந்தமான் தீவுகள், கடாரம், ஸ்ரீவிஜயம் ஆகிய நாடுகள் மலாக்க சந்தி, ஜாவா கடல், தாய்குடாக் கடல் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துவதற்காக கைப்பற்றப்பட்டன. பின்னாளில் ஸ்ரீவிஜய மன்னர்கள் சோழர் வணிகத்திற்கு தங்கள் கடற்கரைகளில் தொல்லை தந்த போது பர்மா வழியாக சீனநாட்டிற்குத் தரைவழி, வணிக வழிகாண சீன மன்னருக்குத் தூதுக்குழுவும் அனுப்பப்பட்டது.

வணிகம் காரணமாக சீனப்பொருள்களும் மலாய்நாட்டு செம்பு, கற்பூரம், அகில் எனப் பல்வேறு பொருள்களும் சோழ நாட்டிற்குக் கிடைத்தன. எனவே இராசேந்திரன் போர்கள் கடல்வழி வணிகச் செழிப்பிற்காகவே கடல் சார்ந்த அரசுகள் மீது தொடுக்கப்பட்டன எனலாம்.

### தென்னாட்டுப் போர்கள்

இளவரசனாய் இருந்தபோது முதலாம் இராசேந்திரன் தலைமையில் பெரும்படை சென்று இலங்கையை வெற்றி கொண்டது. வெற்றி கண்டு சோழர் இலங்கை (அல்லது) ஈழ மண்டலத்து மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயரிட்டனர். பொலன்னருவாவில் புதுத்தலை நகரை உருவாக்கினர். பொலன்னருவாவிற்குச் சோழர் இட்ட பெயர் சனநாத மங்கலம் என்பதாகும்.

## வென்ற நாடுகள்

| | | |
|---|---|---|
| 1. ஒட்டதேயம் | - | ஒடியா |
| 2. பூர்வதேசம் | - | சட்டிஸ்கர் |
| 3. இரட்டப்பாடி ஏழரை இலக்கம் | - | கிருஷ்ணா துங்கபத்திரை நதிகளின் இடைப்பட்டப் பகுதி |
| 4. வனவாசி | - | மேலை சாளுக்கியப் பகுதி |
| 5. தண்டபுத்தியும் | - | மிதுனபுர் (வங்காளம்) |
| 6. கோசலநாடு | - | கங்கையின் தென்கரை |
| 7. நக்க வாரம் | - | நிக்கோபர் தீவுகள் |
| 8 வனவாசி | - | கர்நாடக மாநிலத்தின் வடமேற்குப்பகுதி. |
| 9. கொள்ளிப்பாக்கை | - | ஐதராபாத்திற்கு வடகிழக்கில் உள்ள குல்பாக் |
| 10. மண்ணைக்கடக்கம் | - | இக்காலத்தே மால்கெட் என வழங்கப்படுகிறது. |
| 11. முயங்கி | - | பல்லாரி மாவட்டத்தில் உள்ள உச்சங்கி துருக்கம் |
| 12. தக்கணலாடம் உத்திரலாடம் | - | பீகார், வங்காள மாநிலங்களில் கங்கை ஆற்றின் தென்கரைப் பகுதி |
| 13. இடைதுறை நாடு | - | கிருஷ்ணா துங்கப்பத்திரை நதிகளுக்கு இடைப்பட்ட நாடு |
| 14. சக்கரக்கோட்டம் | - | விசாகப்பட்டினத்தின் வடமேற்கில் அச்சக்கரக் கோட்டம், சித்திரக் கோட்டம் என வழங்கப்படுகிறது. |
| 15. சேர நாடு | | |
| 16. பாண்டிய நாடு | | |
| 17. ஸ்ரீவிசயம் | | |
| 18. மலேயா | | |
| 19. கடாரம் | | |
| 20. ஆதிநகர் | | |
| 21. பஞ்சப் பள்ளி | | |
| 22. மாசுணி தேசம் | | |
| 23. வங்காளதேசம் | | |
| 24. மதுரை மண்டலம் | | |
| 25. நாமணைக் கோணம் | | |

## வென்ற மன்னர் பெயர்கள்

1. தன்மபாலன்
2. இரணசூரன்
3. மகிபாலன்
4. இந்திரரதன்
5. பரசுராமன்
6. செயசிங்கன்
7. கோவிந்த சந்தன்
8. மகிபாலன்
9. சங்கிராம விஜயோத்துங்க வர்மன்

## கங்கைப் போர் (1022-23)

முதலாம் இராசேந்திரன் பெரும்படையுடன் வடதிசையில் கங்கைக்கரை வரை சென்று போரிட்டு வெற்றிகள் பல பெற்று கங்கை நீருடன் திரும்பி, அவ்வெற்றியின் நினைவாகக் கங்கைகொண்ட சோழபுரம் என்னும் பெருநகரை நிறுவி, அதனைத் தன் தலைநகராகக் கொண்டான். மேலும் 'சோழ கங்கம்' என்னும் ஏரியை அமைத்துத் தம் வெற்றியின் அடையாளச் சின்னமாக ஆக்கினான். மேலும் இவன் கங்கைகொண்ட சோழன் என்று சிறப்புப் பெயர் பெற்றான். இப்பெயர் பல அதிகாரிகளின் பெயர்களுடனும் ஊர்களின் பெயர்களுடனும் கல்வெட்டுகளில் பரவலாகக் காணப்படுகின்றது.

## இராசேந்திரன் கடல்வழிப் படையெடுப்பு - புதிய ஆய்வு

'சோழர் கையாண்ட பாய்மரக்கப்பல் ஓட்டுமுறை' என்ற கட்டுரையில் ஆய்வாளர் பா. அருணாசலம், பல நுட்பமான தகவல்களைத் தருகிறார். சோழர்கள் பயன்படுத்திய கப்பல் ஓட்டுமுறையையும் அவர்கள் கண்டறிந்த வழிகளையும் மீண்டும் ஆராய்ந்து அறிவதற்காக மும்பைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பா. அருணாசலத்தின் மேற்பார்வையில் மும்பை கடலியல் நிறுவன ஆதரவுடன் ஐ.என்.எஸ். தரங்கிணி என்ற பாய்மரக் கப்பல், சோழர்களின் வழித்தடத்தில் பிரதிபலிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டது. இராசேந்திர சோழனின் கடற்படை 1022-ஆம் ஆண்டு நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு, கடற்கரையைச் சார்ந்து தெற்கு நோக்கிச் சென்று, தென் நோக்கி ஓடும் நீரோட்டத்தின் உதவியாலும், வன்னி ஒழினி காற்றால் உந்தப்பட்டும் இலங்கையின் வடகரையை அடைந்து, அங்கிருந்து தெற்கு நோக்கிச் சென்று முல்லைத் தீவு, திரிகோணமலை, கல்முனை, அக்கரைப்பட்டி, திருக்கோயில் துறையை அடைந்து, அதன் பின்னர் நேர் கிழக்காக கப்பலை ஒட்டி, சுமத்ரா தீவின் மேற்குக் கரையை அடைந்தது. பிறகு கடற்கரை ஓரமாகவே தெற்கு சென்று சுண்டா நீர் நிலையைக் கடந்து, சுமத்ராவின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள சிறீவிஜயாவில் இருந்த பாலம் பாங் என்ற துறையை அடைந்தது.

கடல் படையெடுப்புக்கு ஏற்றது வங்கக் கடலில் வட கிழக்குக் காற்று ஓயும் காலம். இந்தக் காலநிலை மார்கழி மாதத்தின் இறுதியில் ஆரம்பம் ஆகும். அப்போது, வங்கக்கடலில் புயல்கள் முடிந்து, கடல் காற்றோட்டம், கடல் அமைதி நிலையை அடைந்து இருக்கும். சோழர் காலத்தில் விரல் கணக்கு, நாழிகை வட்டில், கௌவெள்ளிப் பலகை என்ற ராப்பலகை, டப்புப் பலகை ஆகியவையும் ஓரளவுக்குப் பயன்பட்டன. இவற்றால் அறிந்த அளவுகள் தற்கால நுண் கருவிகளின் அளவுகளுக்கு ஈடாக இருந்தன.

## கடாரப் படையெடுப்பு (1025)

முதலாம் இராசேந்திரனின் 13-ஆம் ஆட்சியாண்டு மெய்க்கீர்த்தி கடற்படைகளைக் கடல் நடுவில் செலுத்தி அவன் கடாரப் பேரரசின் கடல் கடந்த பல நாடுகளையும் வென்ற செய்தியை கூறுகிறது.

சோழர் கடற்படை எந்தளவுக்கு சிறந்திருந்தது என்பதை கடாரத்தின் தொலைவு மட்டுமின்றி அக்கடாரப் பேரரசின் பரப்பும் சுட்டும். மேற்கே அந்தமான் நிக்கோபர் தீவுகள், வடக்கே பர்மா, தெற்கே சுமத்ரா சாவா, கிழக்கே கீழ்க்கடல் ஆகியவையாகும்

முதலாம் இராசேந்திரன் தம் கடற்படையை, கடல் நடுவில் செலுத்தி கடல் கடந்த பல நாடுகளையும் வென்றுள்ளான். இவன் வெற்றி பெற்ற பகுதிகள் கீழ் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. ஸ்ரீவிசயம் | - | சுமத்ரா |
| 2. தலைத்தக்கோலம் | - | தகூவாபா |
| 3. மாபப்பாளம் | - | மலாயாவின் பகுதி |
| 4. இலங்காசோகம் | - | மலாயாவின் கீழ் பகுதி |
| 5. மாநக்கவாரம் | - | நிக்கோபார் தீவுகள் |
| 6. மலையூர் | - | சுமத்ராவின் ஒரு பகுதி |
| 7. இலாமுரிதேசம் | - | மலாயாவின் வடபகுதி |
| 8. மாயிருடிங்கம் | - | மலாய் தீவின் ஒரு பகுதி |
| 9. மண்ணை | - | பனி- சுமத்ரா தீவின் கீழ்க்கரைப்பகுதி |
| 10. மாதமாலிங்கம் | - | மலாயாவின் தெமிலிங் ஆறு கடலுடன் கலக்கும் இடம் |

## கடாரம்

கடாரம் என்பது மலேசிய தீபகற்பத்தில் உள்ள துறைமுகப்பட்டினம். கடாரத்தை வென்று பெகு என்னுமிடத்தில் கற்றூணில் இராசேந்திரன் சாசனம் வெட்டுவித்துள்ளான். அடுத்த ஆண்டில் கி.பி. 1027-இல் திருவாரூருக்கு கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ள "கடாரங்கொண்டான்" எனும் கிராமத்தை நிருமானம் செய்து கடார வெற்றியைக் கொண்டாடி உள்ளான்.

மயிலாடுதுறைக்கு அருகில் அமைந்துள்ள கடாரம் கொண்டான், திருவாரூர் அருகில் உள்ள கடாரம் கொண்டான், தொண்டை நாட்டுக் கடாரங் கொண்டான் என்னும் ஊரும் சோழனின் கடார வெற்றிக்கு இன்றும் சான்றாக உள்ளன.

## கடார வெற்றியின் தாக்கம்

இடைக்கால வரலாற்றில் அரசர்களின் பெயர்களும் விருதுப் பெயர்களும் அரசியல் - சமூகப் பெருமக்களுக்கு சிறப்புப் பெயர்களாகத் தரப்பட்டு அவர்களுடைய இயற்பெயர்களுடன் சேர்த்து வழங்கியதைப் பல கல்வெட்டுகள் காட்டுகின்றன. அது போலவே இடப்பெயர்களும் வாய்க்கால் ஆறுகளின் பெயர்களும் அரசர்களின் பெயர்களையும் விருதுப் பெயர்களையும் கொண்டு விளங்கின. இராசேந்திர சோழனின் கடார வெற்றியால் ஏற்பட்ட தாக்கத்தினால் அவ்விதம் கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| காலம் | மன்னன் | ஆட்பெயர் |
|---|---|---|
| கி.பி. -1035 | இராசேந்திரன்-I | சேவூர் மணிநாகன் ஆன கிடாரங்கொண்ட சோழ செட்டி |
| கி.பி. -1042 | இராசேந்திரன்-I | சந்திரன் தானதொங்கன் ஆன கடாரங்கொண்ட சோழ மாயிலெட்டி |
| கி.பி. -1012-1044 | இராசேந்திரன்-I | கடாரம்கொண்ட சோழ பிரம்மராயன் |
| கி.பி. -1057 | இராசேந்திரன்-II | கடாரங்கொண்ட சோழ செ(லைசெட்டி) |
| கி.பி. -1068 | வீரராசேந்திரன் | கன்றைக்காவுடையார் மாதேவன் சோழ மூவேந்த வேளான் |
| கி.பி. -1097 | குலோத்துங்கன்-I | சேந்தன் காரானை ஆன கிடாரத்தரையன் |
| கி.பி. -1213 | குலோத்துங்கன்-III | (கோயிலை கைக்கோளரில்) பிச்சதேவன் ஆன கிடாரத்தரையன் சமய சேனாபதி |
| கி.பி. -1236 | இராசராசன்-III | திருவுடையான் உதையப் பெருமாள் ஆன கடாரத்தரையன் |
| கி.பி. -1236 | இராசராசன்-III | திருவுடையான் வீரம் அழகிய தேவனான கடாரத்தரையன் |
| கி.பி. -1245 | இராசராசன்-III | கிடாரங்கொண்ட பரையன் (அஞ்Æற்றுவப்பரையன்) |

மேற்கண்ட கல்வெட்டுகளை நோக்கும் போது இராசேந்திர சோழனின் 14-ஆம் ஆண்டில் (கி.பி. -1026) நிகழ்ந்த கடார வெற்றி மூன்றாம்

இராசராசன் காலம் வரை ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு அரசியலில் சிறப்பிடம் பெற்றிருந்தது என்பது தெரிகிறது. பட்டம் பெற்றவர்களின் பெயர்களுடன் காணப்படும் பிற சொற்களைப் பார்க்கும் போது இவர்கள் வணிகர்கள் (செட்டி, செலை-சிலை செட்டி, மாயிலெட்டி) அதிகாரிகள், படைத்தலைவர், குறுநிலத் தலைவர்கள் (அரையன்) நெசவு வணிகர் (கைக்கோளர்) என்பது தெரிகிறது.

அதுபோல் இடப்பெயர்களில் "கடாரம்" இருப்பதையும் காணலாம் இடப்பெயர்கள் ஆட்பெயர்கள் போல காலப் போக்கில் வழக்கொழிந்து போவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

| காலம் | மன்னன் | இடப்பெயர் |
|---|---|---|
| 1. கி.பி. -1035 | இராசேந்திரன்-I | சோழமண்டலத்து அருமொழி தேவ(வள)நாட்டு *கிடாரங்கொண்ட* சோழ நல்லூர் |
| 2. கி.பி. -1038 | இராசேந்திரன்-I | பெரும்பற்றப்புலியூர் கீழ் பிடாகை *கிடாரங்கொண்ட* சோழப் பேரிளமை நாட்டு பராக்கிரம நல்லூர் |
| 3. கி.பி. -1064 | வீரராசேந்திரன்-I | *ஸ்ரீகடாரங்கொண்ட* சோழச்சேரி நெட்டூர் இளவடி கிரமவித்தன் |
| 4. கி.பி. -1076-1112 | குலோத்துங்கன்-I | *கிடாரங்கொண்டாந்* திருநந்தவனம்<br>*கிடாரங்கொண்டான்* மடம்<br>*கிடாரங்கொண்டான்* விளாகம் |
| 5. கி.பி. -1084 | குலோத்துங்கன்-I | *கிடாரங்கொண்ட சேரி* நெட்டூர் அங்கிபிரான் பட்டன் |
| கி.பி. -1300 | | மனையிற்கோட்டத்து பாசாலி நாட்டு *கடாரங்கொண்ட* சோழபுரம் |
| 6. கி.பி. -1454 | பராக்கிரமபாண்டியன் | *கிடாத்தூர்* உடையான் |
| கி.பி. -1600 | | வடபரிசார நாட்டு நவிரையான கப்பலன் *கிடாரம்* |

சேரி என்பவை (வ.எண் 3 மற்றும் 5) பிராமணர் ஊரிருக்கையில் உள்ள பிரிவுகளாகும். பிராமண ஊரிருக்கைகள் பெரும்பாலும் புதிதாக அமைக்கப்பட்ட ஊர்களாக அமைவதால் அரசர் அல்லது தெய்வப் பெயர்களைக் கொண்டவையாக சேரிகள் இருந்தன. ஸ்ரீரங்கம் கல்வெட்டு

(வ.எண். 4) கிடாரங்கொண்டான் வளாகத்தில் அமைந்த கிடாரங் கொண்டான் திருநந்தவனம் கிடாரங்கொண்டான் மடம் ஆகியவற்றைக் குறிப்பது சிறப்பாகும். தென்காசியைச் சேர்ந்த பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு 15-ஆம் நூற்றாண்டில் விளங்கிய கிடாரத்தூரையும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள கிடாரம் என்ற ஊர்க் கல்வெட்டு அவ்வூரின் பெயரை கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டில் கப்பலன் கிடாரம் என்று குறிப்பதும் சுமார் 500,600 ஆண்டுகளுக்குப் பிறகும் இராசேந்திரனுடைய கடார வெற்றி தமிழக மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்ததைக் காட்டுகிறது.

## இராசேந்திர சோழன் காலத்து இலங்கை அரசர்கள்

இலங்கையைச் சோழ அரசர்கள் தொடர்ந்து 77 ஆண்டுகள் நேரடி ஆட்சிசெய்தனர். ஐந்தாம் மகிந்தன் (982-1017) என்ற இலங்கை அரசன் இராசேந்திரனின் படையெடுப்பின் போது தோற்று தென்னிலங்கைக்கு ஓடி ஒளிந்து கொண்டான். இராசேந்திரன் தென்னிலங்கையில் அவனைச் சிறைப்பிடித்துச் சோழநாட்டிற்குக் கைதியாகக் கொண்டு சென்றான். 12 ஆண்டுகள் கைதியாக இருந்த அவன் 1029-இல் இறந்தான். அவனது மகன் காஸ்யபன் தென்னிலங்கையில் அவனது தளபதிகளின் உதவியுடன் எழுச்சி பெற்றான். முதலாம் விக்கிரபாகு (1017-1041) என்ற பெயரில் மீண்டும் சிங்கள அரசை நிறுவினான். இராசேந்திர சோழன் 1041-இல் மீண்டும் இலங்கை மீது படையெடுத்து அவனை வீழ்த்தினான்.

## இராசேந்திரனின் இலங்கை வெற்றி குறித்த மெய்க்கீர்த்திப் பகுதி

'பொருகட லீழத் தரசர் தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்எழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழமண்டல முழுவதும்'

## இலங்கையில் முதலாம் இராசேந்திரனது கல்வெட்டுகள்

1. திருகோணமலை
2. மாதோட்டம் கல்வெட்டு
3. மானாங் கேணிக் கல்வெட்டு
4. ஐநூற்றுவர் அம்பலத்துக் கல்வெட்டு
5. பொலன்னருவை துண்டு கல்வெட்டு
6. திருகோணமலை பத்ரகாளியம்மன் கோயில் தூண் கல்வெட்டு

7. திருக்கேத்தீஸ்வரத்தில் இரண்டு, அவை தற்போது கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ளன. அவற்றில் 27 வரிகள் உள்ளன.
8. வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் கந்தாளயப்பிரம்மதேயம் பிரம்மதேயங்களிலே முதன்மையானது கந்தாளயப் பிரம்மதேயம்.
9. திருகோணமலைக் கருகில் உள்ள நாதனார் கோயிலில் 16 தமிழ் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஏழு கல்வெட்டுகள் முதலாம் இராசேந்திரன் காலத்தவை.

## சோனகன்

கர்நாடக மாநிலம் கோலாரில் காணப்படும் முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டில் "திருமந்திர ஓலை நாயகம் கங்கைகொண்ட சோழபுரத்து ராசவித்தியாதரப் பெருந்தெருவில் சோனகன் சாவூர் பரஞ்சோதி" என்ற குறிப்பு உள்ளது. இவன் அரபு நாட்டைச் சார்ந்தவனாகவும், இசுலாம் மதத்தைச் சார்ந்தவனாகவும் இருந்த போதும் இந்து மதம் சார்ந்த ஆட்சியில் குறிப்பாக முதலாம் இராசேந்திர சோழனது காலத்தில் நீண்டகாலம் மிக உயர்ந்த பதவியில் இருந்ததும் தெளிவாகும்.

## முகமது கஜினியும் - இராசேந்திர சோழனும்

இருவரும் சமகாலத்தவர். வடஇந்தியாவின் வடமேற்குப் பகுதியில் கஜினி (1000-30) பல முறை படையெடுத்து வெற்றி வாகை சூடிய அதே காலத்தில் இராசேந்திர சோழன் (1012-44) வடஇந்தியாவின் வடகிழக்குப் பகுதியான கங்கைச் சமவெளியின் கீழ்ப்பகுதி, வங்காளம், பீகார் பகுதிகளில் வெற்றி வாகை சூடிக் கொண்டிருந்தான். ஆனால் இவ்விரு போராளிகளும் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்ளவில்லை என்பது ஆச்சரியம். கஜினி படையெடுப்பை வெகுவாகக் குறிப்பிடும் வரலாற்று நூல்கள் இராசேந்திர சோழனும் அதே சம காலத்தில் வெற்றிவீரனாக இருந்ததைக் குறிக்கத் தவறிவிட்டன.

## வென்ற நாட்டுச் செல்வங்களும் கலைப் பொருட்களும்

இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி, அவன் வெற்றிகண்ட நாடுகளிலிருந்து கொண்டு வந்த பொருட்களையெல்லாம் குறிப்பிடும் சிறப்புடையது. ஏனைய மன்னர்களது மெய்க்கீர்த்திகள் வென்ற நாடுகள், மன்னர்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற நிலையில் இவனது மெய்க்கீர்த்தி அவற்றைக் குறிப்பிட்டு மேலும் அவன் கொண்டு வந்த பொருட்களையும் குறிப்பிடுவது ஒரு சிறப்பான செய்தி ஆகும். அப்படி அவன் கொண்டுவந்தவை மாற்றரசருடையதும், அவர் தேவியருடையதுமான மணிமுடிகள், அடிமைப் பெண்டீர், பண்டாரம் என்னும் கருவூலச்

செல்வங்கள், குதிரைகள், யானைகள், மலை போன்ற நவநிதிகள், மாற்றரசர் குலத்துச் செல்வம் என்று பொதுவானவற்றைக் குறிப்பிடுவது போல கடாரத்து அரசனை வென்று அவன் அரண்மனை வாசலில் இருந்த அழகிய தோரணம், மணிகள் கோர்த்த புதவம் என்னும் சிறிய கதவு, பெரிய மணிகள் கோர்த்த கதவு ஆகியவற்றையும் கொண்டு வந்ததாகக் குறிப்பிடுகிறது. இவை அனைத்தும் இன்று நமக்குக் காணக் கிடைக்கவில்லை. ஆனால் நுளம்ப நாடு , பால நாடு, கலிங்க நாடு, சாளுக்கிய நாடு ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வந்த தூண்கள், சிற்பங்கள் இன்றும் காணக்கிடைக்கின்றன. அவனுடைய செப்பேடு முத்திரையில் தோரணமும் புதவமும் காணப்படுகின்றன.

### நுளம்பர் தூண்கள்

திருவையாற்றில் இவனது மனைவி புதுப்பித்த தென்கயிலாயக் கோயில் திருச்சுற்று மாளிகையில் 40-க்கும் மேற்பட்ட நுளம்பர் நாட்டுத்தூண்கள் கட்டடப் பகுதியாக சுற்றுமாளிகையைத் தாங்கிய வண்ணம் உள்ளன. இவை கருப்பு நிற மாக்கல்லால் ஆன நுணுக்கமான சிற்பங்களை உடைய அழகுத் தூண்கள் ஆகும். அவற்றை நோக்கும் போதே இராசேந்திர சோழனின் கலை ஆர்வம் நமக்குத் தெளிவுறவிளங்கும்.

### பால நாட்டு விநாயகர்

கும்பகோணம் நாகேஸ்வர சுவாமி கோயில் சன்னதியின் முன்பாக தென்புறம் ஒரு சிறு சன்னதியில் விநாயகர் சிற்பம் உள்ளது. இது வங்கப் பகுதியில் ஆட்சி செய்த பால மன்னர் கலைப்பாணியில் அமைந்தது. நின்ற நிலை விநாயகரும் மூசிகம், அடியார்கள், மோதகம், பழங்கள் எனப் படையல் பொருள்கள் சூழக் காட்டப்பட்டிருப்பது மனதிற்கு தெய்வப் பக்தியை ஊட்டும் காட்சியாகும்.

### சாளுக்கிய நாட்டு நவக்கிரகப்பீடம்

கங்கைகொண்ட சோழபுரத்தில் மகாமண்டபம் முன் வடபுற மாளிகையில் நவக்கிரக பீடமாக வழிபடப்படும் சிற்பம் சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டதாகும். மேல்பகுதி தட்டையாக பலிபீட அமைப்பிலும் கீழ்ப்பகுதியைச் சுற்றி அழகிய சிற்பங்களுமாக இது அமைந்துள்ளது. முன்பகுதியில் சூரியன் ஏழு நாட்களைக் குறிக்கும் தேரில் பயணம் செய்ய அருணன் (உதயம்) அத்தேரை ஓட்டுவதாகக் காட்டப்பட்டு அடுத்தடுத்து வலமாக பிற நவக்கிரக நாயகர்கள் காட்டப்பட்டிருப்பது மிக அழகிய தோற்றமாகும்.

## சாளுக்கிய நாட்டுத் துர்க்கை

கங்கைகொண்ட சோழபுரம் வீராரெட்டி தெருவில் உள்ள அழகிய துர்க்கை சிற்பம் சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். இடது காலை நிலத்தில் ஊன்றி வலது காலை மகிஷனின் தோள் மீது நிறுத்தியுள்ள இத்துர்க்கை எட்டு கரங்களில் படைக்கலன்களைக் கொண்டு விளங்கும் காட்சியும், அவளது பின்னதாக திருவாட்சியும், இடது கால் அருகில் சிம்மமும் காட்டப்பட்டுள்ள காட்சியும் சிறப்பானவை.

## கலிங்கத்துப் பைரவர்-பைரவி

கங்கைகொண்ட சோழபுரம் ஒட்டிய மெய்க்காவல் புதூரில் அச்சம் தரும் தோற்றத்தில் உயரமான பைரவர், பைரவி சிற்பங்கள் உள்ளன. இவை கலிங்க நாட்டிலிருந்து (இன்றைய ஒரிசா) கொண்டு வரப்பட்டவை. திரிபங்கக் கோலத்தில், ஆடையணியாது கபால மாலை இடது தோளிலிருந்து வலது கணுக்கால் வரை விளங்க இருபுறமும் பக்தர்களாகப் பிசாசங்கள் அமையப் பைரவரும் பைரவியும் தனித்தனிச் சிற்பங்களாக உள்ளன.

## இலக்கியத்தில் இராசேந்திரன்

முதலாம் இராசேந்திர சோழன் ஆட்சிக் காலத்தில் எத்தனையோ போர்கள் நடத்திய போதும் அவன் வடக்கே சென்று கங்கையையும் கடல் கடந்து கடாரத்தையும் வெற்றி கொண்டமை தான் வெற்றிகளுள் பெரிய வெற்றியாக கருதப்படுகின்றன. எனவே அவை இலக்கியங்களில் இராசேந்திரசோழனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன

கலிங்கத்துப் பரணியில் புலவர் ஜெயங்கொண்டார்:

> களிறு கங்கை நீ கருண்ண மண்ணையில்
> காய்ச்சினத் தொட கலவு செம்பியன்
> குளிரு தெண்டிரைக் குரை கடாரமுங்
> கொண்டு மண்டலங்குடையுள் வைத்தும்

மூவருலாவில் ஒட்டக்கூத்தர்:

> 'தண்டேவிக் கங்காநதியுங் கடாரமுங்
> கைக்கொண்டு கங்காபுரி பரந்த கற்பகம்'
> "கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
> சிங்காதனத் திருந்த செம்பியர் கோன்"

## விக்கிரமாங்கதேவ சரிதத்தில் கங்கைகொண்ட சோழபுரம்

விக்கிரமாங்கதேவ சரிதம் என்னும் வடமொழி நூல் சாளுக்கிய மன்னன் விக்ரமாதித்தன் மீது பாடப்பெற்றது. இதில் விக்ரமாதித்தன், தன் மைத்துனன் அதிராசேந்திர சோழனைக் காக்கப் படை திரட்டி வந்து

பகைவரை வென்று கங்கைகொண்ட சோழபுரத்தில் அவனுக்கு முடிசூட்டி, தன் தலைநகர் திரும்பியதாக கூறப்படுகிறது. அந்நூலில் கங்கைகொண்ட சோழபுரம் "கங்கா குண்டம்" என்று கூறப்படுகிறது. இந்நூல் பில்கணர் இயற்றியதாகும்.

## இராசேந்திரன் காலத்திய அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும்

முதலாம் இராசேந்திர சோழன் ஆட்சிக் காலத்தில் குறுநில மன்னர்களாகவும், அதிகாரிகளாகவும் இருந்து அவனது ஆணையின்படி யொழுகி நாட்டிற்குப் பல்லாற்றானும் தொண்டு புரிந்தோரின் பெயர்கள் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் குறிக்கப்பட்டுள்ளன அவர்களில் சிலர் பின்வருமாறு:

1. காடவராயர்
2. வில்லவராசன்
3. ஆதித்த சூளாமணி
4. திருநீலகண்டபட்டர்
5. உத்தமசோழகோன்
6. இராசராச விசயபாலர்
7. கொட்டி அதிராத்ரயாஜி
8. பாண்டியன் சீவல்லபன்
9. இராசராச பிரம்மராயன்
10. இராசராசக் குமணராசன்
11. விக்ரமசிங்க மூவேந்த வேளான்
12. வல்லவரையன் வந்தியத்தேவன்
13. இராசேந்திரசோழப் பிரம்மராயர்
14. முடிகொண்ட சோழ விழுப்பரையன்
15. சத்திரிய சிகாமணி கொங்காள்வான்
16. விக்ரமநாராயணமூவேந்த வேளான்
17. கங்கைகொண்ட சோழப் பல்லவரையன்
18. குணநிதி அருமொழி மூவேந்த வேளான்
19. கடாரம் கொண்ட சோழ மூவேந்த வேளான்
20. இரட்டபாடி கொண்ட சோழ மூவேந்த வேளான்
21. உத்தமசோழப் பல்லவராயன்
22. உத்தமசோழ மிலாடுடையார்
23. வீரராசேந்திர தமிழதரையர்
24. இராச மூவேந்த வேளான்
25. ஜநநாத மூவேந்த வேளான்
26. வீரசோழ மூவேந்த வேளான்
27. வீரராசேந்திர பிரம்மாதிராசன்
28. வீரராசேந்திரமுனைய தரையர்
29. மதுராந்தக மூவேந்த வேளான்
30. இராசராச மூவேந்த வேளான்
31. விக்ரமசோழமூவேந்த வேளான்
32. விக்ரமசோழச் சோழியவரையன்
33. கங்கைகொண்ட மிலாடுடையார்
34. இராசராசேந்திர மூவேந்த வேளான்

35. கொடும்பாளூர் இராசேந்திர சோழ இருக்குவேளார்

36. சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான்

37. பாண்டி உதயதிவாகரன் இராசராச நல்லூருடையான்

38. கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழப் பிரம்மராயன்

39. நீலன் வெண்காடன் என்ற இராசராச மூவேந்த வேளான்

40. மாராயன் அருள்மொழியான் உத்தம சோழப் பிரம்மராயன்

41. ஈராயிரவன் பல்லவராயனான உத்தம சோழப் பல்லவரையன்

42. விக்கிரமசோழ சோழியவரையனாகிய அரையன் இராசராசன்

43. தண்டநாயகன் வீமையனாகிய இராசேந்திர சோழப் பிரம்மராயன்

44. சேனாபதி அரையன் கிடாரங்கொண்ட சோழன் இராசராச அணிமுரி நாடாள்வான்

## சோழ பாண்டியர்கள்

பாண்டிய நாட்டைச் சோழர் ஆட்சியின் கீழ் முதன் முதலாகப் பராந்தக சோழன் கொண்டு வந்தான். இராசராசசோழன் காலம் வரை பாண்டியநாடு முழுமையாக சோழரின் ஆட்சிக்குட்படுத்தபடவில்லை. பாண்டியர்கள் அவ்வப்போது போர் தொடுத்துக் கொண்டே இருந்தனர். இதனைத் தவிர்க்க முதலாம் இராசேந்திரன் தனது இரண்டாவது மகனைப் பாண்டிய நாட்டின் அரசனாக்கினான். பாண்டிய நாட்டு மக்கள் மனம் கோணாதிருக்க பாண்டியர்களது பட்டமான ஜடாவர்மன் என்ற பட்டத்தைக் கொடுத்து, சோழ பாண்டியன் என்ற பெயரை கொடுத்தான். இது ஒரு ராஜதந்திரம், இவனை அடுத்து சோழ இளவரசர்கள் பாண்டிய நாட்டில் ஆட்சி புரிந்தனர். மதுரையில் அரண்மனை ஒன்றும் இருந்தது.

1. ஜடாவர்மன் சுந்தர சோழ பாண்டியன் (1021-1052) பின்னாளில் இவனே சோழப் பேரரசன் இரண்டாம் இராசேந்திரனாக விளங்கினான். (1052-64)
2. மாறவர்மன் பராக்கிரம சோழ பாண்டியன் (1052-54) இவனே சோழப் பேரரசன் இராசமகேந்திரன். (1058-1063)
3. ஜடாவர்மன் சோழ பாண்டியன் (1063-1068) இவனே சோழப் பேரரசன் அதிராசேந்திரன் (1068-71)
4. விக்கிரம சோழ பாண்டியன் (1070-1080). இவன் முதல் இராசேந்திர சோழனின் சகோதரன் மகன்.

## கங்கைகொண்ட சோழ வளநாடு

சோழர் காலத்தில் நடுவில் நாடு என்றழைக்கப்பட்ட, தொண்டை மண்டலம் மற்றும் சோழ மண்டலத்திற்கு இடைப்பட்ட பகுதியில் கீழ் ஆம்பூர் நாடு, ஏமப்பேரூரய் நாடு, மாத்தூர் நாடு, மேலூர் நாடு, பனையூர் நாடு, பட்டான் பாக்கை நாடு, பேரிங்கூர் நாடு, வாகூர் நாடு, வாவலூர் நாடு ஆகிய ஒன்பது நாடுகளை உள்ளடக்கியதாகக் கங்கைகொண்ட சோழ வளநாடு விளங்கியது. மேற்சொன்ன ஒன்பது நாடுகள் கல்வெட்டுகளில் 1097-1130-க்கு இடைப்பட்ட காலக் கல்வெட்டுகளில் இவ்வளநாட்டின் கீழ் காணப்படுகின்றன. இவை முறையே 3, 6, 5, 4, 15, 5, 2 என மொத்தம் 46 ஊர்களைக் கொண்டு இன்றைய திருக்கோவலூர், விழுப்புரம், கடலூர், பாண்டிச்சேரிப் பகுதிகளில் பெண்ணை மற்றும் கெடிலம் ஆறுகளிடையே உட்பட்ட பகுதிகளாக விளங்கின.

## இராசேந்திர சோழ வளநாடு

இராசராசன் காலம் முதற்கொண்டு சோழர் அரசின் கீழிருந்த நாட்டுப் பிரிவுகள் நிருவாக வசதிகளை அடிப்படையாகக் கொண்டு புதிதாக வளநாடு என்ற பெயரில் தொகுக்கப்பட்டன. இவ்வகையில் கல்வெட்டுகளில் சுமார் 50-க்கும் மேற்பட்ட வளநாடுகள் கல்வெட்டுகளில் அறியக் கிடைக்கின்றன. இவ்வளநாடுகளின் கீழ் ஒன்று முதல் இருபத்திரண்டு வரை நாடுகள் அல்லது கூற்றம்/கோட்டங்கள் இருந்துள்ளன.

இராசேந்திர சோழ வளநாட்டில் அளநாடு, ஆர்வலக்கூற்றம், இடைய அளநாடு, நெல்மலிநாடு, புறங்கரம்பை நாடு, வலிவல கூற்றம், வண்டாரை வேலூர் கூற்றம் என 7 நாடுகள் இருந்தமை1017 முதல் 1050 வரையிலான ஆண்டுக் கல்வெட்டுகளால் தெரியவருகின்றன. இந்நாடுகள் 11, 10, 14, 15, 28, 8, 15 என மொத்தம் 101 ஊர்களைக் கொண்டிருந்தன.

இவ்வளநாடு நாகப்பட்டினம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய இன்றைய டெல்டா பிரதேச வட்டப் பகுதிகளில் கருவாய்யாறு மற்றும் வெண்ணாறு ஆகியவற்றிற்கு இடையில் பரவியிருந்தது. முதலில் அருமொழித்தேவ வளநாடு என்ற பெயருடன் விளங்கிப் பிறகு இராசேந்திர சோழ வளநாடு என்று பெயர் மாற்றம் பெற்றிருக்கிறது.

## இற்றினவும் முறிந்தனவும்

இராசேந்திர சோழன் காலத்தில் கோயில்கள் பல்கியிருந்ததாலும் அவற்றிற்கு கொடுக்கப்பட்ட கொடைகள் சோழராட்சி தொடக்கம் முதல் கல்வெட்டுகளாகவும், ஆவணங்களாகவும் பதிவாகியிருந்ததாலும் அவை அவ்வப்போது அதிகாரிகளைக் கொண்டு சரிபார்க்கப்பட்டன. தேய்ந்தும்

இற்றியும் போன விலை மதிப்புடைய வழிபாட்டு அணிமணிப் பொருள்கள் பட்டியலிடப்பட்டு மீண்டும் புதியதாகச் செய்யப்பட்டன. இவை அரசின் நேரடி ஆட்சி நாடு முழுவதும் பரவியிருந்ததையும் இராசேந்திரனின் நிர்வாகத் திறனை வெளிப்படுத்துவதாகவும் உள்ளன.

கும்பகோணத்தை அடுத்துள்ள திருநாகேஸ்வரம் இராசேந்திர சோழனின் 30-ஆம் ஆட்சி ஆண்டுக் (1042) கல்வெட்டு, கோயில் கருவூலத்தில் தேய்ந்து உபயோக மற்று இருந்த அணிகலன்கள், கொடுக்கப்பட்ட ஆண்டு, கொடுத்தவர் முதலியவற்றைக் குறிப்பிட்டு, கொடுத்த போது இருந்த எடை, 30-ஆம் ஆண்டில் இருந்த எடை விவரங்களையும் குறிப்பிட்டு அவற்றை அழித்து இறைவனுக்கு பொன்னின் கொள்கை (கவசம்-அங்கி) செய்ததைக் குறிப்பிடுகிறது.

தேய்ந்து உபயோகமற்ற அணிகளாக 33 பொற் பூக்கள், 2 கைத் தாமரைப்பூக்கள், நெற்றிப் பட்டம், திருக்கைக்காறை, காப்பு, ஹஸ்த பட்டிக்காறை, தோள்வளை, பொற்தாலி ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.

அரசன் நாடு வகை செய்கின்ற அதிகாரிகள், ஸ்ரீகாரியம் பார்க்கின்ற அதிகாரிகள் ஆகியோர் சென்று, கோயில் வாரியம் செய்வார், பூசகர்கள், கருவூலத்தார், கரணத்தார், திருப்பதியம் விண்ணப்பிப்பார், மெய்க்காவல் முன்னிலையில் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து வந்த வியாபாரி பிரமகுட்டன் உலகளந்தான் என்பவன் தன்மக் கட்டளைக் கல் என்ற எடைக்கல்லால் எடை பார்த்துக் குறித்த செய்தி இக்கல்வெட்டில் விவரமாக உள்ளது.

## கங்கைகொண்ட சோழீச்சுரம்

முதலாம் இராசேந்திரசோழன் தமது கங்கை வெற்றியின் நினைவாக கங்கைகொண்ட சோழபுரத்தை நிறுவி, அங்கு "கங்கைகொண்ட சோழீச்சுரம்" என்ற கோயிலை எடுப்பித்தான். இக்கோயிலை இராசேந்திர சோழன் கட்டியிருப்பினும் அவனுடைய கல்வெட்டுகள் ஏதும் இக்கோயிலில் இல்லை. இராசேந்திர சோழனின் மூன்றாவது மகன் வீரராசேந்திர சோழன் தனது 23-ஆவது ஆட்சியாண்டில் கொடுத்த தானங்களையும், முதலாம் இராசாதிராசன் தனது 26, 30-ஆம் ஆண்டுகளில் கொடுத்த தானங்களையும் குறிக்கும் கல்வெட்டுகளே உள்ளன.

அண்மையில் தென் ஆற்காடு மாவட்டம் எசாலம் என்ற ஊரில் கிடைத்த முதலாம் இராசேந்திர சோழனது செப்பேட்டின் வடமொழிப் பகுதியில் முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய அருஞ்செயலாகக் கங்கைகொண்ட சோழீச்சுரம் கட்டிய செயல் குறிப்பிடப்படுகின்றது. இது இராசேந்திர சோழன் இக்கோயிலை கட்டினான் என்பதற்கான நேரடிச் சான்றாகின்றது.

இது 4 மைல் சதுர பரப்புடையதாய் இருந்துள்ளது. கங்கைகொண்ட சோழபுரம் கோயில் பெண் வடிவை ஒத்ததாகும். தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் ஆண்வடிவை ஒத்தாகும். தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கடுத்து கங்கை கொண்ட சோழபுர விமானமே தமிழ்நாட்டில் உள்ள விமானங்களில் உயர்ந்தது எனலாம். விமானத்தின் உயரம் 131.5 அடியாகும். மொத்த உயரம் 180 அடியாகும் கருவறை உயரம் 48.5 அடியாகும். மகாமண்டபம் 175 X 35 என்ற அளவிலும், துவார பாலகர் 12 அடி உயரமும், மகாமண்டபத்தில் 150 கற்தூண்களும் அவற்றில் நடுவிருபத்திகள் 18 அடி உயரமும், பிறபத்திகள் 16 அடி உயரமும் கொண்டது.

### கோயிலின் காலம்

சோழர்கால நான்கு பெரும் கோயில்களில் தஞ்சைப் பெரிய கோயிலை அடுத்துக் கட்டப்பட்ட கோயில் கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள கோயிலாகும். இராசேந்திரனின் கங்கை நாடுகள் வெற்றி அவனது பதினோராம் ஆட்சியாண்டில் (1023) முதன் முதலாகக் குறிக்கப்படுகிறது. கங்கைகொண்ட சோழபுரம் அவனது 17-ஆவது ஆண்டுக் கல்வெட்டில் (1029) முதன் முதலாக அறியப்படுகிறது. எனவே 1023 மற்றும் 1029 ஆம் ஆண்டுகளுக்கிடையே இக்கோயில் கட்டப்பட்டது எனலாம்.

### மதில்

சுமார் 185 மீ. நீளமும் 130 மீ. அகலமும் உடைய மதில் சுவரையும் மதில் சுவர் ஒட்டிய இரு அடுக்குத் திருச்சுற்று மாளிகையும் ஒன்றடுத்து ஒன்றாக இரு கோபுரங்களையும் கொண்டு இக்கோயில் ஒரு பெரிய கோயிலாக விளங்கியிருக்கிறது. இம்மதிலும், திருச்சுற்று மாளிகையும், கோபுரங்களும் இன்றில்லை. ஆங்கிலேயர் காலத்தில் இவற்றின் கற்கள் அருகில் உள்ள கீழ் அணை கட்டுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. எனவே கோபுரம், மதில் மாளிகை ஆகியவற்றின் அடிப்பகுதிகளும், சிதைவுகளும், எச்சங்களுமே இன்றுள்ளன.

### அமைப்பு

கிழக்கு நோக்கி அமைந்து ஒன்றடுத்து ஒன்றாக இரு கோபுரங்களைக் கிழக்குப் பகுதியில் கொண்டும் ஏனைய மூன்று புறங்களிலும் நுழைவு வாயில்களைக் கொண்டு விளங்கியிருந்தது. கோபுரங்கள் கருவறை மீதான விமானத்தை விட உயரத்தில் குறைவாகவே சோழர் கால மரபுப்படி இருந்தன. கோயில் திருச்சுற்றுக்குள் இருமருங்கிலும் இரு சிறிய சிவன் கோயில்கள் இராசேந்திரனின் அரசியர்களால் கட்டப்பட்டு வடகயிலாயம், தென் கயிலாயம் என்ற பெயரில் இன்றுள்ளன.

இன்று வடகயிலாயம் அம்மன் கோயிலாக உள்ளது. திருச்சுற்றில் உள்ள விநாயகர் கோயில், சாளுக்கிய நாட்டுத் துர்க்கையுள்ள கோயில் ஆகியவை பிற்காலத்தியவை. சண்டிகேஸ்வரர் கோயில் இராசேந்திர சோழன் காலத்தியது. சிங்கமுகக் கிணற்றின் காலம் தெரியவில்லை. உடையார் பாளையம் ஜமீன்தார்களால் இன்றைய சிங்க உருவம் சுதையால் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

### பரிவார ஆலயங்கள்

தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவே திருச்சுற்று மாளிகையில் அமைந்திருக்க வேண்டும். இன்று மாளிகை சிதைந்து இல்லாது போய்விட்டதால் பரிவார ஆலயங்கள் இருந்த தடயங்களும் இல்லை. எனினும் தரையில் புதைந்திருந்த சூரியன் உருவங்கள் இன்று எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டால் அழகிய பரிவார ஆலயங்கள் இருந்ததை நாம் ஊகிக்க முடியும்.

### விமானம்

விமானம் என்னும் கருவறைப் பகுதி உட்சுவர் மற்றும் வெளிச்சுவர்களையும் இடையில் சாந்தாரப் பகுதியையும் கொண்டவை. இந்த இரட்டைச் சுவர்களின் மீது தான் ஒன்பது தளங்களுடன் கருங்கல்லால் ஆகிய 180 அடி உயர விமானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன் கருவறை உள்ள பகுதி 48.5 அடி உயரமும், அதன் மேலுள்ள விமானம் 131.5 அடியும் உயரமுடையவையாக இருபிரிவுகளாக உள்ளன. விமானத்தின் இருதளங்கள் மட்டுமே தளமுடையவை. ஏனையப் பகுதி உட்புறம் கூடு போல இடைவெளியுடன் அமைந்துள்ளன. இலிங்கம் சிகரத்தில் உள்ள ஸ்தூபியில் "நல்லக்க தோழ உடையார்" என்ற பொறிப்பு உள்ளது. உடையார் பாளையம் பாளையக்காரர் புதிதாக இதனைச் செய்து கொடுத்திருக்க வேண்டும்.

### இலிங்கம்

கங்கைகொண்ட சோழீசுவரர் என்று அழைக்கப்படும் இலிங்க உருவம் சுமார் 13 அடி உயரமுடையது. பொதுவாக இலிங்கத்திற்கு அணியும் ஆடைத்துணி மூன்று முழம் இருந்தால் போதும் என்பர். ஆனால் இந்த இலிங்கத்திற்கு 15 முழப்பரிசட்டத் துணியும் ஆவுடையாருக்கு 54 முழப்பரி சட்டத்துணியும் இருந்தால் பரிசட்டம் சாத்த இயலும். இலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய பக்கவாட்டில் சாரம் கட்டிப் பலகைகள் போடப்பட்டுள்ளன.

### தேவகோட்டத் தெய்வங்கள்

கருவறையை வலமாக வரும் போது நாம் அழகிய சிற்ப அமைதியில் பின் வருமாறு தெய்வ உருவங்களை கீழ்த்தள தெற்கு, மேற்கு, வடக்குத் திசை தேவகோட்டங்களில் திசைக்கு ஐந்து ஐந்தாகக் காணலாம். கணபதி, அர்த்தநாரி, தக்ஷிணாமூர்த்தி, ஹரிஹரன், நடராஜர் (தெற்கு), கங்காதரர், லிங்கோத்பவர், மகாவிஷ்ணு, சுப்ரமணியர், விஷ்ணு அனுக்கிரக மூர்த்தி (மேற்கு), காலசம்காரர், துர்க்கை, பிரம்மா, பைரவர், காமதகன மூர்த்தி (வடக்கு).

### இடைநாழியில் உள்ள தேவகோட்டங்கள்

கருவறைக்கும் மகாமண்டபத்திற்கும் இடைப்பட்ட பகுதி அந்தராளம் என்றும், இடைநாழி என்றும் அழைக்கப்படும். இதுவே இங்கு அர்த்த மண்டபமாகவும் உள்ளது. இங்கு இடைநாழி இருபுறமும் வாயில்களையும் அவற்றை அடைய அழகிய படிகளையும் பெரிய துவார பாலகர்களையும் கொண்டு விளங்குகிறது. வடபுறம் கருவறை மற்றும் மகா மண்டப தேவ கோஷ்டங்களில் உலகப்புகழ் பெற்ற சண்டேச அனுக்கிரக மூர்த்தி மற்றும் சரஸ்வதி உருவங்கள் மிகச் சிறப்புற அமைக்கப்பட்டுக் காணப்படுகின்றன. தென்புறம் கங்காளர் மற்றும் இலக்குமியின் உருவங்கள் உள்ளன.

### மேல்தளத் தேவகோட்டத் தெய்வங்கள்

கருவறை மேல்தளத்தில் நான்கு புறமாக 31 தெய்வ உருவங்கள் உள்ளன. சில (10) தேவகோட்டத் தெய்வங்களை அடையாளம் காண இயலாதுள்ளது. ஏனைய 21 தேவகோட்டத் தெய்வங்கள் வலமாகச் செல்லும் போது பின்வருமாறுள்ளன. சூரியன், அக்கினி, காலாந்தகன், யமன், தக்ஷிணாமூர்த்தி, நிருருதி, பிக்ஷாடனர், வருணன், விஷ்ணு, லிங்கோத்பவர், பிரம்மன், ஈசாணன், பூவராகர், கஜசம்காரர், சந்திரன் இவற்றில் திக்பாலகர்களான அக்கினி, யமன், நிருருதி, வாயு, சோமன், ஈசானன், வருணன் ஆகியோர் 8 திசைபாலகர்களுள் அறுவராவர். குபேரன், இந்திரன் உருவங்கள் தெரியாத உருவங்களாகும்.

### செப்புத்திருமேனிகள்

கோயில் பலகாலம் வழிபாடில்லாது அழிவுற்றதாகக் காணப்பட்டாலும் அதிசயிக்கத் தக்க வகையில் இங்கு சில செப்புத்திருமேனிகள் இராசேந்திர சோழன் காலத்தவையாக உள்ளன. இவற்றில் கார்த்திகேயனாகிய குமரக்கடவுள் முருகனின் உருவமும், சோமாஸ்கந்தர் திருமேனியும் உலகப் புகழ் பெற்றவை. கார்த்திகேயனின் உருவம் வாளும் கேடயமும் முன்கரங்களில் கொண்டு சக்தியும், வேலும் பின் கரங்களில் பற்றி பத்ம பீடத்தின் மீது நிற்கும் அழகு சிறப்புமிக்கதாகும்.

மேலும் நடராஜன், சிவகாமி, தனிஅம்மன், ரிஷபாந்தகர், நந்திகேஸ்வரர், அம்மன் உருவங்களும் அக்ஷர தேவர் என்னும் சூல தேவர் உருவச் செப்புத் திருமேனியும் சிறப்புமிக்கவை.

## சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி சிற்பம்

பெரியபுராணத்தில் சேக்கிழார், சண்டிகேஸ்வரருக்கு சிவபெருமான் மாலை சூடுவதை பின்வருமாறு சொல்கிறார்

அண்டபிரானும் தொண்டர் தமக்கு
  அதிபன் ஆக்கி அமைத்து நாம்
உண்டகலமும் உடுப்பனவும்
  சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதந் தந்தோம்
  என்று அங்கு அவர் பொன் தடமுடிக்கு
துண்டமதிசேர் சடைக் கொன்றை
  மாலை வாங்கிச் சூடினார்

சிற்பக்கலை விமர்சகர்கள் சண்டிகேஸ்வரர் இருக்கும் அடக்கமான, முகம் மலர்ந்த, எழிலார்ந்த உருவத்தை இராசேந்திர சோழனின் உருவமென்றே குறிப்பிடும் வழக்கு இன்றுமுள்ளது.

இச்சிற்பத்தின் அருகில் சுவர்களில் அவர் மாடுகள் மேய்ப்பது, வழிபடுவது, தந்தை மறைந்திருந்து பார்ப்பது, பால் குடங்களை உதைத்துத் தள்ளுவது, சண்டேசர் தந்தையின் காலை வெட்டுவது ஆக புராணக் கதைக் காட்சிகள் சிறுசிறு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

## கங்கைகொண்ட சோழபுரத்துக் கல்வெட்டுகளுக்குரியோர்

1. விக்ரம பாண்டியன்
2. வீரராசேந்திர சோழன்
3. மாறவர்மன் குலசேகரன்
4. மூன்றாம் குலோத்துங்கன்
5. முதல் குலோத்துங்க சோழன்
6. உடையார் பாளையம் ஜமீன்தார்
7. விசயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயர்
8. பாண்டியன் சடாவர்மன் சுந்தரபாண்டியன்
9. வானவன் மகாதேவி (இராசேந்திரனின் தேவி)
10. வைப்பூர் திருவேங்கட முடையான் ஏகாம்பரநாதக் காங்கேயன்

11. அம்மங்காதேவி (இராசேந்திரனின் அன்பு மகள், குலோத்துங்கனின் தாய்)
12. கன்னோசியைச் சார்ந்த காஹடவால அரசன், சோழர்களின் நண்பன் மதனபாலன்
13. இராசேந்திர சோழன் (பூர்வ தேசமும், கங்கையும், கடாரமும் கொண்டருளின ஐயப்பன்)
14. இராசாதிராச சோழன் (கல்யாணபுரமும் கொல்லாபுரமும் கொண்டு ஆனைமேல் துஞ்சின அண்ணல்)

## கோயில் கல்வெட்டுகள்

இராசேந்திரன் காலக் கல்வெட்டுகள் இக்கோயிலில் இல்லை. இராசேந்திர சோழன் கோயில் பணிமுடித்துக் கோயிலுக்கு கொடைகள் தந்தபோதிலும் இவை குறுகிய காலத்தில் நிகழ்ந்ததால் கல்வெட்டுகள் பொறிக்க இயலாது போய்விட்டது என்று கருதுவர். இங்குள்ள வீரராசேந்திரன் கல்வெட்டு மிக நீளமானது. 216 வரிகள் கொண்டது. இது இராசேந்திரன் காலத்தில் வெளியிடப்பட்ட ஆணைகளைக் குறிப்பதாக உள்ளது. அவை இராசேந்திரனுடைய 26 மற்றும் 30-ஆவது ஆண்டுகளில் (1044,1048) வெளியிடப்பட்ட ஆணைகளாகும்.

இவற்றில் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு கொடுக்கப்பட்ட நிலக்கொடைகள் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றப்பட்டமையை அறியமுடிகிறது.

கல்யாணபுரமும் கொல்லாபுரமும் கொண்டு யானை மேல் துஞ்சின அண்ணல் என்று குறிக்கப்படும் மன்னனின் கல்வெட்டு இக்கோயிலுக்கு 340 கழஞ்சு பொன்னும் 1,10,000 கலம் நெல்லும் பெற பல ஊர் வருவாய்களை கொடுத்த செய்திகளைச் சொல்கிறது.

முதற்குலோத்துங்கனின் 41-ஆவது ஆண்டுக் கல்வெட்டு (1111) அவனுக்குக் கப்பம் செலுத்தி கீழ்ப்படிந்த அரசனாக இருந்த காகதவல மன்னனின் தனி மெய்க்கீர்த்தியைக் குறிப்பிட்டு வேறு செய்தி ஏதும் சொல்லாது நின்றுவிடுகிறது.

பிற்காலப் பாண்டிய மன்னர்கள் சோழ அரசர்களை வென்று சோழ நாட்டைத் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவந்தவர்கள். எனினும் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் தன் பெயரில் இக்கோயிலில் சுந்தர பாண்டியன் சந்தி ஒன்றை ஏற்படுத்தி வழிபாடுகள் நடைபெறச் செய்துள்ளான். அதே போல விக்கிரம பாண்டியன் ராஜாக்கள் நாயன் என்ற பெயரில் ஒரு சந்திக்கட்டளை பூசை வழிபாட்டை ஏற்படுத்தியதும் இங்குள்ள கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

## கருவூர்த்தேவர்

இவர் இராசராசன் காலத்திலும், இராசேந்திரன் காலத்திலும் வாழ்ந்த அரச குரு. இவருடைய உருவ ஓவியம் தஞ்சைப் பெரியகோயிலில் இராசராசன் உருவத்துடன் காணப்படுகிறது. இவரை 18 சித்தர்களில் ஒருவராய்ச் சொல்வர். இவர் தஞ்சை மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் குறித்து இரு பதிகங்கள் பாடியுள்ளார். அவை ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா என்ற தலைப்பில் உள்ளன. இவர் கங்கைகொண்ட சோளேச் சரத்தானே என்று அழைத்து பதிகப் பாடல்களின் இறுதிவரியை முடிக்கின்றார். அப்பாடல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### கருவூர்த் தேவரின் திருவிசைப்பா

அன்னமாய விசும்பு பறந்தயன தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே.**

உண்ணெகிழ்ந்(து) உடலம் நெக்குமுக் கண்ணா!
ஓலமென்(று) ஓலமிட்(டு) ஒருநாள்
மண்ணினின்று அலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேல்
பண்ணிநின்(று) உருகேன் பணிசெயேன் எனினும்
பாவியேன் ஆவியுள் புகுந்தென்
கண்ணினின்று அகலான் என்கொலோ **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

அற்புதத்தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

ஐயபொட் டிட்ட அழகுவாள் நுதலும்
அழகிய விழியும் வெண்ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளும் சடைமேல்
தரங்கமும் சதங்கையும் சிலம்பும்
மொய்கொள்எண் திக்கும் கண்டநின் தொண்டர்
முகமலர்ந்து இருகணீர் அரும்பக்
கைகள்மொட் டிக்கும் என்கொலோ **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

கருதிவா னவனாம் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பின்இந் திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கண்
பகவனாம் அகஉயிர்க்கு அமுதாம்
எருதுவா கனனாம் எயில்கள் மூன்(று) எரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

அண்டமோர் அணுவாம் பெருமைகொண்(டு) அணுவோர்
அண்டமாம் சிறுமைகொண்(டு) அடியேன்
உண்டவூண் உனக்காம் வகைஎன துள்ளம்
உள்கலந்(து) ஏழபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லில்
குறுகுலர் புரங்கள் மூன்(று) எரித்த
கண்டனே! நீல கண்டனே! **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

மோதலைப் பட்ட கடல்வயி(று) உதித்த
முழுமணித் திரள்அமு(து) ஆங்கே
தயர்தலைப் பட்டங்(கு) உருகிஒன் றாய்
தன்மையில் என்னைமுன் ஈன்ற
நீதலைப் பட்டால் யானும் அவ்வகையே
நிசிசரர் இருவரோடு ஒருவர்
காதலிற் பட்ட கருணையாய் **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன் கண்வைத் தவருக்(கு)
அமலரு(கு) அளிக்கும்நின் பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போல்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென்(று) அறிவினுக்(கு) அறியப்
புகந்ததோர் யோகினில் பொலிந்து
நுண்ணியை எனினும் நம்பநின் பெருமை
நுன்னிடை ஒடுங்கநீ வந்தென்
**கண்ணினுள் மணியிற் கலந்தனை கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

அங்கைகொண்(டு) அமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம்பு அலம்பவந்(து) ஒருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண்டருளினை மருங்கில்
கொங்கைகொண்(டு) அனுங்கும் கொடியிடை காணில்
கொடியள்என்(று) அவிர்சடை முடிமேல்
கங்கைகொண்டிருந்த கடவுளே! **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

மங்கையோ டிருந்த யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேல்
கங்கையோ(டு) அணியும் கடவுளைக் **கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானை**
அங்கையோ டேந்திப் பலிதரி கருவூர்
அறைந்தசொல் மாலையால் ஆழிச்
செங்கையோ(டு) உலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதும் சிவனருட் கடலே.

## இராசேந்திர சோழன் காலக் கோயில்கள்

இராசேந்திர சோழன் காலத்தில் அவனாலும் அவனது நேரடி ஆணை பெற்றும், அவனது மனைவியராலும், அதிகாரிகளாலும் பல கோயில்கள் எழுப்பப்பட்டன. அங்கங்கு காணப்படும் கல்வெட்டுகளின் துணைக்கொண்டு இவற்றைக் கண்டறிந்துள்ளனர். இவை முழுவதும் கருங்கல்லாலோ அல்லது கூரைவரையோ அதற்கு மேல் செங்கல் சுதையாலுமே கட்டப்பட்டவை ஆகும். அவையாவன,

1. அகரம் - கைலாசநாதர்
2. கொத்தகரே கோயில் - மைசூர் மாநிலம்
3. அழகாதிரிபுத்தூர் - சூரியன் கோயில்
4. திருவலஞ்சுழி - பைரவர் கோயில்

5. திருவையாறு - தென்கைலாயம்

6. சிட்டிபெடா - பைரவர் கோயில்

7. சோழபுரம் - இராசராசேசுவரம்

8. திருப்பத்தூர் - அய்யனார் கோயில்

9. கங்கைகொண்டான் - கைலாசபதி கோயில்

10. கோலார் - கோலம்மா கோயில்

11. மேல்பாடி - அரிஞ்சிகை ஈஸ்வரம்

12. பெத்தூரு - பானேசுவரர் கோயில்

13. நாகப்பட்டினம் - நாகைக் காரோணம்

14. நந்திகொண்டா - மல்லேசுவரர் கோயில்

15. வானமங்கை - கைலாசநாதர் கோயில்

16. திருவொற்றியூர் - ஆதிபுரீசுவரர் கோயில்

17. திருவல்லம் - திருவையாறு ஈசுவரம்

18. ஆத்தூர் - சோமநாதசுவாமி கோயில்

19. மாம்பாக்கம் - முருகேசுவரசாமி கோயில்

20. கன்னியாகுமரி - கோனேரீசுவரர் கோயில்

21. மாதோட்டம் - சிவன் கோயில் (ஈழம்)

22. இராமநாதன் கோயில் - பஞ்சவன் மாதேவீசுவரம்

23. செங்குன்றம் - செயங்கொண்ட சோழீசுவரர்

24. நார்த்தாமலை - திருமலைக் கடம்பர் கோயில்

25. திருமழபாடி - வைத்தியநாத சுவாமி கோயில்

26. மன்னார் குடி - இராசகோபாலசுவாமி கோயில்

27. சாத்தூர் - மூலஸ்தானம் உடையார் கோயில்

28. கங்கை கொண்ட சோழபுரம் - கங்கைகொண்ட சோழீசுவரர் கோயில்

29. கூழம்பந்தல் - கங்கைகொண்ட சோழீசுவரர் கோயில்

30. தொட்டமயூர் - சென்னைப் பட்டனம் கோயில் (பெங்களூர் மாவட்டம்)

31. காவந்தண்டலம் - இராசேந்திர சோழீசுவரம் (செங்கை மாவட்டம்)

32. சேரன்மாதேவி - இராமசாமி கோயில், அம்மநாதேஸ்வரர் கோயில்

## திருவொற்றியூர்க் கோயில்

இராசேந்திர சோழன் சென்னையை அடுத்துள்ள திருவொற்றியூர் இறைவனிடம் மிக்க பக்தி கொண்டிருந்தான். இவ்வூரில் இராஜாதித்தன் காலத்தில் அவன் போரில் இறந்த துக்கம் காரணமாக துறவு மேற்கொண்ட வெள்ளன் குமாரன் சதுராநந பண்டிதர் தொடங்கிய காளாமுக மடம் இராசேந்திரன் காலத்திலும் இருந்தது. அம்மடத்தின்தலைவர் இராசேந்திர சோழனைக் கேட்டுக் கொண்டதின் பேரில் செங்கல் சுதையால் இருந்த திருவொற்றியூர்க் கோயில் கற்றளியாக மாற்றப்பட்டது. இதனை கற்றளியாக அமைத்த ஸ்தபதி ரவி என்னும் வீரசோழன் ஆவான். இவன் கருங்கல்லால் மிக அழகாக அமைத்த இக்கோயில் தூங்கானை மாட அமைப்புடையது.

இக்கோயிலின் தென்புற அதிட்டானத்தில் உள்ள சமஸ்கிருதக் கல்வெட்டு

"கருமையான கல்லால் அமைந்த இந்த விமானம் (கருவறை-மூலக்கோயில்) பல்வகையான தோரணங்கள், கூடங்கள், கோஷ்டங்கள், சிறிதும் பெரிதுமான நீடங்கள், சிம்ம முகங்கள், மகரங்கள் ஆகியவை கொண்டு மூன்று தளங்கள் உடையதாக இராசேந்திர சோழனிடம் சதுராநந பண்டிதர் பிரசாதம் (ஆணை) பெற்று ரவி என்னும் வீரசோழ தச்சனால் மிக அழகுடன் ஆதிபுரியில் ஆதிபுரீஸ்வரர் என்ற சிவபெருமானுக்காக (சம்பு) நிர்மாணிக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறது.

## திருவொற்றியூரில் கௌலீசர் சிற்பம்

திருவொற்றியூர் கோயில் காளாமுக மடத்தின்தலைவர் சதுராநந பண்டிதர் இராசேந்திர சோழனிடம் பெற்ற ஆணைக்கிணங்க கருங்கல்லால் கட்டப்பட்டது. எனவே இங்கு சிவபெருமான் பத்மாசனமிட்டு அமர்ந்த கோலத்தில் சூலம், கபாலம், தாங்கி நெஞ்சருகில் தியான முத்திரையும் தோளருகில் சின் முத்திரையும் காட்டி கபாலிகராக அமர்ந்துள்ள அழகிய சிற்பத்துடன் கௌலீசர் சன்னதி அமைந்துள்ளது. இது போன்ற மற்றொரு சிற்பம் கோயில் விமானத்திலும் அமைந்திருப்பது சிறப்பாகும்.

## திருவொற்றியூரில் இராசேந்திரன் மடம்

திருவொற்றியூரில் இராசாதிராசன் கல்வெட்டுகள் இரண்டில் பிரபாகரப்பட்டரின் மனைவியும் ஆரிய தேசத்து மேகலாபுரத்தைச் சேர்ந்தவருமான நாகலவ்வைச்சானி என்ற ஆரியவம்மை என்பவர் கொடை கொடுத்தவராகக் குறிக்கப்பட்டுள்ளார். இவர் இராசேந்திர சோழன் பெயரில் ஒரு மடம் உண்டாக்கி அதற்கு விளைநிலங்களும், மனை இடங்களும் வாங்கிக் கொடுத்து அங்கு சிவனடியார்கள் உணவருந்தவும் ஏற்பாடு செய்துள்ளார். கல்வெட்டு வாசகம் பின்வருமாறு.

"திருவொற்றியூர் உடைய மகாதேவர்க்குத் திருப்பணி
செய்திருக்கும் ஆரியதேசத்து மேகளாபுரத்து பிரபாகரப்பட்டன்
பிராம்மணி நாகலவ்வைச் சாநியான ஆரியம்மை எடுப்பித்த
ராஜேந்திர சோழ மடத்துக்கு மடப்புறமாக ஆரியம்மைகள்
பக்கல் எம்மிலிசைந்த விலைப் பொருள் கொண்டு
விற்றுக் கொடுத்த நிலம்"

மேலும் திருவொற்றியூரில் இராசேந்திர சோழன் மண்டபம், "மண்ணை கொண்ட சோழன் மண்டபம்" ஆகியவை இருந்தமையும் தெரியவருகிறது. மண்ணை என்பது இராசேந்திர சோழன் வென்ற மண்ணைக் கடக்கமாகும்.

## இராசேந்திர சோழன் காலத்து கங்கைகொண்ட சோழபுரம்

விஜயாலய சோழன் காலம் முதல் இராசராச சோழன் காலம் வரை 174 ஆண்டுகள் (850 முதல் 1024 முடிய) தஞ்சை தலைநகராக இருந்தது. இராசேந்திர சோழன் தலைநகரை கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றி (1024 முதல் 1257 முடிய) 233 ஆண்டுகள் தலைநகராக விளங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் பிற பெயர்கள் கங்காபுரி, கங்காபுரம், கங்கை மாநகர் என்பவையாகும்.

### கங்கைகொண்ட சோழபுரத்து நகரில் இருந்த மாளிகைகள்

1. கேரளன் திருமாளிகை
2. முடிகொண்ட சோழன் திருமாளிகை
3. சோழ கேரளன் திருமாளிகை
4. வீர சோழன் திருமாளிகை

### இராசேந்திர சோழன் மதில்

கங்கை கொண்ட சோழபுரம் முதலாம் இராசசேந்திர சோழனின் 17-ஆம் ஆட்சி ஆண்டிற்கு முன்னர் உருவாக்கப்பட்டது. அவ்வூர் இரு பெரு மதிற்சுவர்களுடன் கூடியதாகவும் வெளிப்புற மதிற்சுவர் 6 முதல் 8 அடி அகலத்தில் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு இருந்தது. அதற்கு இராசேந்திர சோழன் மதில் என்றும், உட்புறத்தே கட்டப்பட்டு இருந்த மதிற்சுவருக்கு உட்படை வீட்டு மதில் எனவும் பெயரிடப்பட்டு இருந்தது.

### மண்மலை அகழாய்வு

கங்கை கொண்ட சோழபுரம்-அணைக்கரை சாலையில் சுமார் 3 கி.மீ. தூரத்தில் மண் மலை என்ற கிராமம் உள்ளது. இவ்வூரில் சிறிய மண்மேடு ஒன்று காணப்படுகிறது. இந்த இடத்தின் வரலாற்றுத் தொன்மையினை அறிந்துகொள்வதற்காக இரு அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. முதற்குழியில் 3.90 மீட்டர் ஆழத்தில் செங்கற்கள் பாவப்பட்டது போன்ற

அமைப்பு காணப்பட்டது. இது கட்டடத்தின் ஒரு பகுதியாக இருக்கக்கூடும். இது போன்ற கட்டடப்பகுதி மற்றொரு குழியில் 2.70 மீ ஆழத்திலும் காணப்பட்டது.

இங்கு காணப்பட்ட கட்டடப்பகுதியைக் காணும் பொழுது இங்கும் ஓர் உயர்ந்த கட்டடம் இருந்திருக்க வேண்டும் எனக் கருத முடிகிறது. இங்குள்ள சுவரின் அகலம் 1.10 மீட்டர். இது மாளிகைமேடு அகழாய்வில் காணப்பட்ட சுவரின் அளவில் உள்ளது. எனவே, மண்மலை, மாளிகைமேடு சுவர்கள் ஒரே காலத்தவை என்பதும், கங்கை கொண்ட சோழபுரம் நகர் மண்மலை வரை (தற்போது மாளிகை மேட்டிலிருந்து 3 கீ.மீ தூரம்) விரிவடைந்திருந்தது என்பதையும் அறிய முடிகிறது. கல்வெட்டுகள் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட மாளிகைகள் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்ததை அறிகின்றோம்.

## சோழகங்கம் மதகு அகழாய்வு

இராசேந்திர சோழனது கங்கைப் படையெடுப்பு வெற்றியைக் கொண்டாட வெற்றித்தூணாக ஜலஸ்தம்பமாக (நீர்த்தூண்) அமைக்கப்பட்டது "சோழ கங்கம்" என்னும் ஏரி. தற்போது பொன்னேரி என அழைக்கப்படுகிறது. இவ்வேரி கங்கைகொண்ட சோழபுரம் கோயிலிலிருந்து 3 கீ.மீ. தூரத்தில் ஜெயங்கொண்டம் செல்லும் சாலையில் உள்ளது. இதன் கிழக்குப் பக்கத்தில் காணப்படும் மதகுக்கு அருகில் பண்டைய மதகின் கட்டமைப்பை அறியும் வகையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் இராசேந்திர சோழன் காலத்திய மதகு வெளிப்படுத்தப்பட்டது. அம்மதகில் இரு பக்கங்களிலும் அரை வட்ட வடிவில் செங்கற் சுவர்கள் அமைக்கப்பட்டிருப்பதும், இரு சுவர்களுக்கும் இடையில் தரைப் பகுதியில் 3.60 மீட்டர் நீளமும் 80 செ.மீ அகலமும் உடைய தொட்டி ஒன்று கருங்கல்லால் அமைக்கப்பட்டிருப்பதும் அகழாய்வின் மூலம் தெரிய வந்தது. சோழ கங்கத்தின் நீர், இத்தொட்டியில் விழுந்து, அதன் பிறகு மதகின் துளை வழியாகச் சென்று வெளியேறும் வகையில் அமைத்திருக்கிறது. பக்கச் சுவர்கள் அரைவட்ட அளவில் அமைக்கப்பட்டிருப்பதால் நீரின் வேகம் குறைக்கப்பட்டு கரை உடையாமல் பாதுகாக்கும் நுணுக்கம் பின்பற்றப்பட்டதை அறிகின்றோம். தொட்டி போன்ற பகுதியில் வண்டல் படிந்து விடுவதால் பயிர்களுக்கு வண்டல் மண்ணால் கெடுதல் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டது. இதே போன்ற அமைப்பு பூம்புகாரில் சங்க காலத்தைச் சார்ந்த கட்டடப் பகுதியிலும் இருந்தது அகழாய்வு மூலம் தெரியவந்துள்ளது.

சோழகங்கம் ஏரியில் மதகுக்கு மேல் பகுதியில் மராட்டியர் காலக் கட்டடப் பகுதியும் அதற்கும் மேற்பகுதியில் ஆங்கிலேயர் காலக் கட்டடப்

பகுதியும் காணப்படுகின்றன. ஆதலால் சோழர் காலத்தில் கட்டப்பட்ட மதகை, மராட்டியர் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் சீர்திருத்தியுள்ளார்கள் என்பதும் மற்றும் அதே மதகைத் தொடர்ந்து பிற்காலங்களிலும் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் தெரியவருகிறது.

மேற்கண்ட இடங்களைத் தவிர மாளிகை மேட்டிற்கு அருகிலுள்ள கீழ் மாளிகைமேடு, மாளிகைமேடு புறம் போக்கு நிலங்களிலும் மாதிரி அகழாய்வுகள் (Trial Trenches) மேற்கொள்ளப்பட்டன.

### கல்குளம்

மாளிகைமேடு எனப்படும் இடத்தின் அருகே குளம் ஒன்று உள்ளது. இதனைக் கல்குளம் என மக்கள் அழைக்கின்றனர். இக்குளத்தின் வடக்குப் பக்கத்தில் இரண்டு அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. இதில் 2 மீட்டர் ஆழத்தில் கருங்கற்களைக் கொண்டு அமைத்த நீரோடை ஒன்று காணப்பட்டது. இது கல் குளத்திற்கு நீர் கொண்டு சென்ற மூடிய நீரோடையாக இருக்கவேண்டும். கால்வாயின் மேற்பகுதி 71X30X23 செ.மீ. அளவுள்ள கற்களால் மூடப்பட்டுக் காணப்பட்டது. கால்வாயின் அகலம் 54 செ.மீ. ஆழம் 41 செ.மீ. ஆகும். பக்கவாட்டில் நீர்க்கசிவு இல்லாமல் இருப்பதற்காகவும் வலிமைக்காகவும் இரு பக்கங்களிலும் செம்புராங் கற்களும் களிமண்ணும் குழைத்துக் கட்டப்பட்டுள்ளது. தண்ணீர் வரும் வழி முழுவதும் கருங்கற்களால் பாவப்பட்டும், இந்நீரோடையின் மேற்பகுதி கற்களால் மூடப்பட்டுக் காணப்படுவதால் மாளிகைமேடு அருகே கல்குளம் காணப்படுவதாலும் இக்குளத்தினைச் சோழர் காலத்தில் அரச குடும்பத்தினர் பயன்படுத்தியிருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.

### கோட்டை மதில் சுவர்

கங்கைகொண்ட சோழபுர நகரைச் சுற்றி மதில் சுவர் அமைந்திருக்க வேண்டும். குருவாலப்பர் கோயில் என்னும் ஊரிலிருந்து உள்கோட்டை செல்லும் சாலையின் துவக்கத்தில் இடது புறத்தில் காணப்படும் வயல்களுக்கு அருகில் நீளமான மேடு காணப்படுகிறது. இதனை ஊர் மக்கள் அகழிமேடு என அழைக்கின்றனர். இப்பகுதியைப் பற்றியும் அறிந்துக்கொள்ள இங்கு இரண்டு அகழ்வுக் குழிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் 50 செ.மீ ஆழத்தில் செம்புராங்கற்கள் (Laterite stones) எனப்படும் ஒரு வகைக் கற்களைச் சீராக அடுக்கிக் கட்டிய சுவர் அமைப்பு ஒன்று காணப்பட்டது. கிழக்கு மேற்காக இச்சுவர் அமைப்புத் தொடர்ந்து செல்கிறது. இது சோழர் காலத்தில் கட்டப்பட்ட வெளிப்புறக் கோட்டை மதில் சுவராக இருத்தல் வேண்டும். இதனைக் கல்வெட்டுகள் 'இராசேந்திர சோழன் மதில்' என அழைக்கின்றன.

## கங்கைகொண்ட சோழபுரம் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள்

கங்கைகொண்ட சோழபுரக் கோயிலின் மேற்புறம் அமைந்த மாளிகை மேட்டில் பல ஆண்டுகளாகத் தரையை அகழ்ந்து செங்கற்கள் எடுத்துச் செல்வது வழக்காக இருந்தது. எனவே தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை முதலில் மாளிகை மேட்டில் அகழாய்வை 1980-இல் தொடங்கியது. பின்னர் மண்மலை, கல்குளம், சோழகங்கம் மதகு என குறிப்பிட்ட இடங்களில் 1996 வரை அகழாய்வுகளை நடத்தியுள்ளது.

அகழாய்வில் மாளிகை மேட்டில் ஒரு மாளிகையின் செங்கற்களால் ஆன அடிப்பகுதியும் தூண்கள் நிறுத்துவதற்கான சிறு குழி உடைய கற்களும் வெளிப்படுத்தப்பட்டன. சுவர்கள் 1 மீட்டர் அளவு கனமுடையவையாக உள்ளன.

உயரமான கட்டடம் எழுப்புவதற்கு வசதியாக இவ்வடிச் சுவர்கள் அருகருகே இரட்டைச் சுவர்களாகக் காணப்படுகின்றன. உயர்ந்த சுவர்கள் மீது மரத்தால் ஆன உத்திரங்களும், கூரைச் சட்டங்களும் அமைத்து சிறு தட்டோடுகள் வேயப்பட்டிருந்தன. பல்வேறு படையெடுப்புகளில் நிகழ்ந்த மாளிகைகளை எரிக்கும் நிகழ்வுகளாலும் காலப்போக்கின் அழிவுகளாலும் மரச்சட்டங்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் அவற்றை அடித்து இணைக்கப் பயன்பட்ட சதுர இரும்பு ஆணிகள் பல்வேறு அளவுகளிலும் கிடைத்துள்ளன. வேய்ந்த ஓடுகளும், அழகுபடுத்திய ஓடுகளும், ஆணிகளும் கிடைத்துள்ளன.

வழிபாட்டுக் கெண்டிப்பாத்திரங்களின் மூக்குகள், அலங்கரிக்கப்பட்ட சந்தனம் அரைக்கும் கல், குறுவாளின் கைப்பிடி, வளையல்கள், மணிகள், பல்வேறு பானை ஓடுகள், சீன, அரேபியப் பானை ஓடுகள், கழஞ்சு பொன் காசு வார்க்கும் வார்ப்புகள், கருப்பு கண்ணாடி வளையல் துண்டுகள், வட்டச்சில்லுகள், தந்தத்திலான அலங்காரப் பொருள்கள் ஆகிய தொல்பொருட்கள் அகழாய்வில் கிடைத்தவற்றில் குறிப்பிடத் தக்கவையாகும்.

## கடாரத்தில் அகழாய்வு

கடாரத்தில் சோழர் ஆட்சியும் வர்த்தகமும் சிறந்திருந்த செய்தி அகழாய்வின் மூலம் வெளிப்பட்டு நமக்கு தெரியவருகிறது. அன்றைய கடாரமே இன்றைய மலேயா ஆகும். அங்குள்ள பூஜாங் நிலப்பரப்பில் நடைபெற்ற அகழாய்வில் பல பழங்காலப் பொருட்கள் கிடைத்துள்ளன. சிதைந்த நிலையில் பூஜாங் பள்ளத்தாக்கில் முதல் ஆலயம் 1840-இல் கண்டறியப்பட்டது. மேலும் 50க்கும் மேற்பட்ட சிறு வழிபாட்டுத் தலங்கள்

சிதைந்த நிலையில் அடையாளம் காணப்பட்டன. கெடா மலையின் தென்பகுதியில் உள்ள 'மொபோக்' அருகில் உள்ள பத்துபகாட் ஆற்றங்கரை தோட்டத்தில் கண்டறியப்பட்ட கோயில் 40 அடி சதுரமாகவும், கருவறை 20 அடி சதுரமாகவும் கருங்கல்லில் கட்டப்பட்டதாகும்.

## இராசேந்திரன் காலத்தில் பழையாறை

முதலாம் இராசேந்திரன் கி.பி. 1015-இல் கோயிலுக்குரிய நிலங்களை அளந்திட ஆணை பிறப்பித்தான். அந்த ஆணையை பழையாறை அரண்மனையில் இருந்து பிறப்பித்தான். பழையாறைக்கு முடிகொண்ட சோழபுரம் என்ற பெயர் உண்டு. முடிகொண்ட சோழப் பேராறு என்பது முதலாம் இராசேந்திரன் வெட்டுவித்தது ஆகும்.

பழையாறை கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை, நந்திபுரம், முடிகொண்ட சோழபுரம், இராசராசபுரம் எனும் பெயர்களைத் தாங்கி சோழர்களின் இரண்டாவது தலைநகராய் விளங்கியுள்ளது. இந்நகரில் இருந்த கோயில்கள்:

1. பட்டீச்சுரம்
2. அரிச்சந்திரம்
3. இராசராசேச்சுரம்
4. திருச்சந்தி முற்றம்
5. பழையாறை வடகாளி
6. நந்திபுர விண்ணகரம்
7. பழையாறை மேற்றளி
8. பழையாறை தென்காளி
9. பஞ்சவன் மாதேவிச்சுரம்
10. அருண்மொழி தேவிச்சுரம்
11. சுந்தரப் பெருமாள் கோயில்
12. கோமிராதப் பெருமாள் கோயில்

## இராசேந்திர சோழனின் கல்வெட்டு வாசகங்கள்

இராசேந்திர சோழனின் கல்வெட்டு வாசகங்கள் இதுவரை ஏறத்தாழ 320 அச்சாகியுள்ளன. அவை அச்சான தொகுதிகள்.

| | |
|---|---|
| தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதிகளில் | - 230 |
| எபிகிராபிகா கர்னாடிகா தொகுதிகளில் | - 50 |
| புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டு தொகுதியில் | - 10 |
| திருவாங்கூர் ஆர்காலஜிகல் சீரிஸ் தொகுதிகளில் | - 10 |
| செந்தமிழ் இதழ்களில் | - 2 |
| தமிழ்ப்பொழில் இதழ்களில் | - 2 |
| தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் தொகுதிகளில் | - 9 |
| எபிகிராபிகா இண்டிகா தொகுதிகளில் | - 3 |

இன்னும் கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் மற்றும் பிற தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுத் தொகுதிகளிலும் நிறைய அச்சாகியுள்ளன.

## இராசேந்திர சோழனின் செப்பேடுகள்

### இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடு

இச்செப்பேடு அரக்கோணம் பகுதியில் உள்ள திருவாலங்காட்டில் 1905-இல் கண்டறியப்பட்டது. 31 ஏடுகள் உடைய இச்செப்பேடு பெரிய வளையம் மற்றும் முத்திரையுடன் கூடியது. இதன் எடை 8 மனு 2 வீசை 20 பலம் என்ற குறிப்பு ஆண்டறிக்கையில் உள்ளது. இது சுமார் 100 கிலோ எடைக்குச் சமமானது. சமஸ்கிருதம் மற்றும் தமிழ்ப் பகுதிகள் அடங்கிய இச்செப்பேடு 10 ஆண்டுகள் இடைவெளியில் இருபகுதிகளும் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இச்செப்பேடு இராசேந்திர சோழனின் 6-ஆவது ஆட்சி ஆண்டில் (1018) எழுதப்பட்டதாகும்.

பத்தாவது ஏட்டின் முன்புறம் சமஸ்கிருதப் பகுதி முடிந்து பதினோராவது ஏட்டில் தமிழ்ப்பகுதி தொடங்குகிறது. இந்த 10-ஆவது ஏட்டில் விடப்பட்ட இடைவெளியில் ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட எழுத்துக்களில் இடைச் செறுகலாக செப்பேட்டுடன் தொடர்புடைய வாசகப் பகுதி பொறிக்கப்பட்டுள்ளது. இந்த வாசகப் பகுதி பழையனூர் அம்மை நாச்சியார்க்கு 25½ வேலி நிலம் அம்மைச்சேரி என்ற ஊரில் கொடுத்த செய்தியை கூறுகிறது.

மூலச்செப்பேட்டு வாசகம் பழையனூர் மகாதேவர்க்கு சிங்களாந்த சதுர்வேதி மங்கலச் சபையினுடைய பிரம்ம தேயமாய் இருந்த பழையனூர் நிலங்களைப் பிரித்து வெள்ளான் வகையாக மாற்றிக் கொடுத்த செய்தியைச் சொல்கிறது. இதன் மூலம் பொன்னாக 193 கழஞ்சும் கிடைத்தது. 3288 + கல நெல் கோயிலுக்கு கிடைத்தது.

பழையனூர் " வேளாளர் நீலி" கதையுடன் தொடர்புடைய ஊர் என்பதை இங்கு கருத்தில் கொள்ளவேண்டும்.

இச்செப்பேட்டின் சமஸ்கிருதப் பகுதியில் விஜயபாலன், ஆதித்தன், பராந்தகன், இராஜாதித்தன், சுந்தர சோழன் பற்றிய வெற்றிச் செய்திகள் உள்ளன. சுந்தர சோழன் இறந்த போது அவனது மனைவியும் இராஜராஜனின் தாயுமான வானவன் மாதேவி உடன் கட்டை ஏறிய செய்தியும் இராஜராஜன் அமரபுயங்கனை வென்ற செய்தியும் உள்ளன. இராசேந்திர சோழனின் படைத்தலைவன் கங்கை வரை சென்று மாற்றரசர் களை வெற்றிக் கொண்டு கங்கைநீர் கொண்டு வந்த செய்தியும் கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழகங்கம் ஏரியில் அந்நீரைச் சேர்த்து நீரால் ஆகிய வெற்றித்தூண் (ஜலஸ்தம்பம்) நாட்டிய செய்தியும் வர்ணிக்கப்படுகின்றது.

## கரந்தைச் செப்பேடு

இராசேந்திர சோழன் காலத்திய நான்கு செப்பேடுகள் கிடைத்துள்ளன. அவை கரந்தைச் செப்பேடு, திருக்களர் செப்பேடு, எசாலம் செப்பேடு, திருவாலங்காடு செப்பேடு ஆகியவையாகும்.

கரந்தைச் செப்பேடு தஞ்சாவூர்-அம்மாபேட்டை அருகில் புத்தூர் என்ற இடத்தில் நிலத்தடியிலிருந்து எடுக்கப்பட்ட ஒன்று 1950-இல் ஆய்வாளர்கள் கவனத்திற்கு வந்தது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் அதனைப் பெற்று பாதுகாப்பாக வைத்திருந்ததால் கரந்தைச் செப்பேடு என்று பெயர் பெற்றது.

மொத்தம் 57 தகடுகளும், 2 வளையங்களும் உள்ளன. செப்புத்தகடுகள் 3 பிரிவுகளாகத் துளையருகில் எண்ணிடப்பட்டுள்ளன. இரண்டு பிரிவாக வளையங்களில் கோர்த்து வைக்கப்பட்டிருந்தவையாகக் கருதலாம். இவற்றின் மொத்த எடை 9582 தோலா என்ற குறிப்புள்ளது. இது 109.20 கிலோ எடைக்குச் சமமாகும்.

இராசேந்திர சோழனின் தாய் திரிபுவனமாதேவி பெயரில் சதுர்வேதிமங்கலம் உண்டாக்கி அதனில் 1080 பிராமணர்களுக்கு பங்கு கொடுத்து அக்ரஹாரம் உண்டாக்கியதை இச்செப்பேடு குறிக்கிறது. இதனை உண்டாக்கியவன் நாரக்கன் மாராயன் ஜனநாதனாகிய இராசேந்திர சோழ பிரம்மராயன் ஆவான். இராசேந்திர சோழனின் 8-ஆவது ஆட்சி ஆண்டில் 107-ஆம் நாளில் ஆணை பெறப்பட்டு 380-ஆவது நாளில் நிறைவேற்றப்பட்டது. அதாவது 1021-இல் வழங்கப்பட்ட செப்பேடு ஆகும். திரிபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலம் இன்றைய அம்மாபேட்டை அருகில் உள்ள உடையார் கோயில் பகுதியாகும். இதனில் முதல் பகுதி சமஸ்கிருதத்தில் 3 ஏடுகளிலும், இரண்டாம் பகுதி தமிழில் 22 ஏடுகளும், மூன்றாம் பகுதி 1080 பிராமணர் பேர்களைக் குறிப்பிடும் 32 ஏடுகளிலும் உள்ளன.

இராசேந்திர சோழன் பெரும்பற்றப்புலியூரில் (வியாக்ராக்ரஹாரம்) முகாமிட்டு அங்கிருந்த மாளிகையில் கீழை மண்டபத்தில் இருந்த போது நாரக்கன் மாராயன் சதுர்வேதிமங்கலம் அமைக்க ஆணை பெற்ற செய்தியும் உள்ளது. இச்செப்பேடு சமஸ்கிருதப் பகுதியில் சுந்தரசோழன், இராசராசன் பற்றிய வரலாற்றுச் செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. இராசேந்திரனின் வட இந்தியப் படையெடுப்புகள், இலங்கை வெற்றி, கடார வெற்றி ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. கம்போஜ மன்னன் (கம்போடியா) பரிசாக ஒரு தங்கத்தேரினை அனுப்பியமையும் அதனில் இவன் போர்க்களங்கள் சென்று வென்ற செய்தியும் சொல்லப்பட்டுள்ளன.

சதுர்வேதிமங்கலம் உண்டாக்க கொடுக்கப்பட்ட ஊர்கள் 54. மொத்த நிலப்பரப்பு 3153 X வேலி. வரிவிலக்கு தரப்பட்ட நிலப்பரப்பு 619 X வேலி. வரிவிதிக்கப்பட்ட நிலப்பரப்பு 2515 X வேலி. வசூலிக்கப்பட்ட நெல் 15050 கலம், காசு 32, அக்கம் 65.

## திருக்களர் செப்பேடு

தஞ்சை மாவட்டம் திருக்களர் சிவன் கோயிலில் 5 சோழச் செப்பேடுகள் கண்டறியப்பட்டு 1902-ஆம் ஆண்டு கல்வெட்டறிக்கையில் பதிவாகின. அவை முறையே முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசராசன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவை.

இராசேந்திரன் செப்பேடு ஒரு ஏட்டில் முன்னும், பின்னும் பதியப்பட்ட 30 வரிகளிலான வாசகம் உள்ளது. இவனது "திருமன்னி வளர" என்ற மெய்க்கீர்த்தி 28 வரிகளில் உள்ளது. செப்பேட்டுச் செய்தி இரண்டு வரிகளில் மட்டுமே உள்ளது. அது பின்வருமாறு

"ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு பதினெட்டாவது அருமொழி தேவ வளநாட்டு புறங்கரம்பை நாட்டு வெங்கூர்க்கள் திருக்களர் மாதேவர் தேவதானம் நிலம் அரையே 19 மா, ஒரு காணி முந்திரிகைந் நிலம் வளையிற் சுற்று மிகுதி குறைவு உள்ளடங்க".

## எசாலம் செப்பேடு

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்திலிருந்து 8 கி.மீ தொலைவில் உள்ள எசாலம் சிவன் கோயில் திருப்பணியின் போது இச்செப்பேடும் செப்புத்திருமேனிகளும் நிலத்தடியிலிருந்து கிடைத்தன. தற்போது இச்செப்பேடு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் உள்ளது. 15 ஏடுகளைக் கொண்ட இச்செப்பேட்டில் முதல் மூன்று ஏடுகள் சமஸ்கிருதப்பகுதியும் எஞ்சிய 12 ஏடுகள் தமிழ்ப்பகுதியும் கொண்டுள்ளன.

இராசேந்திர சோழனின் 24 (1036)ஆவது ஆட்சி ஆண்டில் அவனது குரு சர்வசிவ பண்டிதர் வேண்டுகோளுக்கு இணங்க அவர் எழுப்பிய திருவிராமீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு 90X வேலி நிலமும் அதன் வருவாயான 3400 கல நெல்லும் கொடுக்க வெளியிட்ட ஆணையாக இச்செப்பேடு அமைந்துள்ளது. இவ்வாணை இராசேந்திரசோழன் காஞ்சிபுரத்திலிருந்த மாளிகையிலிருந்து வழங்கியதாகும். வாய்மொழி ஆணை, வரிப்பொத்தகத்தில் எழுதியவாசகம், இது தொடர்பான அலுவலர்கள் என செப்பேட்டின் தமிழ்ப்பகுதி 345 வரிகள் வரை உள்ளது.

## இராசேந்திரசோழன் முத்திரைகளில் காணப்படும் சின்னங்கள்

இராசேந்திரசோழன் வெளியிட்ட திருவாலங்காடு, கரந்தை, எசாலம் செப்பேடுகளுடன் கூடிய முத்திரைகளில் பல்வேறு சின்னங்கள் காணப்படுகின்றன இவை அவனது ஆட்சி எல்லைகளையும் வென்ற அரச குலங்களையும், வெற்றிகளையும் உணர்த்துபவை. மேலும் மங்கலச் சின்னங்களும் இடம் பெற்றுள்ளன.

திருவாலங்காட்டுச் செப்பேட்டு முத்திரையில் சாமரங்கள், அதனிடையே வெண்கொற்றக்குடை, வில் அதன் மீது இரு மீன்கள், புலி, குத்து விளக்குகள், வேல், அங்குசம், ஈட்டி ஆகியவையும் வில்லின் உட்பகுதியில் மத்தளம், முக்காலியின் மீது சங்கு, கடாரத்தரசனை வென்று கொண்டுவந்த வித்யாதரத்தோரணம், புதவம், சாளுக்கியரின் பன்றி, ஸ்வஸ்திகம் ஆகியவையும் உள்ளன.

கரந்தைச் செப்பேட்டு முத்திரையில் வெண்கொற்றக்குடை, சாமரங்கள், மீன்கள், புலி, குத்து விளக்குகள், கொடிகள், அங்குசம், குத்துவாள், மேளம், பன்றி, ஸ்வஸ்திகம், தாமரை, முக்காலி மீது சங்கு அல்லது படையல் உள்ளன.

எசாலம் செப்பேட்டில் சக்கரவர்த்தியைக் குறிக்கும் சக்கரம், ஸ்வஸ்திகம், மேகம், வெண்கொற்றக்குடை, சாமரங்கள், வில்லின் மீது மீன்கள், புலி, குத்துவிளக்குகள், வாள்கள், அங்குசம், ஈட்டிகள், வில்லின் கீழாக பன்றி, முக்காலி மீது சங்கு, வித்யாதரத்தோரணம் ஆகியவையும் உள்ளன.

## இராசேந்திர சோழனுடைய செப்பேட்டு வாசகங்களைப் பொறித்தவர்கள்

இராசேந்திரனின் கரந்தைச் செப்பேடு, திருவாலங்காடு செப்பேடு மற்றும் இராசஇராசன் காலத்திய ஆனைமங்கலம் (பெரிய லெய்டன்) செப்பேடு ஆகியவற்றிலிருந்து மொத்தம் ஏழு நபர்கள் செப்பேட்டு வாசகங்களைப் பொறித்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் பின்வருமாறு:

1. கிருஷ்ணன்
2. வாசுதேவனாகிய இராசஇராசப் பேராசாரியன்
3. ஆராவமுது
4. அரங்கள் திரிபுவனமாதேவி பேராசாரியன்
5. தாமோதரன்
6. கிருஷ்ணன்
7. புருஷோத்தமனாகிய இராசேந்திர சிம்கப் பேராசாரியன்

இவர்களில் 3, 4, 5, 7 ஆகிய நால்வர் திருவாலங்காடு செப்பேட்டிலும், 2, 4, 5, 6, 7 ஆகியவர்கள் ஆனைமங்கலம் (பெரிய லெய்டன்) செப்பேட்டிலும், 4, 7 ஆகிய இருவர் கரந்தைச் செப்பேட்டிலும் காணப்படுகின்றனர்.

செப்பேடுகள் எண்ணிக்கையில் அதிகம் இருந்ததால் ஒன்றிற்கு மேற்பட்டோர் பணிபுரிந்தனர் என்று கருதலாம். ஒரே செப்பேட்டில் எழுத்து வடிவங்கள் மாறுபட்டுக் காணப்படுவதால் ஒன்றுக்கு மேற்பட்டோர் கைத்திறமையில் அவை அமைந்தன என்பது தெளிவாகிறது.

## ஏகநாயகன் திருவாசல்

ஏகநாயகன் என்ற சொற்றொடரால் இறையகத்து திருவாசலை முதலாம் இராசேந்திர சோழன் காலத்து பெருமக்கள் குறிப்பிடலாயினர். முதல் இராசேந்திரனின் மூன்றாம் ஆட்சி ஆண்டில் ஏகநாயகன் திருவாசலில் இரவில் விளக்கு எரிக்க 45 ஆடுகள் வழங்கப்பட்டதை கல்வெட்டு குறிப்பிடுகிறது. "ஏகநாயகனை இமையவர்க்கரசை" என்பது திருவிசைப்பா.

## அய்ப்பசி திருநாள்

முதலாம் இராசேந்திரன் காலத்தில் செய்யாறு வட்டம் பிரம்மதேசத்தில் உள்ளதிருமால் கோயில் ஐப்பசித் திருநாளுக்கு திருவேங்கடமலையில் இருந்து நூற்றுக் கணக்கான ஸ்ரீவைணவர்கள் வருவது வழக்கமாயிருந்தது. இந்த திருவிடைக்கழி அய்ப்பசித் திருநாள் சேவிக்க வந்த வைணவருக்கு ஒன்பது நாளும் சோறிடப்பட்டதை அங்குள்ள கல்வெட்டு சொல்கிறது.

## திருவண்ணாமலை தீபமும் முதலாம் இராசேந்திரனும்

திருக்கார்த்திகைத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருவது அனைவரும் அறிந்ததே. இவ்விழா சோழப் பெருமன்னன் முதலாம் இராசேந்திரன் காலத்தில் இருந்தே சிறப்பாக கொண்டாடப் பெறுகிறது என்பதை கல்வெட்டு மூலம் அறியலாம். திருக்கார்த்திகை நாளில், திரு அருணாசலச்சுவரர் வீதிவுலாவிற்கும், அடியவர்களுக்கு உணவு அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. பேரகல் நாற்பது சிற்றகல் இருபது வழங்க நெல் ஐங்குறுணி வழங்கப்பட்டது. அகல் என்பது அகல் விளக்குகளைக் குறிப்பதாகக் கருதலாம்.

## திருவாய்மொழி

இராசேந்திர சோழனின் கல்வெட்டுகளில் தான் முதன் முதலாய் திருவாய்மொழி என்ற சொல் இடம் பெற்றது. நாலாயிர திவ்ய பிரபந்தம் தொகுத்த நாதமுனி முதலாம் இராசேந்திரன் காலத்தவன். முதலாம்

இராசேந்திரன் காலம் முதல் நாலாயிர திவ்யபிரபந்தம் பிரபல மடைந்தது. எண்ணாயிரச்சபையினர் திருவாய்மொழி இசைக்க, நாங்கூராகிய இராசராச நல்லூரில் 45 வேலி நிலத்தை இராசராச விண்ணகருக்கு அளித்துள்ளனர். திருவாய்மொழிப் பாடல்களை இசைக்கும் வைணவர்களுக்கு பூசை செய்பவரை விட அதிக ஊதியம் வழங்கப்பட்டது.

## புதியீடு விழா - அறுவடைத் திருநாள்

தாங்கள் செய்த வேளாண்மையின் பயனை அறுவடை செய்து மகிழ்ச்சி அடையும் நாளை அன்றைய மக்கள் மகிழ்ச்சியுடன் விழாவாக கொண்டாடியுள்ளனர். அவ்வாறு கொண்டாடும் பழக்கம் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் தமிழகத்தில் வழக்கத்தில் இருந்தது என்பதை கல்வெட்டுகள் மூலம் அறியலாம். இவ்விழாவிற்கு "புதியீடு" என்றும் அவ்வாண்டின் முதல் அறுவடை என்றும் பொருள் கொள்ளலாம். அதனை திருவொற்றியூர் கல்வெட்டு மூலம் அறியலாம்.

## உருவச்சிலை

முதலாம் இராசேந்திரன் காலத்தைச் சார்ந்த ஒரே ஓர் உருவச்சிலை இராசராசனின் அரசி சோழமாதேவியின் உருவமாகும். அது காளஹஸ்தி கோயிலில் உள்ளது. அதன் காலமும் விபரமும் உருவச்சிலையின் அடிப்பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இராசேந்திர சோழ தேவனின் உத்தரவின் படி நிச்சப்பட்டாலகன் உருவாக்கியது என்ற செய்தியும் உள்ளது. இது தான் தென் இந்தியாவிலேயே முதன் முதலாகக் காலத்தை குறிப்பிட்டுள்ள உருவச் சிற்பமாகும்.

## அரசகுல படிமங்கள்

1. தஞ்சை பெரிய கோயிலில் குந்தவை நிறுவிய அவனது தந்தை சுந்தரசோழன் படிமம்
2. இராசராசன், அவன் பட்டத்தரசி உலக மாதேவி படிமங்கள்
3. காமரவல்லியில் செம்பியன் மாதேவியின் படிமம்
4. இராசேந்திர சோழன், அவனது பட்டத்தரசி சோழ மாதேவி ஆகிய இருவரது உருவங்களையும் ஒத்ததாக தஞ்சை பெரிய கோயிலில் செதுக்கப் பெற்ற படிமங்கள்
5. கோனேரி ராஜபுரத்தில் கண்டராதித்த சோழனின் சிற்பம்

## வணிகப்பொருட்கள்

நெல், அரிசி, உப்பு, பருப்பு, அவரை, துவரை, ஆமணக்குக் கொட்டை, எள், கடுகு, சீரகம், வெங்காயம், புளி, கருப்பட்டி, பனவெல்லம், மஞ்சள், பாக்கு, மிளகு, சுக்கு, தேன், குதிரை, யானை, ஒட்டகம், எருது, காளை, முத்து, சிப்பி, புடவை, பருத்திப் புடவை, நூல் புடவை, பட்டு, நூல், இரும்பு,

செம்பு, பொன், வெள்ளி, வெண்கலம், சந்தனம், அகில், பன்னீர், கற்பூரம், சீனக்கற்பூரம், புனுகு, சவ்வாது, மெழுகு முதலியவை வணிகப் பொருட்களாகக் கல்வெட்டுகளில் அறியப்படுகின்றன.

## கொங்கு நாடு

கொங்கு நாடு, சோழர்கள் ஆட்சியில் "மண்டலம்" எனப்பெயர் பெற்றது. பிற்கால சோழர்கள் தங்கள் நாடுகளை ஏழு மண்டலங்களாக பிரித்தனர். கொங்கு நாட்டை "அதிராச மண்டலம்" எனப் பெயரிட்டனர். கொங்கு மண்டலம் 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது.

முதலாம் இராசேந்திர சோழன் கங்கர்களின் தலைக்காட்டை கி.பி. 1004-இல் கைப்பற்றினான். அதனால் அதனைச் சார்ந்திருந்த கொங்கு நாடு முழுவதும் சோழர்கள் ஆட்சியின் கீழ்வந்தது. சோழர்கள் நாட்டை மண்டலங்களாகப் பிரித்த போது கொங்கு நாட்டை சோழ கேரள மண்டலம் என்ற பிரிவில் வைத்து ஆண்டனர்.

## மாந்தை, பொலன்னருவை, திருகோணமலை

மாந்தை என்னும் மன்னாரில் இரு சோழர் காலக் கோயில்கள் இருந்தன. அவை. 1. ராசராச ஈஸ்வரம், 2. திருவிராமேஸ்வரம் ஆகும். இலங்கை மேலைக் கடற்கரையில் உள்ளது. இவ்வூர் மாதோட்டம் என்று பெயர் பெற்றிருந்தது. இது ஒரு வணிகத் துறைமுகமாகும். இலங்கையில் உள்நாட்டுப் பகுதியில் உள்ள பொலன்னருவை சோழர்களின் தலைநகராக விளங்கியது. இங்கு வானவன் மாதேவிஸ்வரம் முதலிய ஐந்து சிவாலயங்கள் சோழர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன. தமிழகம் சார்ந்த வேளைக்காரப் படையினரின் கல்வெட்டுகளும் உண்டு. சோழர்களை வென்ற பிறகு இலங்கை அரசர்களுக்கும் தலைநகராக விளங்கியது. பல புத்த ஆலயங்களும், மடங்களும் இங்கு கட்டப்பட்டன. பொலன்னருவையில் கிடைத்த ஆதாரங்களைக் காட்டிலும் திருகோணமலையில் அதிக அளவில் சோழர் ஆட்சிக்குரிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இது இலங்கைக் கீழைக் கடற்கரையில் உள்ள துறைமுகமாகும். தென் கிழக்காசிய நாடுகளுக்கு செல்ல திருகோணமலை முக்கிய இடமாக சோழர்களுக்கு பயன்பட்டது.

## கங்கை நீர் கொணர்ந்த தளபதி

அரையன் இராசராசன் எனும் விக்கிரம சோழ சோழியரையன் கங்கை நீர் கொணர்ந்தவன் ஆவான். இவனது சிறப்புப்பெயர்கள் : 1. நால்மடி பீமன், 2. சோழன் சக்கரன், 3. சாமாந்த பரணன், 4. வீர பூஷணம், 5. எதிர்த்தவர் காலன், 6. சயசிங்ககுல காலன்

## கங்கைகொண்ட சோழபுரத்தில் வேளம்

போரில் சிறை பிடிக்கப்பட்டோர் (ஆண்களும், பெண்களும்) பெரும்பாலும் வேளத்தில் அமர்த்தப்பட்டனர். அரண்மனைப் பணியாளர்களுக்கென தனி விடுதிகளும், தெருக்களும் அமைந்திருந்தன. அவ்விடுதிகளுக்கு வேளம் என்று பெயர்.

சோழ மன்னர்களின் போர்ப் படையில் 60,000 யானைகளும், பல்லாயிரக்கணக்கான குதிரைகளும் இருந்துள்ளன. மேலும் இராசேந்திரன் 9 லட்சம் படை வீரர்களுக்கு தலைமை ஏற்றுச் சென்ற செய்தி கர்நாடக மாநிலம் தார்வார் மாவட்டம் ஹோட்டூர் என்ற பொட்டியூரில் உள்ள சத்யாசிரயனின் சகம் 929 (1007) கல்வெட்டில் உள்ளது. இராசேந்திரன் இளவரசனாக இருந்த போது எடுத்த படையெடுப்பாகும். இக்கல்வெட்டில் இவனது முழுப்பெயர் 'ராஜராஜ நித்ய விநோத ராஜேந்திர வித்யாதர நுருமாடி சோழன்' என்பதாகும்.

## சாலபோகம்

கோயில்களில் உணவுச் சாலைகள் இருந்தன. இதன் பராமரிப்பிற்காக விடப்பட்ட நிலம் அல்லது ஊர் சாலபோகம் எனப்பட்டது. மேலும் உணவுச் சாலைக்கு இராசேந்திரசோழன் சாலை எனப் பெயரிட்டிருந்தனர்.

## இராசேந்திரன் காலத்திய எண்ணாயிரம் கல்விச் சாலை

விழுப்புரம் பகுதியில் உள்ள எண்ணாயிரம் என்ற ஊர் இராசேந்திர சோழன் காலத்தில் ராஜராஜ சதுர்வேதிமங்கலம் என்றழைக்கப்பட்டது. இங்கும் அருகில் உள்ள ஊரான பனையவரத்திலும் ராஜராஜ விண்ணகர், பரவை நங்கை ஈஸ்வரம், ராஜேந்திர சோழ விண்ணகர், ராஜேந்திர சோழன் மண்டபம் ஆகியவை இருந்தன. மேலும் இங்கு ஒரு வேத பாடசாலை இதற்கு இராசேந்திர சோழன் காலத்தில் அவனது ஆணைப்படி, நிலவருவாயும், வரி வருவாயும் நல்கப்பட்டன. அங்கு பயில்வோருக்கு தங்கிப்பயிலும் வசதியும் இருந்தது.

பிராமணர்களுக்கான இந்த வேத பாடசாலையில் 270 இளநிலை மாணவர்களும், 70 முதுநிலை மாணவர்களும், 10 ஆசிரியர்களும் இருந்தனர். இவர்களில் இளநிலையினர் பயின்ற பாடங்களும் நபர்களும் பின்வருமாறு:

| | |
|---|---|
| 75 பேர் - ரிக்வேதம் | 20 பேர் - தலவகாரசாமம் |
| 75 பேர் - யஜுர் வேதம் | 20 பேர் - வாஜ சனேயம் |
| 20 பேர் - சந்தோக சாமம் | 10 பேர் - அதர்வனம் |
| 40 பேர் - ரூபாவதாரம் | 10 பேர் - பௌதாயநீய கிரியாகல்பம், மற்றும் காணம் |

முதுநிலை மாணவர்கள்

25 பேர் - வியாகரணம் 25 பேர் - பிரபாகரம்

10 பேர் - வேதாந்தம்

பயின்றனர். ஆசிரியர்கள் எண்ணிக்கையும் பயிற்றுவித்த பாடங்களும் பின்வருமாறு:

3 பேர் - ரிக்வேதம் 3 பேர் - யஜூர் வேதம்

ஒருவர் - சந்தோகம் ஒருவர் - கலவ காரசாமம்

ஒருவர் - வாஜ சநேயம் ஒருவர் - பௌதாயநீய கிரியா, கல்பம், காணம்

இவர்களுக்கு உணவிற்கான நெல், அணிய ஆடை, எண்ணெய் தேய்த்துக் குளிக்க எண்ணெய், தங்குமிடம் ஆகியவை கோயில் சார்ந்து தரப்பட்டன. இராசேந்திர சோழன் மண்டபத்தில் உணவளிக்கப்பட்டது.

இவர்கள் தவிர "கோஷ்டி"யாகத் திருப்பதியம் பாடுபவர்களும் இருந்தனர். வெண்ணெய் கூத்தரின் ஜன்மாஷ்டம் (கிருஷ்ண ஜெயந்தி) நாளில் வேதபாராயணம், திருப்பதியம் பாடுதல் முதலியவை சிறப்பாக நிகழ்ந்தன.

இவ்வூரில் இவர்களது வசதிக்காகவும் ஏனையோர் வசதிக்காகவும் மூன்று தண்ணீர் பந்தல்களும் இருந்தன. அவை உணவு வழங்கப்பட்ட இராசேந்திர சோழன் மண்டபம், பரவை ஈஸ்வரமுடையார் கோயில், இராசேந்திர சோழ விண்ணகர் ஆழ்வார் கோயில் ஆகியவற்றின் முன்பாக அமைந்திருந்தன. மேலும் இவ்வூரில் ஒரு தர்மபள்ளியும் ஆசிரியரும் இருந்த செய்தியும் அறியக்கிடைக்கிறது.

## சபை கூட்டத்திற்கு நிழல் தந்த இராசேந்திர சோழன் புளியமரம்

கோனேரி ராஜபுரத்தில் உள்ள இராஜாதிராஜனின் கல்வெட்டு (கி.பி. 1053) வாசகத்தின் ஒரு பகுதி கீழ்வருமாறு உள்ளது.

> "பாவைக்குடி பெருங்குறி சபையோம் இவ்வாட்டை
> கற்கடகநாயற்று பூர்வ பக்ஷத்து வியாழக்கிழமை பெற்ற
> அத்தத்தி நான்று நம்மூர் சுத்தமல்லி வாய்க்கால்
> கரையில் இராசேந்திர சோழன் புளி கீழ் கூட்டங்
> குறைவரக்கூடி இருந்து"

அவ்வூர் இறைவனுக்கு வழிபாட்டு நிலம் ஒதுக்கியதைக் குறிப்பிடுகிறது. சபைக் கூட்டங்கள் பொதுவாக மண்டபங்களிலும் ஊர்ப் பொது இடங்களிலும் கூடின. இக்கல்வெட்டின் படி இங்கு வாய்க்கால் கரை மீதிருந்த புளியமரத்தடி கூடுமிடமாக இருந்தமை தெரிகிறது. பல தர்ம காரியங்களுக்கும், ஊர்ப் பொது விசயங்களுக்கும் கூடுமிடமாகப் புனித இடமாக இம்மர நிழல் விளங்கியதால் அதற்கு இராசேந்திரன் என்று பெருமதிப்புடன் பெயரிட்டுள்ளனர் என்பது புலனாகிறது.

## இராசேந்திரன் காலத்தில் சமணம்

இராசேந்திர சோழன் காலத்தில் சைவமும், வைணவமும் பேராதரவு பெற்றது போலவே சமணமும், பௌத்தமும் ஆதரவு பெற்று விளங்கின. பௌத்தத்திற்கு நாகப்பட்டனம் சூடாமணி விகாரம் சிறந்த எடுத்துக்காட்டு. சமணத்திற்கு அதரவளித்தமை வேலூர்-போளூர் அடுத்துள்ள திருமலையும் கொங்கு நாட்டில் உள்ள விஜய மங்கலமும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

திருமலையில் இராசேந்திர சோழனின் 12-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (1024) அங்கு அவனது அத்தையும் ராஜராஜனின் சகோதரியுமான குந்தவை பெயரில் சமணக் கோயில் இருந்ததையும் ஒரு வியாபாரியின் மனைவி நந்தாவிளக்கு கொடுத்ததையும் திருவமுது ஏற்பாடு செய்ததையும் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> "ஜெயங் கொண்ட சோழ மண்டலத்து
> பங்கள நாட்டு நடுவில் வகை முகை நாட்டுப்
> பள்ளிச்சந்தம் வைகாவூர்த திருமலை
> ஸ்ரீகுந்தவை ஜிநாலயத்து தேவர்க்கு
> பெரும்பாணப்பாடிக் கரைவழி மல்லியூர்
> இருக்கும் வியாபாரி நந்தப்பயன் மணவாப்பு
> சா முண்டப்பை வைத்த திருநந்தாவிளக்கு
> ஒன்றினுக்கு காசு இருபதும் திருவமுதுக்கு
> வைத்த காசு பத்தும்"

விஜயமங்கலம் கோயிலில் இராசேந்திர சோழன் காலத்தில் அங்குள்ள பார்சுவநாதர் என்ற சமணத் தெய்வத்திற்கு முன்பாக விளக்கெரிக்க கவிமாணன் விஜயமல்லன் என்பவன் 96 ஆடுகள் கொடுத்த செய்தி மற்றொரு கல்வெட்டால் அறியப்படுகிறது.

## இராசேந்திர சோழனின் சமையல்காரி

அரண்மனைப் பணிப் பெண்களுக்கு அக்காலத்தில் பொதுவாக பெண்டாட்டிகள் எனப் பெயர் வழங்கிற்று முதலாம் இராசேந்திரனின் சமையற்காரி ஒருத்தி "திருவமுதிடும் பெண்டாட்டி" என்று குறிப்பிடப்பட்டுள்ளாள். "அகமுடையாள்", "மணவாட்டி" எனும் சொற்கள் மனைவியைக் குறித்து நின்றன.

கன்னியாகுமரி குகாநாதசுவாமி கோயிலில் உள்ள இராசேந்திர சோழனின் 24-ஆவது ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 1036) குமரியில் இருந்த இராசராச ஈஸ்வரம் கோயிலுக்கு கொடை கொடுத்த சோழகுலவல்லி என்னும் பெண் இராசேந்திர சோழனுக்கு 'திருஅமுது அடும் பெண்டாட்டி' என்ற குறிப்பினைத் தருகிறது. இதன் மூலம் இவள் இராசேந்திர சோழனுக்கு சமையல் பணி செய்தவள் என்பது தெளிவாகிறது. இக்கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:

"ஸ்வஸ்தி ஸ்ரீ பூர்வதேசமும் கங்கையுங் கடாரமுங்
கொண்டருளின கோப்பரகேசரி பன்மராயின
உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு
யாண்டு இருபத்து நாலாவது - ராஜராஜ
பாண்டிநாட்டு உத்தமசோழ வளநாட்டுப் புறத்
தாயநாட்டு குமரி ராஜராஜ பாண்டி
ஈச்வரம் உடையார்க்கு உடையார் ஸ்ரீரா
ஜேந்திர சோழ தேவர்க்கு திருவமுது அடும் பெண்
டாட்டி அருமொழிதேவ வளநாட்டுப் புலியூர் நாட்டுப்
பாலையூர் திட்டை சோழ குலவல்லி வைச்ச
திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு வைச்ச சாவா
மூவாப் பேராடு ஐம்பது"

## சோழகங்கம் ஏரி

நெடுங்கடலோ! செய் கடலோ! என பார்ப்போர் பரவசம் அடையும் வண்ணம் அமைக்கப் பெற்ற சோழகங்கம் பேரேரி இவனது அற்புத படைப்பாகும்.

பகைநாட்டின் மீது படையெடுத்திட படைகளோடு ஜெயங் கொண்டத்தில் காத்திருந்தபோது மாமன்னன் முதலாம் இராசஇராசனின் ஆணை கிடைக்கும் வரை பொழுதை வீணாக்காமல் இவ்வேரியை அந்தநேரத்தில் உருவாக்கினான் முதலாம் இராசேந்திரன் என்பர்.

கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மேற்கே சயங்கொண்ட சோழபுரம் செல்லும் பெருவழியில் இரண்டு கல் தொலைவில் உள்ளது. இது பொன்னேரி என்று அழைக்கப்படுகிறது.

தெற்கு வடக்காக 16 கல் நீளமும் 3 கல் அகலமும் கொண்டது. முற்காலத்தில் பொன்னேரியின் வடிகாலாக வீராணம் ஏரி அமைந்திருந்தது.

## இராசேந்திரன் மகனின் திருவிந்தளூர்ச் செப்பேடு

இந்தியா முழுவதற்கும் இதுவரை கிடைத்த செப்பேடுகளில், எண்ணிக்கையில் 86 ஏடுகளைக் கொண்ட இச்செப்பேட்டின் ஏடுகள் ஒவ்வொன்றும் 44 செ.மீ. நீளமும், 21 செ.மீ. அகலமும் உடையதாகவும், இதன் மொத்த எடை 150 கிலோவாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாம் இராசேந்திர சோழனால் வெளியிடப்பட்ட திருவிந்தளூர் செப்பேடு தான் மிகப் பெரியது ஆகும். இதுவரை பெரிய செப்பேட்டுத் தொகுதியாக கருதிவந்த 57 ஏடுகள் கொண்ட கரந்தை செப்பேடு தற்போது இரண்டாவது பெரிய செப்பேடு என்ற தகுதியை அடைகிறது. இது முதலாம் இராசேந்திரனால் வெளியிடப்பட்டது ஆகும்.

## வங்கத்து குடியேறிய தமிழர்கள்

இராசேந்திரன் காலத்தில் தமிழகத்தில் இருந்து படைவீரர்களாக வங்கத்துக்கு சென்றவர்கள் பானர்ஜி என்ற பெயரில் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

## இராசேந்திரனது திருவுருவங்கள்

செம்மையாகவும், சிறப்பாகவும் செயல்புரிந்தவர்களுக்கு திருவுருவச் சிலை வடிப்பது தமிழரின் மரபு. அவ்வகையில் இராசேந்திரனுக்கு கீழ்க்கண்ட ஊர்களில் திருவுருவச் சிலைகள் உள்ளன என்று ஊகமாகச் சொல்வர்.

1) கோவிந்தபுத்தூர்
2) திருவாரூர்
3) கோலார்

# சோழர் செய்திக்கோவை

# சோழர் செய்திக்கோவை

## சோழர் குழவழி

| | |
|---|---|
| விசயாலயன் | 850-871 |
| ஆதித்தன் | 871-907 |
| பராந்தகன் | 907-954 |
| இராசாதித்தன் | 948-949 |
| கண்டராதித்தன் | 950-957 |
| அறிஞ்சயன் | 954-960 |
| சுந்தரசோழன் | 957-975 |
| ஆதித்த கரிகாலன் | 960-965 |
| உத்தம சோழன் | 971-987 |
| முதலாம் இராசராசன் | 985-1014 |
| முதலாம் இராசேந்திரன் | 1014-1042 |
| முதலாம் இராசாதிராசன் | 1018-1054 |
| இரண்டாம் இராசேந்திரன் | 1052-1064 |
| இராசமகேந்திரன் | 1058-1063 |
| வீரஇராசேந்திரன் | 1063-1070 |
| அதிராசேந்திரன் | 1068-1071 |
| முதலாம் குலோத்துங்கன் | 1070-1120 |
| விக்கிரம சோழன் | 1118-1135 |
| இரண்டாம் குலோத்துங்கன் | 1133-1150 |
| இரண்டாம் இராசராசன் | 1146-1171 |
| இரண்டாம் இராசாதிராசன் | 1166-1181 |
| மூன்றாம் குலோத்துங்கன் | 1178-1218 |
| மூன்றாம் இராசராசன் | 1216-1260 |
| மூன்றாம் இராசேந்திரன் | 1244-1279 |

## சோழர் மெய்க்கீர்த்திகளின் தொடக்கம்

| | |
|---|---|
| 'திருமகள் போல' | - முதலாம் இராசராசன் |
| 'திருமன்னி வளர' | - முதலாம் இராசேந்திரன் |
| 'திங்களேர் தருதன் தொங்கல்' | - இராசாதிராசன் |
| 'திங்களேர் பெற வளர்' | - இராசாதிராசன் |
| 'திருக்கொடியொடு தியாகக்கொடி' | - இராசாதிராசன் |
| 'திருமாது புவியெனும்' | - இரண்டாம் இராசேந்திரன் |
| 'திருமகள் மருவிய செங்கோல்' | - இரண்டாம் இராசேந்திரன் |
| 'திருவளர் திரள்புயத் திருநிலவளந்' | - வீரராசேந்திரன் |
| 'வீரமே துணையாக' | - வீரராசேந்திரன் |
| 'திங்களேர் மலர்ந்து வெண்குடை' | - அதிராசேந்திரன் |
| 'திருமன்னி விளங்கு' | - முதலாம் குலோத்துங்கன் |
| 'புகழ் மாது விளங்க' | - முதலாம் குலோத்துங்கன் |
| 'புகழ்சூழ்ந்த புணரி' | - முதலாம் குலோத்துங்கன் |
| 'பூமேலரிவையும் பொற்செயப் பாவையும்' | - முதலாம் குலோத்துங்கன் |
| 'பூமாது புணர' | - விக்கிரமசோழன் |
| 'பூமாலை மிடைந்து' | - விக்கிரம சோழன் |
| 'பூமன்னு பதுமம்' | - இரண்டாம் குலோத்துங்கன் |
| 'பூமருவிய புவியேழும்' | - இரண்டாம் குலோத்துங்கன் |
| 'பூமேவி வளர்' | - இரண்டாம் குலோத்துங்கன் |
| 'பூமேவு திருமகள்' | - இரண்டாம் குலோத்துங்கன் |
| 'பூமன்னு பாவை' | - இரண்டாம் குலோத்துங்கன் |
| 'பூமன்னு பூத்த' | - இரண்டாம் குலோத்துங்கன் |
| 'பூமருவிய பொழிலேழும்' | - இரண்டாம் இராசராசன் |
| 'பூமருவிய திருமாதும்' | - இரண்டாம் இராசராசன் |
| 'கடல் சூழ்ந்த பார்மாதரும்' | - இரண்டாம் இராசாதிராசன் |
| 'கடல் சூழ்ந்த பாரேழுங்' | - இரண்டாம் இராசாதிராசன் |
| 'புயல் பெருக வளம் பெருக' | - மூன்றாம் குலோத்துங்கன் |
| 'புயல் வாய்த்து' | - மூன்றாம் குலோத்துங்கன் |
| 'சீர்மன்னி இருநான்கு திசைவிளக்கு' | - மூன்றாம் இராசராசன் |
| 'சீர்மன்னு மலர் மகளும்' | - மூன்றாம் இராசராசன் |
| 'பூமியும் திருவும்' | - மூன்றாம் இராசேந்திரன் |
| 'பூமருவிய திருமடந்தை' | - மூன்றாம் இராசேந்திரன் |

மெய்க்கீர்த்தி, ஒரு மன்னனின் கல்வெட்டுத் தொடக்கத்தில் அவனது ஆட்சியாண்டுக்கு முன்னதாக அமைவது. இது செய்யுள் வடிவில் அமைந்திருக்கும். முதலாம் இராசராசன் காலம் முதல் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. பொதுவாக மன்னனின் வெற்றிப் புகழைச் சொல்லும் வகையில் அமைந்திருக்கும். பின்னாளில் சித்திரமேழி, ஐந்நூற்றுவர் முதலிய வணிகக் குழுக்களும் தங்களது பெருமை சொல்ல மெய்க்கீர்த்தியினை தங்கள் கல்வெட்டுகளில் தொடக்கத்தில் கொண்டிருந்தன.

### சோழமன்னர்களின் தலைநகரங்கள்

| வ.எண் | ஊர் | அரசன் | காலம் |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் | மனுநீதி சோழன் | புராணகாலம் |
| 2. | பூம்புகார் | சங்க காலச் சோழர்கள் | சங்க காலம் |
| 3. | உறையூர் | சங்க காலச் சோழர்கள் | சங்க காலம் |
| 4. | தஞ்சாவூர் | பிற்காலச் சோழர்கள் | 850 முதல் |
| 5. | கங்கை கொண்ட சோழபுரம் | முதலாம் இராசேந்திர சோழன் | 1014 முதல் |
| 6. | பழையாறை (ஆயிரத்தளி) | சோழ இளவரசர்கள் முடிசூடும் அரண்மனை இருந்த இடம். இரண்டாம் நிலை தலைநகரம் | 9-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை |

நாட்டைப் பார்வையிடச் சென்ற சோழ மன்னர்கள் ஆங்காங்குள்ள அரண்மனைகளில் தங்கி தங்கள் அரசியலை நடத்தினார்கள். அவ்வகையில் திருவாரூர், ஆயிரத்தளி, சிதம்பரம், காஞ்சி, கங்கை கொண்ட சோழபுரம், மதுரை, ஆகிய நகரங்கள் சோழர்களின் பிற தலைநகரங்களாக விளங்கியது.

### கல்வெட்டுகளில் சோழர்களைக் கண்டுபிடிக்கும் வழி

சோழ மன்னர்கள் இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களைத் தங்கள் பெயர்களுடன் இணைத்துக் கொள்வார்கள். பல கல்வெட்டுகளில் இப்பட்டங்கள் காணப்பட்டாலும் மன்னர்களின் பெயர்கள் வருவது குறைவே. அது போல ஒரே பெயரில் மூன்று மன்னர்கள் வரை இருந்தனர். எனவே எந்த மன்னனுடைய கல்வெட்டு என்று கண்டுபிடிப்பது கடினம். அவர்களது விருதுப் பெயர்கள் அவர்களை அறிய நமக்குப் பெரிதும் உதவுகின்றன. அவ்விருதுப் பெயர்கள் அவர்கள் கண்ட வெற்றிகளைக்

குறிப்பதாகவும், அவர்கள் எங்கு என்ன நிகழ்வில் இறந்தார்கள் என்பதைக் குறிப்பனவாகவும் அரசாட்சியில் செய்த சிறப்புச் செயல்களைக் குறிப்பனவாகவும் காணப்படுகின்றன அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| விசயாலயன் | - தஞ்சைக் கொண்ட பரகேசரி |
| ஆதித்தன் | - தொண்டை நாடு பாவிய பரகேசரி |
| ஆனைமேல் துஞ்சிய தேவர் | - இராசாதித்தன் |
| கண்டராதித்தன் மனைவி | - சோழப் பெருமானடிகள் நம்பிராட்டியார் |
| அறிஞ்சயன் | - ஆற்றூர் துஞ்சின தேவர் |
| சுந்தரசோழன் | - பொன்மாளிகைத் துஞ்சின தேவர் |
| இராசாதிராசன் | - ஆனைமேல் துஞ்சின தேவர் |
| பராந்தகன் | - மதிரைக் கொண்ட பரகேசரி, மதிரையும் ஈழமும் கொண்ட பரகேசரி |
| செம்பியன் மாதேவி | - உத்தம சோழ தேவரை திருவயிருவாய்த்த பிராட்டியார் |
| ஆதித்த கரிகாலன் | - வீரபாண்டியன் முடித்தலை கொண்ட கோப்பரகேசரி |
| முதலாம் இராசராசன் | - கோவி ராசராசகேசரி, காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளிய கோவிராசராசகேசரி |
| முதலாம் இராசேந்திரன் | - பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி |
| முதலாம் குலோத்துங்கன் | (வீர) இராசேந்திர சோழ தேவர், சுங்கம் தவிர்த்த சோழ தேவர் |
| இரண்டாம் குலோத்துங்கன் | - அனபாயச் சோழன் |
| மூன்றாம் குலோத்துங்கன் | - திரிபுவன வீரதேவர், பூர்வதேசமும் கங்கையும் கொண்ட கோப்பரகேசரி மதுரையும் ஈழமும் கருவூரும் கொண்ட கோப்பரகேசரி, பாண்டியன் முடித்தலையும் கருவூரும் ஈழமும் கொண்ட, கோப்பரகேசரி |

## சோழர் காலச் செப்பேடுகள்

| | | |
|---|---|---|
| 1. | உதயேந்திரம் செப்பேடு | - பராந்தக சோழன் காலத்தில் கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதி வெளியிட்டது. |
| 2. | வேளஞ்சேரி செப்பேடு | - பராந்தகசோழன் |
| 3. | அன்பில் செப்பேடு | - சுந்தரசோழன் |
| 4. | பள்ளன் கோயில் செப்பேடு | - சுந்தரசோழன் |
| 5. | திருச்செங்கோடு செப்பேடு 1 | - சுந்தரசோழன் |
| 6. | திருச்செங்கோடு செப்பேடு 2 | - சுந்தரசோழன் |
| 7. | அருங்காட்சியகச் செப்பேடு | - உத்தமசோழன் |
| 8. | லெய்டன் பெரிய செப்பேடு | - முதலாம் இராசராசன் |
| 9. | கரந்தைச் செப்பேடு | - முதலாம் இராசேந்திரன் |
| 10. | திருவாலங்காட்டுச் செப்பேடு | - முதலாம் இராசேந்திரன் |
| 11. | எசாலம் செப்பேடு | - முதலாம் இராசேந்திரன் |
| 12. | திருக்களர் செப்பேடு 1 | - முதலாம் இராசேந்திரன் |
| 13. | திருக்களர் செப்பேடு 2 | - முதலாம் இராசாதிராசன் |
| 14. | சாராலாச் செப்பேடு | - வீரராசேந்திரன் |
| 15. | லெய்டன் சிறிய செப்பேடு | - முதலாம் குலோத்துங்கன் |
| 16. | திருக்களர் செப்பேடு 3 | - முதலாம் குலோத்துங்கன் |
| 17. | திருக்களர் செப்பேடு 4 | - இரண்டாம் இராசராசன் |
| 18. | திருக்களர் செப்பேடு 5 | - மூன்றாம் குலோத்துங்கன் |
| 19. | திருவிந்தளூர் செப்பேடு | - முதலாம் இராசாதிராசன் இரண்டாம்இராசேந்திரன் |

இந்தியா முழுவதற்கும் இதுவரை கிடைத்த செப்பேடுகளில், எண்ணிக்கையில் 86 ஏடுகளைக் கொண்ட இரண்டாம் இராசேந்திர சோழனால் வெளியிடப்பட்ட திருவிந்தளூர் செப்பேடு தான் மிகப் பெரியது ஆகும்.

இதுவரை பெரிய செப்பேட்டுத் தொகுதியாக கருதிவந்த 57 ஏடுகள் கொண்ட கரந்தை செப்பேடு தற்போது இரண்டாவது பெரிய செப்பேடு என்ற தகுதியை அடைகிறது. இது முதலாம் இராசேந்திரனால் வெளியிடப்பட்டது ஆகும்.

## கொங்குச் சோழ மன்னர்கள்

கோவை, ஈரோடு, திண்டுக்கல் போன்ற தமிழக வடபகுதிகள் கொங்கு நாடு எனப்பட்டது. இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் பிற்காலச் சோழர்களுக்கும் அடுத்து பிற்காலப் பாண்டியர்களுக்கும் கீழ்பட்டுத் தனிஆட்சி செய்தனர். சோழர் பெயர்களையும், பாண்டியர் பெயர்களையும் தங்கள் பெயர்களாகக் கொண்டிருந்தனர். அவ்வகையில் கொங்குச் சோழ மன்னர்கள் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| முதலாம் விக்கிரம சோழன் | - | (1004-1045) |
| அபிமான சோழ ராசாதிராசன் | - | (1080-1110) |
| இராசாதிராச உத்தமன் | - | (1110-1117) |
| இராசாதிராச வீரசோழன் | - | (1117-1135) |
| உத்தமசோழவீர நாராயணன் | - | (1135-1149) |
| குலோத்துங்கன் | - | (1149-1168) |
| பரகேசரி வீரசோழன் | - | (1168-1196) |
| இராசகேசரி வீரராசேந்திரன் | - | (1207-1255) |
| பரகேசரி இரண்டாம் விக்கிரமன் | - | (1255-1263) |
| இராசகேசரி | - | (1263-1273) |
| பரகேசரி மூன்றாம் விக்கிரமன் | - | (1273-1303) |

## தெலுங்குச் சோழர்

களப்பிரர் தாக்குதல் காரணமாகச் சங்க காலத்தை அடுத்துத் தமிழகத்தில் பாண்டியர் மற்றும் சோழராட்சி நிலைக்கவில்லை. ஆனால் சோழர்கள் ஆந்திரம், கர்நாடகப் பகுதிகளுக்குச் சென்று அங்கு சிற்றரசுகளாக ஆட்சிபுரியத் தொடங்கினர். அப்படி ஆந்திரப் பகுதிக்குச் சென்று ஆட்சி புரிந்த சோழர்கள் தெலுங்குச் சோழர்கள் எனப்படுவர். கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த அவர்கள் பொத்தப்பிச் சோழர், நெல்லூர்ச் சோழர் என்று பல வழியினராக விளங்கினர். ஸ்ரீகண்டன் என்ற தெலுங்குச் சோழன் தனது மகளைப் பாண்டியன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மணம் முடித்திருந்தான். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் காஞ்சி, சென்னை, திருவண்ணாமலை, வேலூர் பகுதிகளில் விசயகண்ட கோபாலன் முதலிய மன்னர்களது கல்வெட்டுகள் தமிழில் கிடைக்கின்றன.

## சோழர் காலத்துப் போர்க்களங்கள்

| இடம் | சோழ மன்னர் | போரிட்ட மன்னர் |
|---|---|---|
| 1. குடமூக்கு (கும்பகோணம்) | (விசயாலயன், ஆதித்தன்) பல்லவர், கங்கர், மகதர் | ஸ்ரீமாற ஸ்ரீவல்லப பாண்டியன். |
| 2. திருப்புறம்பியம் | சோழர் (ஆதித்தன்), பல்லவர், கங்கர் | இரண்டாம் வரகுண பாண்டியன் |
| 3. வெள்ளூர் | முதலாம் பராந்தகன் | இராசசிம்ம பாண்டியன், ஈழ மன்னன் |
| 4. தக்கோலம் | முதலாம் பராந்தகனின் மகன் இராசாதித்தன் | இராட்டிரகூடர், கங்கர் |
| 5. வல்லம் | முதலாம் பராந்தகன்,கங்கன் இரண்டாம் பிரிதிவிபதி | வாணன் |
| 6. சேவூர் | இரண்டாம் பராந்தகனின் மகன் ஆதித்த கரிகாலன் | வீரபாண்டியன் |
| 7. காந்தளூர்ச் சாலை | முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன் | சேரர் |
| 8. கல்யாணபுரம் | முதலாம் இராசாதிராசன் | சாளுக்கியர் |
| 9. கொப்பம் | முதலாம் இராசாதிராசன் இரண்டாம் இராசேந்திரன் | சாளுக்கியர் |
| 10. பேராற்றங்கரை | இரண்டாம் இராசேந்திரன் | சாளுக்கியர் |
| 11. கம்பிலி | முதலாம் இராசாதி இராசன் | சாளுக்கியர் |
| 12. கொல்லாபுரம் | முதலாம் இராசாதி இராசன் | சாளுக்கியர் |
| 13. முடக்காறு | இரண்டாம் இராசேந்திரன் | சாளுக்கியர் |
| 14. கூடல் சங்கமம் | இரண்டாம் இராசேந்திரன் | சாளுக்கியர் |
| 15. நங்கலி | முதலாம் குலோத்துங்கன் | விக்கிரமாதித்தன் |
| 16. விழிஞம் | முதலாம் குலோத்துங்கன் | சேரர் |
| 17. கோட்டாறு | முதலாம் குலோத்துங்கன் | சேரர் |
| 18. தென் கலிங்கப் போர் | முதலாம் குலோத்துங்கன் | கலிங்க மன்னன் |
| 19. வட கலிங்கப் போர் | முதலாம் குலோத்துங்கன் | கலிங்க மன்னன், அனந்தவன்மன் |

## தூதுக்குழுக்கள்

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சாவா, சுமத்திரா மற்றும் மலேயா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஸ்ரீவிசயம் மற்றும் கடாரம் என்றழைக்கப்பட்ட ஒரு பெரிய நாட்டின் புத்தமதம் சார்ந்த வணிகர்கள், தூதுவர்கள் அந்நாட்டு அரசனால் நாகப்பட்டினத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அதே போன்று சில தூதுக்குழுக்கள் சோழப் பேரரசர்களால் சீனநாட்டிற்கும் சென்றதை அறியமுடிகிறது. அவை இராசராசன் (கி.பி.-1014), முதலாம் இராசேந்திரன் (கி.பி.-1033), முதல் குலோத்துங்கன் (கி.பி.-1077) ஆகிய மன்னர்கள் காலத்தில் சென்றவையாகும்.

## திருகோணமலை

கி.பி. 1070 வரை சோழர்களின் ஆட்சி இலங்கையில் 77 ஆண்டுகள் நீடித்திருந்தது என்பது தெளிவு. மேலும் அப்பகுதியில் அதிக அளவில் கோயில் நிர்மாணிக்கப்பட்டு இருந்ததும் தெரியவருகிறது. அத்தீவு முழுமையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வர தலைநகரை அனுராதபுரத்தில் இருந்து பொலன்னருவைக்கு மாற்றினர். அனுராதபுரமும், ஜனநாத மங்கலம் என முதலாம் இராசேந்திரன் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது. பொலன்னலருவா, மாதோட்டம், படவியா, திருகோணமலை ஆகிய இடங்களில் பல கோயில்களும், சிலைகளும், திருமேனிகளும் கல்வெட்டுகளும் கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்திற்கு நெருக்கமாக இலங்கையின் மேலைக் கடற்கரையில் அமைந்த துறைமுகப்பட்டினம் மாதோட்டம். இலங்கையில் கீழைக் கடற்கரையில் அமைந்த சிறந்த துறைமுகம் திருகோணமலை.

## சோழநாட்டின் மண்டலப்பிரிவுகள்

1. மலை மண்டலம்
2. மகத மண்டலம்
3. நடுவில் மண்டலம்
4. வேங்கை மண்டலம்
5. வீரசோழ மண்டலம்
6. சயங்கொண்ட சோழ மண்டலம் ஆகும். மேலும்
7. மும்முடி சோழ மண்டலம்
8. நிகரிலி சோழ மண்டலம்
9. சோழபாண்டிய மண்டலம்
10. இராசராச பாண்டி மண்டலம்
11. அதிராசராச சோழ மண்டலம்

வென்ற பகுதிகளை தனி மண்டலமாக மட்டுமில்லாமல் தனிச்சிறப்போடு கூடிய அரசப் பிரதிநிதியின் ஆட்சியாகவும் மாற்றியவன் முதலாம் இராசேந்திரன்.

### துறைமுகங்கள்

நாகப்பட்டினம் சோழர் காலத்தில் முக்கிய பன்னாட்டுத் துறைமுகப் பட்டினமாக விளங்கியுள்ளது. அப்போது நாகப்பட்டினம், ஜெயமாணிக்க வளநாட்டில் பட்டினக் கூற்றம் என்ற நிர்வாகப் பிரிவில் இருந்தது.

தமிழகத் துறைமுகங்களில் இடைக்காலத்தில் உரு, சிற்றுரு, தோணி, படகு, சம்பான், தொங்கு கப்பல், சமபோக்கு கப்பல், பருஞ்சித்துரு போன்ற கலங்கள் பயன்படுத்தப்பட்டன. சம்பான், சமபோக்கு, தொங்கு கப்பல் போன்றவை சீனத்துடன் தொடர்புள்ளவையாகும். வாணிபத்தில் ஈடுபட்டோர் இந்து, புத்த, இசுலாம், கிறித்துவ யூத மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தங்களுக்கென்று வழிபாட்டுத் தலங்களை ஏற்படுத்திக் கொண்ட போதிலும் தொடக்கத்தில் எவ்விடத்திலும் மதம் தொடர்பான பாகுபாடுகள் எழவில்லை. மனிதநேயமும், உழைப்பும் முன்னேற்றத்திற்கு மூலதனமாக இருந்தது.

இலங்கையில் மாதோட்டம் என்பது சோழர்களின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கியமான துறைமுகம் ஆகும். முதலாம் இராசேந்திரனின் முற்றுப்பெறாத கல்வெட்டு இத்துறைமுகத்தை மாதோட்டமான இராசராசபுரம் என்று குறிப்பிடுகிறது. மேலும் முதலாம் இராசேந்திரனின் கட்டுப்பாட்டில் இயங்கக் கூடிய பணியாளன் ஒருவன் நியமிக்கப்பட்டு இருந்ததையும் கல்வெட்டு மூலம் அறியலாம்.

## சோழர் கால உழவும் வருவாயும்

### ஆறுகளும் அதனை வெட்டியவர்களும்

1. தஞ்சாவூருக்கு வடக்கே ஓடும் வீரசோழ வடவாறு -பராந்தகன் I (907-955)
2. கொள்ளிடப் பேரணையிலிருந்து - பராந்தகன் I (907-955)
3. கோனேரி ராஜபுரத்திற்கு அருகில் ஓடும் மண்ணியாறு - இராசராசன் I (985-1014)
4. கடுவாயிலிருந்து சுந்தரப் பெருமாள் கோயிலருகில் பிரியும் முடிகொண்டான் ஆறு - இராசேந்திரன் I(1014-1044)
5. மணஞ்சேரிக்கு அண்மையில் காவிரியினின்று பிரியும் வீரசோழன் ஆறு - வீரராசேந்திரன் (1063-1070)
6. காவிரியிலிருந்து குத்தாலத்திற்கு வடக்கே பிரிந்து செல்லும் விக்கிரம ஆறு - விக்கிரமசோழன் (1118-1135)

### சோழ அரசர்களின் பெயர்களில் ஆறுகள்

1. விக்கிரமனாறு
2. வீரசோழ வடவாறு
3. அகளங்கப் பேராறு
4. மதுராந்தக வடவாறு
5. தண் பொருத்தமான முடிகொண்ட சோழப் பேராறு
6. முடிகொண்ட சோழப் பேராறு
7. வீர ராசேந்திர சோழ வடவாறு
8. சுங்கந் தவிர்த்த சோழப் பேராறு
9. கரிகால சோழப் பேராறு (கொள்ளிடம்)

## ஏரிகளும் அதனை வெட்டியவர்களும்

1. வட ஆற்காடு மாவட்டம் சோழ சிங்கபுரத்திற்கருகிலுள்ள சோழ வாரிதி ஏரி பராந்தகன் I (907-955)
2. தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு 12 மைல் தூரத்திலுள்ள வீரநாராணன் ஏரி (தற்கால வீராணம் ஏரி) -பராந்தகன் I (907-955)
3. மதுரை மாவட்டம் ஆனைமலைப் பக்கத்தில் உள்ள கலியனேரி - பராந்தகன்I காலத்திய அரசியல் அதிகாரிகளுள் ஒருவனான அருள் நிதி கலியன்
4. தென் ஆற்காடு மாவட்டம் உலகாபுரத்திலுள்ள கண்டராதித்தப் பேரேரி - கண்டராதித்தச் சோழன் (955-957)
5. திருச்சிராப்பள்ளி மாவட்டம் செம்பியன் மாதேவி பேரேரி - செம்பியன் மாதேவி
6. வட ஆற்காடு மாவட்டம் பிரம்மதேசம் என்ற ஊரில் உள்ள சுந்தரச் சோழப் பேரேரி - சுந்தரச் சோழன் (957-973)
7. வடஆற்காடு மாவட்டம் பிரம்மதேசம் என்ற ஊரில் உள்ள குந்தவைப் பேரேரி - குந்தவை (இராசராச சோழன் I-னின் தமக்கை)
8. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகப் பேரேரி - உத்தமச்சோழன் (973-985)
9. புதுச்சேரியைச் சேர்ந்த திரிபுவனியிலுள்ள மதுராந்தகப் பேரேரி - உத்தமச்சோழன் (973-985)
10. கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அண்மையிலுள்ள சோழ கங்கப் பேரேரி - இராசேந்திரன் I
11. சித்தூர் மாவட்டம், புங்கனூரில் உள்ள இராஜேந்திர சோழப் பேரேரி - குலோத்துங்கன் I (1070-1122)
12. தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் முனியனூரில் உள்ள குலோத்துங்க சோழப் பேரேரி - குலோத்துங்கன்I (1070-1122)

## அரசர் மற்றும் அரசகுலத்தவர் பெயர்களில் வாய்க்கால்கள்

சோழர் காலத்தில் வேளாண் விளைச்சல் மீது விதிக்கப்பட்ட வரிகள் அரசின் பெரும் வருவாயாக இருந்தன. இதன் காரணமாக பல புதுக்கிளை ஆறுகளும், வாய்க்கால்களும் வெட்டி உண்டாக்கப்பட்டன. இவை அரசர் தெய்வங்களின் பெயர்கள் சூட்டி அழைக்கப்பட்டன.

1. சீபூதி வாய்க்கால்
2. மாதேவி வாய்க்கால்
3. வீரசோழ வாய்க்கால்
4. ஸ்ரீகண்ட வாய்க்கால்
5. செனநாத வாய்க்கால்
6. சோழகுல வாய்க்கால்
7. உத்தமசீலி வாய்க்கால்
8. பரசக்கரதட்ட வாய்க்கால்
9. வீர நாராயண வாய்க்கால்
10. கேரளமாதேவி வாய்க்கால்
11. கோதண்டராம வாய்க்கால்
12. நித்தவிநோதன் வாய்க்கால்
13. ஸ்ரீ அறிஞ்சிகை வாய்க்கால்
14. ஸ்ரீகண்டராதித்த வாய்க்கால்

15. பராந்தகன் வாய்க்கால்
16. ஸ்ரீபராந்தக வாய்க்கால்
17. பரமேச்சுவர வாய்க்கால்
18. இராசகேசரி வாய்க்கால்
19. அறிஞ்சிகை வாய்க்கால்
20. சுந்தர சோழ வாய்க்கால்
21. விமலாதித்த வாய்க்கால்
22. உத்தமசோழ வாய்க்கால்
23. மாதேவடிகள் வாய்க்கால்
24. இராசாதிராச வாய்க்கால்
25. சோழ சூளாமணி வாய்க்கால்
26. அருமொழித்தேவ வாய்க்கால்
27. இராசேந்திரசோழ வாய்க்கால்
28. வானவன்மாதேவி வாய்க்கால்
29. செம்பியன் மாதேவி வாய்க்கால்
30. முடிகொண்ட சோழ வாய்க்கால்
31. ஜயங்கொண்ட சோழ வாய்க்கால்
32. சுங்கந்தவிர்த்த சோழ வாய்க்கால்
33. ஸ்ரீசெம்பியன் மாதேவி வாய்க்கால்
34. கங்கைகொண்ட சோழ வாய்க்கால்

## தெய்வப் பெயர்களில் வாய்க்கால்கள்

1. ஆழி வாய்க்கால்
2. வள்ளி வாய்க்கால்
3. கேசவ வாய்க்கால்
4. ஸ்ரீதேவி வாய்க்கால்
5. பார்வதி வாய்க்கால்
6. ஸ்ரீமாதவ வாய்க்கால்
7. சரஸ்வதி வாய்க்கால்
8. வீரேச்சுவ வாய்க்கால்
9. தில்லை விடங்க வாய்க்கால்
10. கணபதி வாய்க்கால்
11. பற்பநாம வாய்க்கால்
12. சுப்ரமண்ய வாய்க்கால்
13. பரமேஸ்வர வாய்க்கால்
14. இறையான் வாய்க்கால்
15. திருவேங்கட வாய்க்கால்
16. கருமாணிக்க வாய்க்கால்
17. ஸ்ரீபுருஷோத்தம வாய்க்கால்

## சோழர்கால வதிகள்

வாய்கால்கள் மூலம் வயலுக்கு நீர் பாய்ந்து மறுபுறம் வடிந்து மீண்டும் நீரோடும் கால்களாகப் பயன்பட்டவை வதிகள் எனப்பட்டன.

1. ஸ்ரீதர வதி
2. சங்கர வதி
3. ஜநநாத வதி
4. ஸ்ரீதேவி வதி
5. கன்னர வதி
6. கவுசல வதி
7. ஆதித்த வதி
8. வானவன் வதி
9. பெருமாள் வதி
10. ஸ்ரீகாமுக வதி
11. மாதேவடிகள் வதி
12. வீர நாராயண வதி
13. விடேல்விடுகு வதி
14. ஸ்ரீ ராகேஸரி வதி
15. சோழமாமேவி வதி
16. சோழகுலவல்லி வதி
17. மும்முடிச்சோழ வதி
18. திருச்சிற்றம்பல வதி
19. அமநிநாராயணவதி
20. கண்டருள்கண்ட வதி

21. வயிரமேக வதி
22. காமதேவ வதி
23. மதுராந்தக வதி
24. பராக்கிரம வதி
25. பரமேஸ்வர வதி
26. திருவரங்க வதி
27. நரதொங்க வதி
28. இராசகேசரி வதி
29. ஸ்ரீ வீரகாமுக வதி
30. ஸ்ரீ கண்டராதித்த வதி
31. பஞ்சவன் மாதேவி வதி
32. திரிபுவன மாதேவி வதி
33. ஸ்ரீ வீர நாராயணன் வதி
34. குலோத்துங்கசோழ வதி
35. ஸ்ரீ கொந்தகமாதேவி வதி
36. ஸ்ரீ செம்பியன்மாதேவி வதி
37. ஸ்ரீ வானவன் மாதேவி வதி
38. கிடாரங்கொண்ட சோழ வதி

## நீர்ப்பாசனச் சொற்கள்

அடை
அணைவாய்க்கால்
அந்நீர்
அறுத்தல்
ஆறு, பேராறு
இறை
இறைகுளம்
உடைப்பு
உவன்றி
உட்சிறு வாய்க்கால்
கூடைநீர்
கேணி
கை வாய்
கைவாய்க்கால்
சென்னீர்க்கவிளை
ஊருணி
ஊருணி குளம்
ஊற்றங்கால்
ஊற்றுக்கேணி
ஏத்துக் கால்
ஏரி
ஓடை
கடைநீர்
கரை
கரைவாய்க்கால்
தலைவாய்
துரவு
துலை
நாற்றுக்கால்
பிலாறு
கழனிக்குளம்
கிடங்கு
கிணறு
குறங்கு
குரம்பு
குலை
குலைமடை
குளம்
குளவாய்த்தலை
குற்றேத்தம்
மடை
வாய்த்தலை
விலங்கு

## நிலப்பெயர்கள்

அட்டகம்
அத்திச்செய்
அளம்
அஹோவனம்
ஊர் நத்தம்
ஊர்பாழ்
ஆய்ப்பாடி
ஆறுமாறிடுபடுகை
இலைஅமுதுதோட்டம்
இறைச்சல்நிலன்
குலைவரப்பு
குளப்பாரிப்பு
ஈழச்சேரி
உவர்
ஊர் ஒழுக்கை
ஊர்க்களம்
பள்ளம்
பறைச்சேரி நத்தம்

| | | |
|---|---|---|
| ஊர்பொது | கொல்லை | பாகற்தோட்டம் |
| ஊர்பொதுதிடல் | கோட்டகரை | பாடகம் |
| ஊரிருக்கை நத்தம் | கோட்டாகாரம் | பாண்டவாய் |
| ஏத்தச்செய் | கோப்பு | கரைக்குலை |
| கட்டளை | சதுக்கம் | பாத்தி |
| கடற்கறை | சாளம் | பாதபாசம் |
| கண்டம் | செய் | பாம்பரைபாழ் |
| கண்மாணச்சேரி | செய்தலை | பாழ் |
| குடியிருக்கை | சேரி | பிடி |
| கமுகம் தோட்டம் | தரமிலி | பீடிலிகைவாரி |
| கமுகம் பாத்தி | தரிசு | புஞ்சை (புன்செய்) |
| கமுகு திருநந்தவனம் | தறை | புலம் |
| கரம்பை | திடர் | புற்று |
| கருஞ்செய் | திருத்தோப்பு | புறத்துடவை |
| கரைப்புலம் | திருமுற்றம் | பூந்தோட்டம் |
| கழனி | தீண்டாச்சேரி | பெரும்புலம் |
| கள்ளிச்செய் | துடவை | பெரும்மசக்கல் |
| களர் | துண்டம் | மட்டை |
| களர்பாழ் | தெற்றி | மடு |
| களம் | தேன்படு பொதும்பு | மண்ணிட்டு |
| கறாய் | தொட்டி | மணல் குன்று |
| கறை | தோட்டப்பாழ் | மயக்கல் (மசக்கல்) |
| கன்றுமேய்பாழ் | தோப்பு | மன்று |
| காடு | நஞ்சை, நன்செய் | மனைப்படப்பை |
| கார்நிலம் | நீர்கோத்துபள்ளவாய் | மாந்தோட்டம் |
| காவு | நீர்க்கோவை | மீன்படு பள்ளம் |
| கிடங்கு | நீர்த்திடல் | மீன் பயில் பள்ளம் |
| குடியிருப்பு திடல் | நீர்நிலம் | முடுக்கு |
| குடியிருப்பு தோட்டம் | பட்டப்பாழ் | வயக்காடு |
| குடியிருப்பு நத்தம் | படாகை | வரம்பு |
| குடியிருப்பு மனை | படுகை | வழிவரம்பு |
| குண்டு | படுதுறை | வளை |
| குலை | பரம்பு | வெள்ளரி வாவை |

## நிலம் திருத்துதல் தொடர்பான சொற்கள்

| | |
|---|---|
| கல்லின நிலம் | மயக்கின நிலம் |
| வயக்கின நிலம் | திருந்தின நிலம் |

## நிலங்களின் தரங்கள்

நிலங்கள் நஞ்சை, புஞ்சை, நீர்நிலம், தரிசு என்று பொதுவான தரப் பாகுபாடுகளில் இருந்தன. சோழர் காலத்தில் நிலங்களின் பயிர் விளைச்சலுக்கு ஏற்ப முதல் தரம், இரண்டாம் தரம் என்று எண்ணிடப்பட்டு அழைக்கப்பட்டன. சில பகுதிகளில் தரவரிசை 22 வரை இருந்தது. தரத்தில் ஈடுபடுத்தப்படாத நிலங்கள் தரமிலி எனப்பட்டன. ஒரு குழி என்பது நடைமுறையில் உள்ள அளவு கோலால் ஒரு கோல் நீளம் ஒரு கோல் அகலமுடைய சதுர அளவாகும். குழியைக் கொண்டு வேலிகளின் அளவுகள் கணக்கிடப்பட்டன. ஒரு வேலிக்கு பரவலாக பல்வேறு எண்ணிக்கைகளில் குழிகள் இருந்தன. ஒரு வேலி என்பது 2000, 2560, 5120, 4000, 10000, 10240, 3200 என்று பல்வேறு எண்ணிக்கைகளில் நிலத் தரங்களுக்கு ஏற்ப இருந்தன. குழியை நிர்ணயிக்கும் கோல்களும் பல்வேறு அளவுகளில் இருந்தன. அவற்றை அடுத்துக் காணலாம்.

## நிலஅளவுக் கோல்களின் பெயர்களும் காலமும்

| | | | |
|---|---|---|---|
| கடிகைக் கோல் | 885 | பதினாறு சாண்கோல் | 885 |
| எண்பிடிக்கோல் | 952 | கழனிக்கோல் | 959 |
| சிற்றையாற்றுக்கோல் | 969 | கடிகைக்களத்துக்கோல் | 959,1014 |
| இருபதின் காணிக்கோல் | 991 | வடக்குப் பங்கிட்ட கோல் | 998 |
| நாற்சாண்கோல் | 1004 | சிற்றம்பலத்துக்கோல் | 999, 1016 |
| நிலமளவுக்கோல் (16') | 1004 | விளந்தைக்கோல் | 1004,1008 |
| பன்னிருசாண்கோல் | 1008 | பதினாறுசாணும் ஒரு பிடிக்கோல் | 1008 |
| மாளிகைக்கோல் | 1014 | இராஜராஜன் கோல் | 1021 |
| ஸ்ரீபாதக்கோல் | 1074 | ஊராடுகோல் | 1035, 1068 |
| இருபதின்சாண்கோல் | 1103 | பதினாறடிக்கோல் | 1124 |
| இருபத்திரண்டு அடிக்கோல் | 1200 | திருவுலகளந்த பன்னீரடிக்கோல் | 1141 |
| வரிசைக் கோல் | 1217 | ஒன்பதிற்றடிக்கோல் | 1217 |
| குடிதாங்கிக்கோல் | 1219 | மகதேசன் கோல் | 1239 |
| வாழவந்தான் கோல் | 1300 | | |

இவை தவிர கண்டார்கண்டன் கோல், அமைத்த நாராயணன் நிலவளவுக்கோல், மலை கொடி மலைக்கோல், மனைக்கோல் (10½')

பதினாலடி விளந்தைக் கோல், திருவுலகளந்த கோல், வீரராஜன் களத்துக் கோல், வீரமுக்காணி அடிக்கோல் என்று பல அளவு கோல்கள் பிற்காலக் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றன.

சாண், அடி (காலடி) ஆகியவற்றாலான 16 சாண் கோல், 12 அடிக்கோல், 16 அடிக்கோல் போன்றவைகளும் இருந்தன. இராசராசன் காலக்கோலுக்கு 'உலகளந்த கோல்' என்ற பெயரும் இருந்தது. ஒரு கோலால் ஏற்படும் சதுரம் ஒரு குழி எனப்பட்டது. நூறு குழி ஒருமா, இரண்டாயிரம் குழி ஒரு நிலம் என்று நிலங்கள் அளக்கப்பட்டன.

### சோழர் கால நில அளவு

| | | |
|---|---|---|
| முந்திரி | - | 1/320 |
| 2 முந்திரி | - | அரைக்காணி (1/160) |
| 2 அரைக்காணி | - | 1 காணி (1/80) |
| 4 முந்திரி | - | 1 காணி (1/80) |
| 4 காணி | - | 1 மா (1/20) |
| 20 மா | - | 1 நிலம் |
| 5 காணி | - | 1 மாகாணி [வீசம்(1/16)] |
| 2 வீசம் | - | கால் (1/4) |
| 16 வீசம் | - | ஒன்று |

### சோழர் கால முகத்தல் அளவு

| | | |
|---|---|---|
| 360 நெல் | - | 1 செவிடு |
| 5 செவிடு | - | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | - | 1 உழக்கு |
| 2 ஆழாக்கு | - | 1 உரி ( நாழி) |
| 16 உரி | - | 1 மரக்கால் (குறுணி) |
| 2 மரக்கால் | - | 1 பதக்கு |
| 2 பதக்கு | - | 1 தூணி |
| 3 தூணி | - | 1 கலம் |
| 4 குறுணி (மரக்கால்) | - | 1 தூணி |
| 24 குறுணி (மரக்கால்) | - | 1 கலம் |
| 8 மரக்கால் | - | 1 பறை |
| 80 பறை | - | 1 கரிசை |
| 32 நாழி | - | 1 காடி |
| 3 காடி | - | 1 கலம் |
| 168 நாழி | - | 1 கோட்டை |

## சோழர் கால நீட்டல் அளவு

| | | |
|---|---|---|
| 8 தோரை | - | 1 விரல் |
| 24 விரல் | - | 1 முழம் |

## சோழர் கால நிறுத்தல் அளவு

| | | |
|---|---|---|
| 2 குன்றிமணி | - | 1 மஞ்சாடி |
| 10 மஞ்சாடி | - | 1 கழஞ்சு |
| 16 கழஞ்சு | - | 1 பலம் |

## இன்று சில பகுதிகளில் அறியப்படும் பிற நில அளவுகள்

| | |
|---|---|
| அங்கணம் | - 72 ச.அடி உடைய மனை நிலம் |
| அணு (அல்லது) அணைப்பு | - ஒரு நாளில் 2 ஏர் உழக்கூடிய நிலம் |
| ஏர் | - ஒரு நாளில் ஒரு ஏர் உழக்கூடிய நிலம் |
| கலம்பாடு | - ஒரு கல விதை விதைக்கக்கூடிய நிலம் |
| காடு | - 4 அணைப்பு அளவு நிலம் |
| காணி | - 100 குழி அல்லது 1/80 வேலி |
| குண்டு | - 1089 சதுர அடி நிலம் |
| குறுணி விரைப்பாடு | - 8 செண்ட் நிலம் |
| செய் | - 256 குழி அல்லது 1 ஏக்கர் (120 குழி கொண்ட செய்களும் உண்டு) |
| நெல்பரப்பு | - 12 குழி நிலம் |
| பட்டி | - 800 (அல்லது) 1000 குழி நிலம் |
| பல்லா | - 3.82 ஏக்கர் |
| மனை | - 4.25 குழி |
| மா | - 1/20 வேலி (அல்லது) 1/20 பட்டி |
| வல்லம் | - 3.82 (அல்லது) 8.60 ஏக்கர் |

## உழவு தொடர்பான வரிகளும், வருவாய்ச் சொற்களும்

| | |
|---|---|
| அப்புவரி | ஆற்றுப்பாட்டம் |
| அரிசிக் காணம் | இலைக்கூலம் |
| அரிமுக்கை | உழவிறை |
| அளக்கும் கரணம் | ஏத்தக் காணம் |
| அறிவாட் பதக்கு | ஏர்க் கடமை |
| ஆடிப்பச்சை | ஏர்க்காசு |
| ஆற்றங்கரைப் பாட்டம் | ஏர்க்காடி |

ஆற்றுக்குலை
ஏர்வரி
ஏரி ஆயம்
ஏரிநீர்க்கோவை
ஏரிப்பட்டி
ஏரிப்பாசிவிலை
ஏரி மீன்காசு
ஏரி மீன்பாட்டம்
ஏரியமஞ்சி
ஏரில் ஒரு காசு
ஏரிவாய்ப் பாடிக்காவல்
கடமை
கன்றுமேய்பாழ்
கதிர்க் காணம்
கல்லணைக் காடுவெட்டு
கழுகுக் கடமை
காணி இறை
காணியாளர் பேறு
கார் கடமை
கார்த்திகை அரிசி
கார்த்திகைக் காசு
கார்த்திகைக் காணம்
கார்த்திகைப் பச்சை
கார்த்திகைப் பேறு
கார் வரகு
காலளவுக்குழி
காவிரிக்குலை
கிணர்
கிடைக்காசு
கீழ்வாரம்
கீழிறைக் கடமை
குடநாழி
குடிமை
குலை
குலைவெட்டி
குறைவருப்பு
ஏர்ப் பொன்
கொடிக் கடமை
கொல்லைப் புஞ்சை
கொழு
கோல்வரி
செங்கொடிக் காணம்
செந்நீர்ப் பொதுவினை
செந்நீரமஞ்சி
சென்னீர் வெட்டி
சென்னீர் வெற்றாள்
தானிய முதல்
தாணியவர்க்கம்
திருப்புதியிது
நிலக்கடமை
நீர்க்கிறை
நீர்க்கூலி
நீர்விலைக்காசு
நீர்விலைக்கூலி
நீராணிக்கவரி
பயிர்க்கடமை
பனம்பாகு
பாசிப்பாட்டம்
புஞ்சைக்காசு
புரவுஇறை
மரக்கடமை
மரமஞ்சாடி
மரவடை
மாக்கலம்
மாப்பதக்கு
மாவடை
மூங்கில்வரி
வட்டி நாழி
வாரக்கூலி
வாரம்
வெற்றிலைத் தரகு

## சோழர் காலக் கல்வெட்டுகளில் மாதம் குறிக்கும் முறை

| | | |
|---|---|---|
| சித்திரை | - | மேஷ ஞாயிறு |
| வைகாசி | - | ரிஷப ஞாயிறு |
| ஆனி | - | மிதுன ஞாயிறு |
| ஆடி | - | கடக ஞாயிறு |
| ஆவணி | - | சிம்ம ஞாயிறு |
| புரட்டாசி | - | கன்னி ஞாயிறு |
| ஐப்பசி | - | துலா ஞாயிறு |
| கார்த்திகை | - | விருச்சிக ஞாயிறு |
| மார்கழி | - | தனு ஞாயிறு |
| தை | - | மகர ஞாயிறு |
| மாசி | - | கும்ப ஞாயிறு |
| பங்குனி | - | மீன ஞாயிறு |

## சோழர்கால அதிகாரிகளும் அலுவலர்களும்

அரசனின் கீழிருந்த அதிகாரிகளின் பெயர்களின் முன்னதாக அதிகாரிகள், அதிகாரம் செய்கின்ற, நம் கருமம் ஆராய்கின்ற, ஸ்ரீகாரியம், ஸ்ரீகாரியம் செய்கின்ற, கன்மிகள் என்ற சொல்லொட்டுகள் அவர்களை அதிகாரிகள் என்று புலப்படுத்துகின்றன. கோயில்களுக்குக் கொடை கொடுத்தபோதும் அரசனின் ஆணையை நிறைவேற்றும் போதும் காணப்படுகின்றன. மேலும் சிறுதனம், பெருந்தனம் என்ற சொல்லொட்டுகளுடனும் அரசனின் கீழ் நேரடியாகப் பணியாற்றியவர்கள் குறிக்கப்படுகின்றன.

படைத்தலைவர்கள் சேனாபதி, தண்டநாயகம் முதலி என்ற பதவிப் பெயர்களுடன் சொல்லப்படுகின்றனர். படையிலார், வேளைக்காரர் என்ற பொதுப்பெயர்களும் இருந்தன.

அரசின் வருவாய்த்துறை நிலம் சார்ந்ததாக இருந்தது. இதனை புரவுவரி திணைக்களம் என்றழைத்தனர். இங்கு வரிவிதிப்பு தொடர்பான நிலஅளவுகளும், வரி அளவுகளும் பதிந்த ஆவணங்கள் இருந்தன. அவை வரி, உள்வரி, வரிப்பொத்தகம், கைத்தடி போன்றவையாகும். புரவுவரி திணைக்கள நாயகம், புரவுவரிஸ்ரீ கரணநாயகம், புரவுவரி திணைக்களக் கண்காணி, வரிப்பொத்தகக் கணக்கு, வரியிலிடு, வரிக்கூறு செய்வார்.

வரிகள் நாடு என்ற வேளாண் குழுக்களின் மீதும் அவர்கள் மூலமும் பெறப்பட்டதால் நாடுவகை செய்வார், நாடாழ்வார், நாடுவகை, நாடுகள் கண்காணி நாயகம் என்ற பெயர்களில் அலுவலர்கள் பரவலாக இருந்தனர்.

அரசன் வெளியிடும் வாய்மூல ஆணை திருவாய்க்கேள்வி, திருமந்திர ஓலை, ஓலை என்ற அலுவலர்களால் கேட்டு ஓலைகளில் எழுதப்பட்டன. இவற்றை மேற்பார்வையிட்டோர் ஓலை நாயகம், திருமந்திர ஓலை நாயகம் எனப்பட்டனர். பொதுப்படையில் விடையிலார் என்ற அலுவலர்களும் இருந்தனர். அரசன் வாய்மொழி ஆணை என்பதால் ஸ்ரீமுகம் (முகம்=வாய்) என்று ஆணைகள் அழைக்கப்பட்டன. பட்டோலை என்ற அலுவலரும் இருந்தனர்.

அரண்மனையார் கோயிற்றமர், கோயில் முற்றவர் எனப்பட்டனர். வாசகம் வெளியான கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் வழியாக சோழர் ஆட்சியின் 400 ஆண்டுகால எல்லையில் 1400-க்கு மேற்பட்ட அலுவலர்களின் ஆட்பெயர்கள் கிடைத்துள்ளன என்பர்.

## சோழர்கால வணிகக் குழுக்கள்

வணிகர்கள் வாழ்ந்த பகுதிகள் நகரமெனப்பட்டன. அவர்களது நிர்வாகக் குழுக்கள் நகரம் என்றும் உறுப்பினர்கள் நகரத்தார் என்றும் பொதுவாகக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. நியமம் என்பது வணிகக் குழுவைக் குறிக்கும் தொண்மையான சொல். மணிக்கிராமத்தார், திசை ஆயிரத்து ஐநூற்றுவர், நாநாதேசிகள், பதினெண்பூமி திசை ஆயிரத்தை நூற்றுவர், ஐநூற்றுவர், எறி வீரப்பட்டினம் எனப் பல வணிகக் குழுக்கள் இருந்தன.

## தொழில் வரிகளும், வருவாய்ச் சொற்களும்

| | |
|---|---|
| அக்கசாலைவரி | உப்புக்காசு |
| அச்சதறி | உப்புப்பிடி |
| அணியிடுவான்வரி | உலை |
| ஆயம் | உலைப்பாட்டம் |
| இடைப்பூச்சி | உலைவரி |
| இடைவரி | உவச்சன் பேர் கடமை |
| ஈழப்பூச்சி | ஊசிவாசி |
| உப்பு | எடைவரி |
| எண்ணெய்வரி | தட்டிறை |
| ஏணிக்காணம் | தட்டுக்காணம் |
| ஓடக்காசு | தச்சு |
| ஓடக்கூலி | தச்சன் ஊழியம் |
| ஓடம் | தச்சத்தேவை |

கண்ணாடி
கண்ணார் இறை
கணக்கப்பேறு
கம்மாள மகமை
கரு ஆயம்
கருவி ஆயம்
கல்லாயம்
காணிக்கை
கீற்றுவரி
குசக்காணம்
குசவர் ஊழியம்
குமாரக்கச்சாணம்
குறுபட்டறை
கூறைக் கட்டணம்
கூறைக்காசு
கூறைத்தரகு காசு
கைக்கோளப்பேர்கடமை
கொல்லன் ஊழியம்
கொல்லன் உலைப்பாட்டம்
கொற்றுக்கீழ்
கோலியத்தறி
சுங்க எண்ணெய்
செக்காயம்
செக்கிறை
செக்கிறைப் பாட்டம்
செக்கு
செக்குக் கடமை
செக்கு மேலாயம்
செக்குத்துறை
சேனியார் தறி
தட்டார் பாட்டம்
நாடுகாவல்
தச்சத்துலாம்
தறி
தறிக்கடமை
தறிக்கூறை
தறியிறை
திருத்தேர் ஊழியம்
தோணிக்கடமை
தோலொட்டு
நாவிதக் காணம்
நாட்டு நூலாயம்
நெய்யெண்ணெய்
நூலாயம்
பட்டடை ஆயம்
பட்டடைகளில் லாபம்
பட்டடை சலத்தரம்
பட்டடை சிற்றாயம்
பட்டடை நூலாயம்
படாம் கழி
பறைக்கூலி
பறைஇறை
பறையர் தறிப்புடவை
பாறைக்காணம்
பாண்டிவரி
புதாநாழி
மாப்பட்டடை
வண்ணான் பேரால் இனவரி
வாணிகர் பேர்க்கடமை
வாள்வரி
வில்வரி
விற்பணம்
இறை
உல்கு

| | |
|---|---|
| ஓடக் கூலி | பூட்சி |
| ஊரிடுவரி | ஈழம் |
| செக்கிறை | தரகு |
| மீன் பாட்டம் | குடிமை |
| குசக்காணம் | சில்வரி |
| மனை இறை | எச்சோறு |
| இடைப்பாட்டம் | மாவிறை |
| இலைக் கூலம் | சில்லிறை |
| ஏரிப்பாட்டம் | போர்வரி |
| தட்டார்ப் பாட்டம் | தறியிறை |
| அங்காடிப் பாட்டம் | நீர்க்கூலி |
| சபாவினியோகம் | இரவு வரி |
| வண்ணாரப் பாறை | சித்தாயம் |
| கண்ணாலக் காணம் | பாடிகாவல் |
| காவேரிக்கரை விநியோகம் | |

## சோழர் காலத்து வாரியங்கள்

கிராம சபைகள் நிர்வாக வசதிக்கு ஏற்ப பல வாரியங்களை அமைத்துக் கொண்டன. அவ்வாரியங்களின் பணிகள் ஊர்களின் தன்மைக்கு ஏற்ப அமைந்திருந்தன. சில ஊர்களில் "சம்வத்சரவாரியம்" என்ற ஒன்றே கிராமத்தின் அனைத்துப் பணிகளையும் கவனித்து வந்தது. பொதுவாக வாரியங்கள் ஊர் மக்களின் நலத்தையும் அறநிலையங்களையும் பாதுகாத்து வந்ததோடு மட்டுமின்றி ஏரி, ஊரணி, கிணறு, வாய்க்கால் போன்ற நீர்நிலைகளையும் செப்பனிட்டுப் பாதுகாத்து வந்தன. அரசுக்கு சேர வேண்டிய வரிகளையும் மக்களிடமிருந்து வசூலித்து அரசுக்குச் செலுத்தி வந்தது. கல்வெட்டுகளின் மூலமாக கீழ்க்காணும் வாரியங்கள் இருந்தமை தெரியவருகின்றது. அவையாவன:

1. நீர்வாரியம்
2. ஏரி வாரியம்
3. நில வாரியம்
4. பஞ்ச வாரியம்
5. கழனி வாரியம்
6. பொன் வாரியம்
7. தடிவழி வாரியம்
8. குடும்பு வாரியம்
9. களிங்கு வாரியம்
10. கணக்கு வாரியம்
11. தோட்ட வாரியம்
12. சம்வத்சர வாரியம்

## சோழர் காலக் கோயில்கள்

தமிழ்நாட்டை கோயில் செறிந்த நாடு (Land of Temple) என்றளவில் மாற்றிக் காட்டிய பெருமை சோழ மன்னர்க்குத்தான் உரியது. சங்க காலத்து கோச்செங்கணான் 93 கோயில்களைக் கட்டினான் என்பது உண்மையானாலும் அக்கோயில்கள் அனைத்தும் சுண்ணாம்பும் கல்லுங் கொண்டு உருவானவை. அவை காலப் போக்கில் அழிந்து விட்டன.

ஆனால் ஆதித்தச் சோழன் கருங்கற்களைக் கொண்டு 60 கோயில்களைக் கட்டியது தான் சோழர் காலத்திய கோயிற்பணிகள் தொடங்குவதற்குரிய முதற்கட்டடம் எனலாம்.

முதலாம் இராசேந்திரன் தன் தந்தையின் சிலையை பெரிய கோயிலின் உற்சவ மூர்த்தி வெளிவருவதற்கு முன்பு உலாச் செல்ல ஏற்பாடு செய்தான் என்பதும், இது திருவாரூரில் சுந்தர மூர்த்தியின் படிமம் உலாச் சென்ற பின்பு தியாகராசன் பவனி வருவதற்கு ஈடாக ஏற்பட்டது என்பதும் வரலாற்றுச் செய்தி.

### நான்கு பெரும் சோழர் கோயில்கள்

1. இராசராசேஸ்வரம் - தஞ்சாவூர் - இராசராசன் I
2. கங்கைகொண்ட சோழீஸ்வரம் - கங்கைகொண்ட சோழபுரம் - இராசேந்திரன் I
3. இராசராசேஸ்வரம் - தாராசுரம் - இராசராசன் I
4. திரிபுவன வீரேஸ்வரம் - திரிபுவனம் - குலோத்துங்கன் III

### சோழப் பெருங்கோயில்கள் ஓர் ஒப்பீடு

| இடம் | கோயில் | மொத்த உயரம் | கருவறை உயரம் | விமான உயரம் |
|---|---|---|---|---|
| 1. தஞ்சாவூர் | இராஜராஜீஸ்வரம் | 59.98 மீட்டர்<br>196.50 அடி | 15.85 மீட்டர்<br>52 அடி | 44.13 மீட்டர்<br>144.50 அடி |
| 2. கங்கைகொண்ட சோழபுரம் | கங்கைகொண்ட சோழீஸ்வரம் | 54.86 மீட்டர்<br>180 அடி | 14.78 மீட்டர்<br>48.50 அடி | 40.80 மீட்டர்<br>131.50 அடி |
| 3. தாராசுரம் | ஐராவதீஸ்வரர் | 25.17 மீட்டர்<br>83 அடி | 5.82 மீட்டர்<br>19.50 அடி | 19.35 மீட்டர்<br>63.50 அடி |
| 4. திரிபுவனம் | கம்பேஸ்வரர் | 38.45 மீட்டர்<br>126 அடி | 10.79 மீட்டர்<br>35.25 அடி | 27.66 மீட்டர்<br>90.75 அடி |

## சோழர் காலக் கோயில் பணியாளர்கள்

| | |
|---|---|
| ஸ்ரீகாரியம் | விளக்குடையார் |
| திருவாராதனை செய்வார் | நீர்த்தெளியான் |
| பரிசாரகர் | சன்னாலியள் |
| பண்டாரி | மடைப்பள்ளிக் குசவர் |
| கணக்கெழுதுவார் | வண்ணத்தார் |
| கீழ்க்கணக்கு எழுதுவார் | நாவிசம் |
| மெய்க்காவல் | கோலின்மை |
| திருப்பதியம் விண்ணப்பிப்பார் | தய்யான் |
| தளிச்சேரிப்பெண்டு | அம்பட்டன் |
| நட்டுவம் செய்வார் | ரத்நத்தய்யான் |
| கானபாடி | கன்னான் |
| வங்கியம் | தச்சு |
| பாடவியம் | தச்சாசார்யம் |
| உடுக்கை வாசிப்பார் | தட்டான் |
| வீணை வாசிப்பார் | கண்காணி |
| ஆரியம் பாடுவார் | நந்தவனக்குடிகள் |
| தமிழ் பாடுவார் | காந்தர்வர் |
| கொட்டிமத்தளம் | திருவாய்க் கேள்வி |
| முத்திரைச் சங்கு | நாயகஞ் செய்வார் |
| பக்கவாத்தியர் | உவைச்சு |

## சோழர் காலத்து தெய்வ அணிகலன்கள்

| | |
|---|---|
| திருப்பாட்டம் | முத்தின் உழுத்து |
| பொற்பூ | வயிர உழுத்து |
| அஞ்சடுத்து விளக்கின | ரத்ந மோதிரம் |
| திரள் மணிவடம் | நவரத்ந மோதிரம் |
| திருக்கைக்காறை | பிருஷ்டகண்டிகை |
| திருப்பட்டிகை | திருவடி நிலை |
| முத்து வளையல் | கும்பத்தகடு |
| திருமுடி | திருக்கொள்கை |
| திருமாலை | கொம்பிற் கொள்கை |
| ஸ்ரீசந்தம் | திருநயநம் |
| கண்டநாண் | மக்தகத்தகடு |

| | |
|---|---|
| புல்லிகை கண்டநாண் | திரிசரம் |
| பாசமாலை | பஞ்சசரம் |
| மாணிக்கத்தாலி | ரத்ந வளையல் |
| ஸ்ரீபாஹுவலயம் | ரத்ந கடகம் |
| பதக்கம் | பட்டிகைநாண் பவழக்கடகம் |

## சோழர் காலத்துக் கோயில் பரிகலன்கள்

| | | |
|---|---|---|
| குடம் | கங்கில் | ஒட்டுவட்டில் |
| குழல் | கெண்டி | இலைத்தட்டு |
| தட்டம் | மண்டை | தவளச்சத்ரம் |
| கொடி | படிக்கம் | கண்டிகை |
| காளம் | கிடாரம் | கலசப்பானை |
| கலசம் | குறுமடல் | இலைச்செப்பு |
| வட்டில் | காளாஞ்சி | ஈச்சொப்பிகை |
| பள்ளித்தொங்கல் | தாரைத்தாள் வட்டில் | |

## சேரிகள்

மக்கள் ஒன்று சேர்ந்திருக்கும் பகுதிகள் சேரிகள் எனப்பட்டன. பறைச்சேரியும் இருந்தது, பிராமணச் சேரியும் இருந்தது. பிராமணர்களின் சதுர்வேதி மங்கலங்களில் இருந்த சேரிகள் தெய்வங்களின் பெயராலும், அரசர் அரச குடும்பத்தவர் பெயராலும் பெயரிடப்பட்டன. சில சோழர் காலச் சேரிகளின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.

1. கேசவச்சேரி
2. நாராயணச்சேரி
3. மாதவச்சேரி
4. கோவிந்தச் சேரி
5. விஷ்ணுச் சேரி
6. மதுசூதனச்சேரி
7. திருவிக்கிரமச் சேரி
8. வாமனச்சேரி
9. ரிஷிகேச்சேரி
10. ஸ்ரீதரச்சேரி
11. பத்மனாபச்சேரி
12. தாமேதரச்சேரி
13. ஸ்ரீபராந்தகச்சேரி
14. ராஜகேசரிசேரி
15. பரகேசரிசேரி
16. கோதண்டராம சேரி
17. வீரசோழச் சேரி
18. சிங்களாந்தசேரி
19. மதுராந்தகச் சேரி
20. ராஜராஜசேரி
21. மும்முடிச்சேரி
22. செம்பியன்மாதேவி சேரி
23. உத்தமசோழச்சேரி
24. சுந்தரச் சோழச் சேரி
25. குந்தவைச் சேரி
26. உலோகமாதேவி சேரி

## தொழில் அடிப்படையிலான சேரிகள்

1. பறைச்சேரி
2. கம்மாளச்சேரி
3. ஈழச்சேரி
4. தீண்டாச்சேரி
5. தளிச்சேரி
6. தலைவாய்ச்சேரி
7. வண்ணாரச்சேரி
8. அறுவை வாணியச்சேரி
9. உழப்பறையர் சேரி
10. மேல்சேரி, கீழ்சேரி

## சோழர் கால உறவுமுறைகள்

| | | |
|---|---|---|
| அம்மா | : | மாதா, தாய், அம்மை, அன்னை, தங்களாச்சி, திருவயிறு, வாய்த்தவள். |
| அப்பா | : | பிதா, அப்பன், தந்தை, தமப்பன், தகப்பன், எமப்பன் |
| மனைவி | : | மனைவி, மணாட்டி, பத்தினி, மணவாட்டி பெண்டுகள், உடையாள், அகமுடையாள். |
| கணவன் | : | அகமுடையான், கொழுநன், மணவாளன், தன்னை உடையான். |
| சகோதரன், சகோதரிகள் | : | உடன் பிறந்தான், உடன் பிறந்தாள், முன் பிறந்தான், முன் பிறந்தாள், அக்கன், தம்பி, அனுஜன், தமையன். |
| குழந்தைகள் | : | மகன், மகனார், பிள்ளை, பிள்ளையார், மகள், மகளார், புத்திரன், புத்திரி. |
| அரசியர் | : | அரசியார், தேவியார், பிராட்டியார், முழுதுமுடையார். |
| அந்தணர் மனைவி | : | சானி, பிராம்மணி, பாரியை |
| காமக்கிழத்தி | : | போகியார் |
| வளர்ப்புத்தாய் | : | தாதியார். |

## சோழர் கால உணவு

சோழர் காலக் கல்வெட்டுகளில் கோயில்களில் கடவுளுக்கு படைக்கப்பட்ட உணவு, துறவிகள் மற்றும் பிராமணர்களுக்கு வழங்கிய உணவு பற்றிய செய்திகள் உள்ளன. சாதாரண பொதுமக்கள் உண்ட உணவு பற்றிய செய்தி இல்லையெனினும் மேற்குறிப்பிட்ட செய்திகள் வாயிலாக பொதுவான உணவு வகைகளை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

பத்தெட்டுக் குத்தல், பத்தாறு குத்தல் நெல் என்று கல்வெட்டுகள் குறிப்பதின் மூலம் குத்தப்பட்டு நன்கு தீட்டிய, சுமாராகத் தீட்டிய அரிசி வகைகள் கிடைத்ததை நாம் அறியலாம். நெல் குற்றும் (குத்தும்) சாலையில்

பெண்கள் பணி செய்தமையும், ஐந்து பங்கு நெல்லுக்கு இரண்டு பங்கு அரிசி பெறமுடியும் என்பதையும் "அரிசி தூணிக்கு குற்றுவாள் கூலியுட்பட ஐந்திரண்டு வண்ணத்தால் செந்நெல் இரு தூணிப்பதக்கு" என்ற வரியால் அறியலாம்.

பழவரிசி-பழைய அரிசி, பூரிக்குத்தலரிசி, வெள்ளையரிசி போன்ற அரிசி வகைகளும் கல்வெட்டுகளில் சுட்டப்படுகின்றன. அரிசிக்கு அடுத்து, பருப்பு. பயிற்றம் பருப்பு, பச்சைப் பயறு, முளைப்பயறு என்ற பெயர்களில் கல்வெட்டுகளில் சுட்டப்படுகிறது. சர்க்கரை, அக்காரம், கண்ட சர்க்கரை, உப்பு ஆகியவையும் சொல்லப்படுகின்றன. "கறிக்கு காயம் இரு செவிடு" என்று பெருங்காயம் குறிப்பிடப்படுகிறது.

மிளகு, சீரகம், புளி ஆகியவையும் ஆங்காங்கே சொல்லப் படுகின்றன. விதைகள் நீக்கிய புளியினை "புளிப்பழவடை" என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. அக்கார அடிசில், பயிற்றுப் போனகம், கும்மாயம், புளிக்கறி, பொரிக்கறி, வெம்புழுக்கு என்ற உணவு வகைகளும் காணப்படுகின்றன. அக்கார அடிசில் என்பது அரிசி, சர்க்கரை, பருப்பு, பால், வாழைப்பழம், நெய் ஆகியவை சேர்த்து தயாரிக்கப்பட்ட இனிப்பு உணவாகும்.

கும்மாயம் என்பது பருப்பு, சர்க்கரை ஆகியவை சேர்க்கப்பட்டும் பயிற்றுப் போனகம், சர்க்கரை, அரிசி, பருப்பு ஆகியவை சேர்க்கப்பட்டும் சமைக்கப்பட்டன. அப்பம்- அரிசி, சர்க்கரை, மிளகு, நெய், சீரகம், கருவாழைப்பழம், தேங்காய் சேர்க்கப்பட்டும், திருக்கண்ணாமடை- அரிசி, சர்க்கரை, வாழைப்பழம் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டன. மேலும், திருப்பிண்டி-பிட்டு, பணியாரம் ஆகிய உணவுகளும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. 'பொறிக்கறி பொறிக்க நெய் ஒருபடி' வழங்கப்பட்டதை மற்றொரு கல்வெட்டு சொல்கிறது.

## சோழர் காலப் புலவர்களும், இலக்கியங்களும்

### பெரும் புலவர்கள்

1. நம்பியாண்டார் நம்பி : முதலாம் இராசராசன் காலம்
2. செயங்கொண்டர் : முதலாம் குலோத்துங்கன் காலம்
3. ஒட்டக்கூத்தர் : விக்கிரம சோழன்
   இரண்டாம் குலோத்துங்கன்
   இரண்டாம் இராசராசன் காலம்
4. கம்பர் : பராந்தக சோழன் காலம்

5. சேக்கிழார் : இரண்டாம் குலோத்துங்கன் காலம்

6. கருவூர்த்தேவர் : முதலாம் இராஜராஜன், இராசேந்திரன்

## பிறபுலவர்கள்

1. கண்டராதித்த சோழர்
2. திருமாளிகைத்தேவர்
3. சேந்தனார்
4. வேணாட்டடிகள்
5. திருவாலியமுதனார்
6. புருடோத்தம நம்பி
7. சேதிராயர்
8. நெற்குன்றவாணர்
9. நம்பிகாளி

## உரையாசிரியர்கள்

1. பேராசிரியர்
2. பரிமேலழகர்
3. இளம்பூரணர்
4. சேனாவரையர்
5. தெய்வச்சிலையார்
6. நச்சினார்க்கினியர்
7. அடியார்க்கு நல்லார்

## சோழர் காலத்து இலக்கியங்கள்

1. சீவக சிந்தாமணி
2. நீலகேசி
3. வளையாபதி
4. கம்பராமாயணம்
5. கலிங்கத்துப்பரணி
6. கொப்பத்துப்பரணி
7. தக்கையாகப்பரணி
8. கன்னிவன புராணம்
9. கருவூர்ப் புராணம்
10. திருத்தொண்டர் புராணம்
11. குலோத்துங்க கோவை
12. தஞ்சைவாணன் கோவை
13. திருச்சிற்றம்பலக் கோவை
14. நாலாயிரக் கோவை
15. இராசராசேச்சுர நாடகம்
16. இராசராச விசயம்
17. வீரசோழ அனுக்க விசயம்
18. மூவருலா
19. சங்கர சோழனுலா
20. சிராமலை அந்தாதி
21. திருவிசைப்பா
22. திருப்பல்லாண்டு
23. அரும்பைத் தொள்ளாயிரம்
24. ஈட்டி எழுபது
25. ஏர் எழுபது
26. கல்லாடம்
27. சிலை எழுபது
28. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
29. நளவெண்பா

இவற்றில் சிராமலை அந்தாதி திருச்சிராப்பள்ளி மேல் குடவரைக் கோயிலில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.

# கலிங்கத்துப் பரணியில் சோழர் மரபு வழி

பரணி என்பது 1000 யானைகளைப் போர்க்களத்தில் வென்ற அரசனுக்குப் பாடப்படும் பிரபந்த இலக்கிய நூல். முதலாம் குலோத்துங்கன் கலிங்கப்போரில் 1000 யானைகளை வென்றதனால் அவனது காலப் புலவரான செயங்கொண்டார் அவன் மீது கலிங்கத்துப் பரணிபாடினார். குலோத்துங்கனைச் சிறப்பாகக் குறிப்பிடுவதற்காக அவனது முன்னோர்களின் சிறப்புகளையும் இராசபாரம்பரியம் என்ற தலைப்பில் கூறுகின்றார். அவனது முன்னோர்களாக வரலாற்றுக் கால அரசர்கள், சங்க கால அரசர்கள், புராண-இதிகாசச் சிறப்புடையோர் ஆகியோரும் குறிக்கப்படுகின்றனர். திருமாலை குல முதல்வனாகக் கொண்டு, பிரம்மன், காசிபன், மரீசி, சூரியன், மனுநீதிச் சோழன், இக்குவாகு, புரந்தரன், முசுகுந்தன், சிபிச்சக்கரவர்த்தி சோழவர்மன் என்று குறிப்பிட்டு பரகேசரி, ராசகேசரி, பெருநற்கிள்ளி கோச்செங்கண்ணான் கரிகாலன் முதலியோரைக் குறிப்பிடுகின்றார். பின்னர் பிற்காலச் சோழர்களான பராந்தகன், இராசராசன், முதலாம் இராசேந்திரன், இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், இராச மகேந்திரன் ஆகியோர் குறிக்கப்பட்டு குலோத்துங்க சோழன் சிறப்பைச் சொல்கிறார்.

ஆதி மாலமல நாபிகம லத்த யனுதித்
தயன் மரீசியெனும் அண்ணலை யளித்த பரிசுங்
காதல் கூர்தரு மரீசிமக னாகி வளருங்
காசி பன்கதி ரருக்கனை யளித்த பரிசும். 9

அவ்வ ருக்கன்மக னாகிமனு மேதினி புரந்
தரிய காதலனை யாவினது கன்று நிகரென்
றெவ்வ ருக்கமும் வியப்பமுறை செய்த கதையும்
இக்கு வாகுவிவன் மைந்தனென வந்த பரிசும். 10

இக்கு வாகுவின் மகன்புதல்வ னான வுரவோன்
இகலு வோனிகலு ரஞ்செய்து புரந்த ரனெனுஞ்
சக்கு வாயிர முடைக்களிறு வாகன மெனத்
தானி ருந்துபொரு தானவரை வென்ற சயமும். 11

ஒருது றைப்புனல்சி னப்புலியு மானு முடனே
உண்ண வைத்தவுர வோனுலகில் வைத்த அருளும்
பொருது றைத்தலைபு குந்துமுசு குந்த னிமையோர்
புரம டங்கலும ரண்செய்து புரந்த புகழும். 12

கடல் கலக்கவெழு மின்னமுது தன்னை யொருவன்
கடவுள் வானவர்க ளுண்ணவருள் செய்த கதையும்
உடல்க லக்கற அரிந்துதசை யிட்டு மொருவன்
ஒருது லைப்புறவொ டொக்கநிறை புக்க புகழும். 13

சுராதி ராசன்முத லாகவரு சோழன் முனநாள்
சோழ மண்டலம மைத்தபிற கேழு லகையும்
இராச கேசரிபு ரந்துபர கேச ரிகளாம்
இருவ ராணைபுலி ஆணையென நின்ற இதுவும். 14

கால னுக்கிது வழக்கென வுரைத்த அவனும்
காவி ரிப்புனல்கொ ணர்ந்தவவ னும்பு வனியின்
மேல னைத்துயிரும் வீவதிலை யாக நமன்மேல்
வென்றி கொண்டவனு மென்றிவர்கள் கொண்ட விறலும். 15

புலியெ னக்கொடியி லிந்திரனை வைத்த அவனும்
புணரி யொன்றினிடை யொன்றுபுக விட்ட அவனும்
வலியி னிற்குருதி யுண்கென வளித்த அவனும்
வாத ராசனைவ லிந்துபணி கொண்ட அவனும். 16

தேங்கு தூங்கெயிலெ றிந்தவவ னுந்தி ரள்மணிச்
சுடர்வி மானமது வானமிசையு யர்த்த அவனும்
தாங்கள் பாரதமு டிப்பளவும் நின்று தருமன்
தன்க டற்படைத னக்குதவி செய்த அவனும். 17

தவள ழிக்குநகை வேல்விழி பிலத்தின் வழியே
தனிந டந்துரகர் தங்கண்மணி கொண்ட அவனும்
களவ ழிக்கவிதை பொய்கையுரை செய்ய உதியன்
கால்வ ழித் தளையை வெட்டியர சிட்ட அவனும். 18

*கரிகால் வளவன்*

என்று மற்றவர்கள் தங்கள்சரி தங்கள் பலவும்
எழுதி மீளவிதன் மேல்வழுதி சேரன் மடியத்
தன்ற னிக்களி றணைந்தருளி வீர மகள்தன்
தனத டங்களொடு தன்புய மணைந்த பரிசும். 19

தொழுது மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திலா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிதுமி கைக்கணென்
றிங்க ழிக்கவே அங்க ழிந்ததும். 20

தத்து நீர்வரால் குருமி வென்றதுந்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும். 21

ஒருவர் முன்னொர்நாள் தந்து பின்செலா
உதியர் மன்னரே மதுரை மன்னரென்
றிருவர் தம்மையுங் கிழிகள் சுற்றுவித்
தெரிவி ளக்குவைத் திகல்வி ளைத்ததும். 22

## *முதலாம் பராந்தகன்*

வேழமொன்றுகைத் தாலி விண்ணின் வாய் விசைய டங்கவு மசைய வென்றதும்
ஈழ முந்தமிழ்க் கூடலுஞ் சிதைத் திகல்க டந்ததோ ரிசைப ரந்ததும். 23

## *முதலாம் இராசராச சோழன்*

சதயநாள்விழா உதியர் மண்டலந் தன்னில் வைத்தவன் றனியொர் மாவின்மேல்
உதய பானுவொத் துதகை வென்றகோன் ஒருகை வாரணம் பலக வர்ந்ததும். 24

## *முதலாம் இராசேந்திர சோழன்*

களிறு கங்கைநீ ருண்ண மண்ணையிற் காய்சி னத்தொடே கலவு செம்பியன்
குளிறு தெண்டிரைக் குரைக டாரமுங் கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்.
25

## *முதலாம் இராசாதிராசன்*

கம்பி லிச்சயத் தம்பம் நட்டதுங் கடிய ரண்கொள்கல் யாணர் கட்டறக்
கிம்பு ரிப்பணைக் கிரியு கைத்தவன் கிரிக ளெட்டினும் புலிபொ றித்ததும். 26

## *இராசேந்திர சோழன்*

ஒருக ளிற்றின்மேல் வருக ளிற்றையொத்துலகு யக்கொளப் பொருது கொப்பையிற்
பொருக ளத்திலே முடிக வித்தவன் புவிக விப்பதோர் குடைக வித்ததும். 27

## *இராச மகேந்திரன்*

பனுவலுக்கு முதலாய வேத நான்கிற்
பண்டுரைத்த நெறிபுதுக்கிப் பழையர் தங்கள்
மனுவினுக்கு மும்மடிநான் மடியாஞ் சோழன்
மதிக்குடைக்கீ ழறந்தளிர்ப்ப வளர்ந்த வாறும். 28

## *முதல் குலோத்துங்கன் தோற்றம்*

குந்தளரைக் கூடற்சங் கமத்து வென்ற கோனபயன் குவலயங்காத் தளித்த பின்னை
இந்துநிலக் குலப்பாவை யிவன்பாற் சேர என்ன தவஞ் செய்திருந்தா ளென்னத் தோன்றி
29

## *வெற்றிச் சிறப்பு*

எவ்வளவு திரிபுவன முளவாய்த் தோன்றும் எவ்வளவு குலமறைக ளுளவாய் நிற்கும்
அவ்வளவு திகிரிவரை யளவுஞ் செங்கோல் ஆணைசெல்ல வபயன்காத் தளிக்கு மாறும்.
30

# விக்கிரமசோழன் உலாவில் சோழர் மரபு வழி

ஒட்டக்கூத்தர் இரண்டாம் இராசராசசோழன் காலத்தவர் அவன் தந்தை குலோத்துங்கன், பாட்டன் விக்கிரம சோழன் ஆகியோரையும் நன்கு அறிந்த சம காலத்தவர் இவர் இம்மூவர் மீதும் விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராசன் உலா என மூன்று உலாக்கள் பாடியவர். இவை மூவருலா என்று அழைக்கப்படும். விக்கிரம சோழன் உலாவில் வரும் மரபு வழி கீழே தரப்பட்டுள்ளது.

சீர்தந்த தாமரையாள் கேள்வன் றிருவுருக்
கார்தந்த வுந்திக் கமலத்துப் - பார்தந்த 1

ஆதிக் கடவுட் டிசைமுகனு மாங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனும் - மேதக்க 2

மையறு காட்சி மரீசியு மண்டிலஞ்
செய்ய தனியாழித் தேரோனும் - மையல்கூர் 3

சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோனும் - பைந்தடத் 4

தாடு துறையி லடுபுலியும்புல்வாயும்
கூடநீ ரூட்டிய கொற்றவனும் - நீடிய 5

மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்
போக பரிபுரிந்த பூபதியும் - மாகத்துக் 6

கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத்
தேற வழக்குரைத்த செம்பியனும் - மாறழிந் 7

தோடி மறலி யொளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியும் - கூடார்தம் 8

தூங்கு மெயிலெறிந்த சோழனு மேல்கடலில்
வீங்குநீர் கீழ்கடற்கு விட்டோனும் - ஆங்குப் 9

பிலமதனிற் புக்குத்தன் பேரொளியா னாகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவும் - உலகறியக் 10

காக்குஞ் சிறபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும் - மேக்குயரக் 11

கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியக்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும் - தெள்ளருவிச் 12

சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும் - இன்னருளின் 13

மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும் - மீதெலாம் 14

எண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும் - கண்கொண்ட 15

கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றம்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும் - தூதற்காப் 16

பண்டு பகலொன்றி லீரொன் பதுசுரமும்
கொண்டு மலைநாடு கொண்டோனும் - தண்டேவிக் 17

கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும் - வங்கத்தை 18

முற்று முரணடக்கி மும்மடிபோய்க் கல்யாணி
செற்ற தனியாண்மைச் சேவகனும் - பற்றலரை 19

வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமும்
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனும் - அப்பழநூல 20

பாடவரத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியால்
ஆடவரப் பாய லமைத்தோனும் - கூடல 21

சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும் - அங்கவன்பின் 22

காவல் புரிந்தவனி காந்தோனு மென்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின் - மேவலர்தம் 23

சேலைத் துரந்துசிலையைத் தடிந்திருகால்
சாலைக் களமறுத்த தண்டினான் - மேலைக் 24

கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுன் கைக்கொண்
டடல்கொண்ட மாராட் ராளை - உடலை 25

இறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி - அறத்திகிரி 26

வாரிப் புவனம் வலமாக வந்தளிக்கும்
ஆரிற் பொலிதோ ளபயற்குப் - பார்விளங்கத் 27

தோன்றியகோன் விக்கிரம சோழன்

## சோழர்கால மருத்துவமும் அறுவை சிகிச்சையும்

பிற்கால சோழர் ஆட்சிக் காலத்தில் செயல்பட்ட ஆதுல சாலைகளில் (மருத்துவமனைகள்) கைநாடி பார்த்து பொதுப்பிணி நீக்கும் பொது மருத்துவர்களும், உடற்கூறுகளை ஆராய்ந்து காயம், கட்டி, இரணம் ஆகியவற்றை அறுத்து அறுவை சிகிச்சை செய்யும் அறுவை சிகிச்சை மருத்துவர்களும் பணியாற்றியுள்ளனர். "சவர்ணன் அரையன் சந்திரசேகரன், கோதண்டராமன் அசுவதாம பட்டன்" போன்ற பொது மருத்துவர்கள் நோயாளிகளுக்கு மருந்துகளை எழுதிக் கொடுக்கும் பணியினை செய்துள்ளனர். இவர்களுக்கு ஊதியமாக 90 கலம் நெல்லும், 80 காசும் வழங்கப்பட்டுள்ளது. "சல்லியக் கிரியை பண்ணுவான்" என்ற பெயரில் அறுவை சிகிச்சை மருத்துவர்களும் பணியாற்றியுள்ளனர். இவர்களுக்கு மாத ஊதியமாக 30 கலம் நெல்லும், 2 காசும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இம்மருத்துவர்களுக்கு கொடையாக "மருத்துவக்காணி" என்ற பெயரில் நிலக்கொடையும் அளிக்கப்பட்டுள்ளது. திருமுக்கூடல் கல்வெட்டு இச்செய்திகளை விரிவாகக் கூறுகிறது.

## சோழர் காலத்தில் தண்ணீர்ப் பந்தல்கள்

சோழர் காலத்தில் பெருவழிகள் பல இருந்தன. இவ்வழிகளில் களைப்பாறுவர்களுக்காகத் தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்பட்டன. இவ்வித தண்ணீர் பந்தல்கள் திருச்செந்துறை, திருப்பாலத்துறை, செந்தலை, குமரிக்கழிக்குடி, உக்கல் ஆகிய ஊர்களில் இருந்தன. இரவிலும் பணிபுரிய பணிமக்களும், விளக்குகளும் கொடையாகக் கொடுக்கப்பட்டன. சில தண்ணீர் பந்தல்களின் பெயர்கள்

'ஜெயங்கொண்ட சோழன் தண்ணீர் பந்தல்'
'இராசராசன் தண்ணீர் பந்தல்'
'சாலைக்கிணறு தண்ணீர் பந்தல்'

பிரம்மதேயத்தில் இராசேந்திர சோழன் மற்றும் அவன் மனைவி ஆன்மா சாந்தியடைய நிறுவப்பட்ட தண்ணீர்ப்பந்தல் முன் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது.

## பெரும்பள்ளி

சிறிய லெய்டன் செப்பேட்டின் மூலம் இராசேந்திர சோழ பெரும் பள்ளி என்ற மற்றுமொரு புத்தவிகாரம் நாகையில் இருந்ததாக குறிப்பிடுகிறது. இவ்விகாரம் முதலாம் இராசேந்திரன் பெயரிலோ அல்லது முதலாம் குலோத்துங்கன் பெயராகவோ இருக்கலாம்.

## அடிமைகள்

சோழர்காலத்தில் குடிமக்கள் அடிமைப்பூண்டது கோயில்களுக்கே அதிகம். தனிப்பட்டவர்களுக்கு அடிமைப்பட்டது என்பது மிகக் குறைவே. இவர்கள் தம் குடியுரிமையை இழக்கவில்லை. சில சமயம் குடிமக்கள் தம்மை தாமே கோயில்களுக்கு அடிமைகளாக விற்றுக் கொண்டுள்ளனர்.

## சோழர் முடிசூட்டு விழாக்கள்

அரசர்கள் முடி சூட்டிக் கொள்ளும் விழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. அரசனுக்குப் புனித நீராட்டப்பட்டதால் இவை பட்டாபிஷேகம் எனப்பட்டன. அரசன் மாற்றரசர்களை வென்று தன் பொருட்டு விழா எடுத்துப் புனித நீராடி முடிசூட்டிக்கொள்வது வீராபிஷேகம் என்றும் விஜயாபிஷேகம் என்றும் அழைக்கப்பட்டன. இவ்விழாக்களின் போது பிராமணர்களுக்கு தானமாக அளிக்கப்பட்ட நிலங்கள் அபிஷேகத் தட்சணை எனப்பட்டன. இவ்விழாக்களுக்காக வசூலிக்கப்பட்ட வரி அபிஷேகக் காணிக்கை என்றழைக்கப்பட்டது.

## சோழர் கால நாட்டுப்பிரிவுகளும் ஊரமைப்புகளும்

சோழர் ஆட்சிக்கு முன்பிருந்த ஊர், நாடு, நகரம், பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் ஆகிய நாட்டுப்பிரிவுகள் சோழராட்சியிலும் இருந்தன. கூடுதலாக வளநாடுகள், மண்டலங்கள் முதலிய அமைப்புகள் உண்டாகி சோழ அரசின் நேரடி ஆட்சி எல்லா இடங்களிலும் நிர்வகிக்கப்பட்டது. விளை நிலங்கள் அடங்கிய பகுதிகள் ஊர் எனப்பட்டன. சில பல ஊர்களின் கூட்டமைப்பு நாடு எனப்பட்டது. நாடு என்பதற்கு இணையாக கூற்றம், கோட்டம், குளக்கீழ் முதலிய பெயரொட்டுகளும் நிலவின.

**நல்லூர்** என்னும் பெயரொட்டுள்ள ஊர்கள் கோயில்களுக்கு வழங்கப்பட்ட ஊர்களாக இருந்தன.

**தேவதானம்** என்ற பெயரொட்டுள்ளவை சிவன் கோயில் சார்ந்த நிலமுடைய ஊர்களாக இருந்தன.

**திருவிடையாட்டம்** என்ற ஒட்டுச் சொல்லுடையவை திருமால் கோயில் நிலமுடைய ஊர்களாக இருந்தன.

**பள்ளிச்சந்தம்** என சமண, பௌத்த நிலமுடைய ஊர்கள் அழைக்கப்பட்டன.

**பிரம்மதேயம்** என பிராமணர்களது நிலமுடைய ஊர்கள் அழைக்கப்பட்டன.

**சதுர்வேதிமங்கலம்** என்ற பெயரொட்டுள்ள ஊர்கள் வேத பிராமணர்களது ஊர்களாக விளங்கின. மேற்சொன்ன அனைத்துமே அரசு வரிவிதிப்பிலிருந்து இறையிலி என்ற வரிவிலக்குப் பெற்றவையாகும். இவை பொதுவாக நீர்வளமிக்க பகுதிகளில் அமைந்திருந்தன. காவிரி டெல்டா பிரதேசங்களில் எண்ணிக்கையில் மிகுதியாகவும் புதுக்கோட்டை போன்ற நிலவளமற்ற பகுதிகளில் சொற்பமாகவும் இருந்தன. புதிதாக உண்டாக்கப்பட்டவை என்பதால் அரசர் அரசகுலத்தவர் பெயர்கள் பெற்று திரிபுவன மாதேவிச் சதுர்வேதிமங்கலம், இராசராச சதுர்வேதிமங்கலம் என்பது போன்ற பெயர்கள் பெற்றன.

**ஊர்** என்பது விளைநிலங்கள் சூழ்ந்த பகுதிகளாகும்.

**நாடு** என்பது விளைநில ஊரமைப்புகளின் கூட்டமைப்பாகும். ஊரும் நாடும் அடிப்படையான நாட்டுப் பிரிவுகளாகும். இவை சார்ந்த நிலங்கள் வெள்ளான் வகை எனப்பட்டன. இவற்றிற்கு வரிவிதிப்பு இருந்தது. மேற்சொன்ன இறையிலி பெற்ற பிராமணர், கோயில் சார்ந்த ஊர்களிலும் வரிவிதிப்பு இருந்தது. ஆனால் அவை அரசிற்குச் செல்லாது குறிப்பிட்ட கோயில், பிராமணர் ஊர்ச் சபைகளின் பயன்பாட்டிற்குத் திருப்பி விடப்பட்டன.

**நகரம்** என்பது வணிகர்கள் வாழ்கின்ற கட்டமைப்புடைய ஊர்களாகும். இவை பொதுவாக புரம் என்ற பெயரினை பெற்றிருந்தன. நகரத்தார் நகரசபைகளின் உறுப்பினராவர்.

சோழ மண்டலத்தில் இருந்த ஏறத்தாழ 1300 ஊர்களில் 250 பிரம்மதேய ஊர்களாகவும், 50 தேவதானங்களாகவும், 25 நகரங்களாகவும், எஞ்சிய பெரும்பகுதி 975 வெள்ளான் வகை ஊர்களாகவும் அமைந்திருந்தன.

### நிர்வாக அமைப்புகள்

ஊர் நாடுகள் சார்ந்த நிர்வாக அமைப்பு மற்றும் அதன் உறுப்பினர்கள் ஊர் - ஊரார் என்றும், நாடு - நாட்டார் என்றும் அழைக்கப்பட்டன.

பிராமண ஊர்கள் சார்ந்த நிர்வாக அமைப்பு சபை என்றும், உறுப்பினர்கள் சபையார் என்றும் அழைக்கப்பட்டனர். சபையார், பெருமக்கள் என்றும், பெருங்குறிப் பெருமக்கள் என்றும் விளிக்கப்பட்டனர். சபை நிர்வாகம் வாரியங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

வணிகர்களின் நிர்வாக அமைப்பு நகரம் என்றும், உறுப்பினர்கள் நகரத்தார் என்றும் அழைக்கப்பட்டனர்.

### தனியூர்

பிராமணர்களின் சில பிரம்மதேய ஊர்கள் தனி சிறப்புப் பெற்று தன்னதிகாரத்துடன் விளங்கின. அவை தன்கூறு என்றும், தனியூர் என்றும் சுட்டப்பட்டன. தன்கூறு, எனும் தகுதியைப் பெற்ற முதல் சதுர்வேதிமங்கலம் "உத்திரமேரூர்" ஆகும். வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம் (உடையார் குடி) பெரும்பற்றப் புலியூர் (சிதம்பரம்) இராசாதிராச சதுர்வேதிமங்கலம் ஆகியவை தனியூர்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

### பிடாகை

பிராமண ஊர்களின் நிலங்களை உழும் உழுகுடிகள் தங்கிய பகுதிகள் பிடாகை எனப்பட்டன.

### பேரிளமை நாடு

பிராமண ஊர்களை ஒட்டி அமைந்த உழுகுடிகளின் பிடாகைகள் தங்களுக்குள் ஒன்று கூடி ஒருநாடு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு பேரிளமை நாட்டார் என்று அழைத்துக் கொண்டனர். அவ்விதம் ஜயங்கொண்ட சோழப் பேரிளமை நாடு, இராசாதிராச பேரிளமை நாடு, கங்கைகொண்ட சோழப் பேரிளமை நாடு என்ற பெயர்களில் பேரிளமை நாடுகளை நாம் கல்வெட்டுகளில் காணலாம்.

### சோழர் காலத்துப் பெருவழிகள்

வடுக வழி

வஞ்சிப் பெருவழி

கொங்கப் பெருவழி

தஞ்சாவூர் பெருவழி

மகதேசன் பெருவழி

அதியமான் பெருவழி

இராசகேசரிப் பெருவழி

இராசமகேந்திரப் பெருவழி

இவற்றில் இராசகேசரிப் பெருவழி, அதியமான் பெருவழி, மகதேசன் பெருவழி தொடர்பான சாலைக் கல்வெட்டுகள் இன்றும் உள்ளன.பிற பெருவழிகள் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் குறிப்புகளாக உள்ளன.

# எடுத்தாண்ட நூல்கள்


1. சோழர் வரலாறு - K.K. பிள்ளை
2. முதலாம் இராசேந்திரன் - இராச சேகரதங்கமணி
3. சோழர் சரித்திரம் - ந.மு வேங்கடசாமி நாட்டார்
4. தென்னாடு - கா. அப்பாத்துரை
5. தென்னாட்டுப் போர்க்களங்கள் - கா. அப்பாத்துரை
6. தமிழக வரலாறு - K.K. பிள்ளை
7. தமிழர் காசுகள் - நடன. காசிநாதன்
8. தடயம் - நடன. காசிநாதன்
9. பெரம்பலூர் மாவட்டத் தடயம் - நடன. காசிநாதன்
10. கரந்தை செப்பேடு - கோவிந்தராசனார்
11. சோழர் ஆட்சியில் சமண சமய வளர்ச்சி - முனைவர். ஏகாம்பரநாதன்
12. சமணத்தடயம் - நடன. காசிநாதன்
13. யாவரும் கேளீர் - இரா. நாகசாமி
14. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - சி. பத்மநாதன்
15. தமிழக துறைமுகங்கள் - முனைவர். ப.ஜெயக்குமார்
16. நிகமம் - முனைவர். அதியமான்
17. மெய்க்கீர்த்திகள் - பூ. சுப்பிரமணியன்
18. சோழர் கலைப்பாணி - S.R. பாலசுப்பிரமணியன்
19. கல்லெழுத்துக்கலை - நடன. காசிநாதன்
20. சோழகேரளன் - இல. தியாகராசன்
21. தமிழகச் செப்பேடுகள் - ச. கிருஷ்ணமூர்த்தி
22. வரலாற்றுப் நோக்கில் தென்னக சமூகம் - நோப்ரு. கரோஷிமா
23. தமிழக வரலாறும் பண்பாடும் - K.K. பிள்ளை
24. சோழர்களின் அரசியல் கலாச்சார பண்பாடு - மா. பாலசுப்பிரமணியன்
25. தஞ்சாவூர் - பாலசுப்பிரமணியன்
26. கல்லெழுத்துக்கலை - நடன காசிநாதன்
27. சோழர்காசுகள் - ஆறுமுக சீத்தாராமன்
28. கடல்வழி வணிகம் - நரசய்யா
29. வரலாற்றில் தண்ணீர்ப்பந்தல் - முனைவர். சீ. வசந்தி
30. வளமார் கொங்கு - பொள்ளாச்சி மகாலிங்கம்

31. ஓம் சக்தி தீபாவளிமலர் (2012) - பொள்ளாச்சி மகாலிங்கம்
32. ஆவணம் இதழ் 3, 6, 12, 13, 21, 22, 23, - தமிழக தொல்லியல் கழகம்
33. தமிழ்நாட்டு பெருவேந்தர் காலம் - தமிழ் வளர்ச்சித் துறை
34. சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பமும், ஓவியமும் - பாலசுப்பிரமணியன்
35. கல்வெட்டு இதழ்-14,16,18 - தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
36. இராசராசன் - முனைவர். இரா. நாகசாமி
37. தமிளிகா - முனைவர். இரா. நாகசாமி
38. அருண்மொழி - தொல்லியல் துறை வெளியீடு
39. தமிழர் நாகரீகம் - நடன. காசிநாதன்
40. இராசராசேச்சுரம் - நடன. காசிநாதன்
41. மேல்பாடி - பூ. கல்பனா
42. இராசேந்திர சோழன் அகழ்வைப்பகம் - தொல்லியல் துறை வெளியீடு
43. தொல்லியல் நோக்கில் தமிழகம் - தொல்லியல் துறை வெளியீடு
44. இராசராசன் துணுக்குகள் - முனைவர். தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இ.ஆ.ப
45. ஜீனியர் விகடன் வாரஇதழ் - எஸ். இராமகிருஷ்ணன்
46. Middle Chola Temples - S.R. Balasubramaniyam
47. The Cholas - K.A. Nilakantasastri
48. Damilika Volumes - R. Nagaswamy
49. Gangaikonda Cholapuram - R. Nagaswamy
50. Master Pieces of Chola Arts - R. Nagaswamy
51. Tamil Law & Society - R. Nagaswamy
52. The Role of Feudatories in later chola history - S. Govindaswamy
53. Chola Temples - Sivaramamurthi
54. Volume 17 - TamilNadu History Congress
55. Heritage of the Tamils - Temple Arts - S.V. Subramaniyan, G. Rajendran
56. SI I Volume II, III, XXIII - A S I
57. Journal of Epigraphica India Vol 4 :24, 5 - A S I
58. Political geography of Chola mandalam - Dr. Y. Subbarayalu
59. South India undercholas - Dr. Y. Subbarayalu
60. Kaveri - Dr. Y. Subbarayalu Felicitation Volume - Editor Dr. S. Rajagopal
61. Project Madurai - web site
62. www. wikipedia.org.

மேற்கண்ட நூல்களை பயன்படுத்த உதவிய ஆசிரியர்களுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் எம் இதயங்கனிந்த நன்றி உரித்தாகும்.

# நிழற்படங்கள்

**முன் அட்டை**


கங்கைகொண்ட சோழீச்சுவரர் தெற்குப் பக்க தேவகோட்ட ஆடவல்லான்

**பின் அட்டை**

வடக்குப் பக்க இடைநாழிகை தேவகோட்ட சண்டேச்சுவர அனுக்கிரக மூர்த்தி




கங்கைகொண்ட சோழீச்சுவரர் கோயில் சிதைந்த உட்கோபுரமும், விமானமும்.
படம்: 1




கங்கைகொண்ட சோழீச்சுவர விமான வடபுறத் தோற்றங்களும் சண்டேச்சுவரர் ஆலயமும்.
படம்: 2



கங்கைகொண்ட சோழீச்சுவரம் – தென்கயிலாயம்.
படம்: 3



உமையொருபாகனும், தேவகோட்ட சண்டேச்சுவர அனுக்கிரக மூர்த்தியும்.
படம்: 4



கலைமகளும், தேவகோட்ட காலாரி மூர்த்தியும்.
படம்: 5



பால நாட்டு விநாயகரும், சாளுக்கிய நாட்டுத் துர்க்கையும்.
படம்: 6




கங்கைகொண்ட சோழபுர சேயோன் மற்றும்
திருவெண்காடு மாதொருபாகன் செப்புத்திருமேனிகள்.
படம்: 7



கிரந்த மற்றும் நாகரி எழுத்துக்களில்
'ராஜேந்த்ர சோள' என்று பெயர் பொறித்த காசுகள்
படம்: 8




எசாலம் செப்பேடு
படம்: 9



கரந்தை, திருவாலங்காடு, எசாலம் செப்பேட்டு முத்திரைகள்

படம்: 10



கரந்தை செப்பேட்டில் தமிழ்ப்பகுதி முதல் ஏடு மற்றும்
தஞ்சைப் பெரிய கோயில் இராசேந்திரன் கல்வெட்டு

படம்: 11



தஞ்சைப் பெரிய கோயில் திரிபுராந்தகர் ஓவியம்
படம்: 12

